ஆசிரியர் உரை

# சர்வதேச சத்தியத்தின் குரல்

## THE VOICE OF TRUTH INTERNATIONAL

***Byron Nichols***

சர்வதேச சத்தியத்தின் குரல் புத்தகத்தில் அல்லது அந்தப் பெயரில் வெளிவரும் புத்தகத்தில் மூன்று காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காரியமும் நாம் கவனத்துடன் ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானவைகளே.

### சர்வதேச சத்தியத்தின் குரல்

சத்தியம் என்பது மிகச்சிறந்த ஒன்றாகும். ஆனால், அது பகிர்ந்து கொடுக்கப்பட்டு பரப்பப்படும்போது மட்டுமே மிகச்சிறந்த ஒன்றாகிறது. சத்தியமானது எப்படி வங்கிப் பெட்டகத்தில் பணம் சேர்த்து வைக்கப்படுகிறதோ அதுபோல் சேர்த்து வைக்கப்படுமானால் அதன் தன்மையை இழந்து விடுகிறது. அதன் மதிப்பு அதன் பயன்பாட்டில் தான் இருக்கிறது. சத்தியம் அறிவிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

சுவிசேஷமானது தேவனுடைய சத்தியமாயிருக்கிறது. சுவிசேஷத்தின் ஆரம்பத்திலிருந்தே அதன் மதிப்பை சீக்கிரமாகப் புரிந்து கொண்ட தைரியமான தேவ மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். எனவே தான், சுவிசேஷத்தைக் கேட்க செவி சாய்க்கும் எல்லோருக்கும் அதை அறிவிப்பது கட்டாயம் எனக் கருதினார்கள். அவர்கள் சத்தியத்தின் குரல்களாக இருந்து, இரட்சிப்பின் செய்தியை வெளியே கொண்டு செல்வதற்கு உந்தும் சக்திகளாக இருக்க வேண்டுமென்பதை அறிந்திருந்தார்கள். தங்கள் பங்கு சத்தியத்தை எடுத்துரைப்பது என்பதை அவர்களால் காண முடிந்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் தானும் மற்றவர்களும் வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்ததாக சாட்சி கொடுத்தார் (1 தெச. 2:2). மேலும், அவர் பல்வேறுப்பட்ட தடைகளை எதிர்கொண்டாலும் தான் சத்தியத்தின் குரலாக எதிரொலிக்க முடிந்தது என்று சொன்னார். அவர் பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, *" சகோதரரே எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன் "* என்று எழுதினார். (பிலிப்பியர் 1:12). பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் *"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லோருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை*

*இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன்"* என்று சொன்னார் (அப்போஸ்தலர் 20:26-27). பவுல் மற்றும் அவரைப் போன்றோர் சத்தியத்திற்கு குரல் கொடுத்தார்கள். இன்று *" கிறிஸ்துவின் சபை "* சத்தியத்திற்கு தேவனுடைய குரலாக இருக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது கட்டாயமாகிறது. சர்வதேச சத்தியத்திற்கு குரல் புத்தகம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சத்தியத்தை அறிவிக்கவும் வெளியிடவும் எடுக்கப்பட்ட அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியின் விளைவாகும்.

## சர்வதேச சத்தியத்தின் குரல்

சத்தியமானது வளைக்கக்கூடியதென்றும் உணர்வுகளின் அடிப்படை யிலான அபிப்பிராயங்களை உள்ளடக்கியதென்றும், நிச்சயமாகவே சூழ்நிலை களைப் பொறுத்ததென்றும் முடிவுக்கு வருகிற மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. இதைக் குறிப்பிடத்தக்க ஒன்றாக மாற்றுகின்ற உண்மை யென்னவென்றால், மதத் தலைவர்களும் கூட இந்தக் கருத்தோடு உடன்பட்டு அதை வேதாகம சம்மந்தமான சத்தியத்திற்குப் பயன்படுத்துவது தான்.

தேவனுடைய வார்த்தை சத்தியமாயிருக்கிறது என்பதைக் குறிப்பதற்காக எண்ணற்ற வசனங்கள் உண்டு. அவற்றுள் சில (யோவான் 8:32, யோவான் 17:17, நீதிமொழிகள் 23:23) போன்ற வசனங்களாகும். மேலும், இயேசு கிறிஸ்து வையும் சத்தியத்தையும் பிரிக்கவே முடியாது. யோவான் 1:14 *இயேசு (வார்த்தை) மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள் வாசம் பண்ணினார்* என்று விவரிக்கிறது. யோவான், இதே அதிகாரம் 17 ஆம் வசனத்தில் *"கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின"* என்று விவரிக்கிறார். இந்த சத்தியம் உண்மையானதாக, முழுமையானதாக இருக்க வில்லையென்றால் *அதற்கு எந்த மதிப்பும் இல்லை. இயேசு "சத்தியம்"* என்று சொன்னார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சத்தியம் சம்பந்தமாக உறுதியான, ஆழமான பிடிப்பு இருந்தது. அது கலாத்தியர் 2:5, 14 போன்ற வசனங்களில் வெளிப் பட்டது. அந்த வசனங்களில் அவர் சத்தியத்தை *"சுவிசேஷத்தின் சத்தியம் "*என்றும், கலாத்தியர் 3:1ல் *"புத்தியில்லாத கலாத்தியரே நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? "* என்றும் குறிப்பிடுகிறார்.

சர்வதேச சத்தியத்தின் குரல் சத்தியத்தின் குரலாயிருப்பதற்கு உறுதியாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நாங்கள் முழுமனதாக வேதவசனங்களின் முழுமைத் தன்மையையும், அது தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதையும் விசுவாசிக் கிறோம்.

அதன் பொருள், ஆரம்ப காலத்தில் தோல்சுருள்களில் எழுதப்பட்ட வேத வாக்கியங்களெல்லாம், தேவ ஆவியினால் ஏவப்பட்டு தேவன் எப்படி விரும்பி னாரோ அப்படியே எழுதப்பட்டதென்று நாங்கள் முழுமையாக விசுவாசிக்கிறோம். அவைகள் தான் இன்று அச்சடிக்கப்பட்டு புத்தகமாக நம் கைகளில் இருக்கிறது. அந்த வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய கைகளில் இருக்கிறது. அந்த

வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய மனதிலிருந்து வந்தவைகள் மனிதனிடமிருந்து வந்தவைகளல்ல; அவைகள் தவறில்லாதவைகள். அவைகள் நிச்சயமான மாறாத நித்தியமானவைகள்.

## சர்வதேச சத்தியத்தின் குரல்

இப்பத்திரிக்கை சுவிசேஷத்தின் எல்லையை விரிவாக்க உண்மையான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. வேதாகமத்திலே அநேகமாக எல்லோருக்கும் தெரிந்த வசனம் (யோவான் 3:16). *"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் "* என்பது. நாம் தேவனுடைய அன்பின் எல்லையாகிய *"உலகத்தை"* கவனிக்கத் தவற முடியாது. கிறிஸ்து இதுவரை வாழ்ந்த, இனிமேல் வாழப்போகிற எல்லா மனிதர்களுக்காகவும் மரித்தார். ஆகவேதான், இயேசு கிறிஸ்து எல்லா தேசங்களிலுமுள்ள எல்லா மனிதர்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்று கட்டளையிட்டார் (மத்தேயு 28:18-50; மாற்கு 16 : 15-16; லூக்கா 24: 46,47) இவ்வுலகத்தின் ஆவிக்குரிய வியாதிக்கு சத்தியத்தின் சுவிசேஷமே அருமருந்து ஆகும். அதற்குத் தேவனுடைய செய்தியை வெளியே எடுத்துச் செல்ல வேண்டும். ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? ஏனென்றால் *"தேவனை அறியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் "* (2தெச லோனிக்கேயா 1:7,8)

பல சகோதரர்களின் உதவியோடு சர்வதேச சத்தியத்தின் குரல் சர்வதேச அளவில் தன் எல்லையை விரிவுபடுத்தியிருக்கிறது. இப்புத்தகம் சத்தியத்தின் சுவிசேஷத்தை உலகின் 80க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறது.

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத் தானே பரிசுத்த மாக்குகிறேன்.** (யோவான் 17:17-19)

நிர்வாக ஆசிரியர் உரை

# என்னத்தைச் செலுத்துவேன்?

## What Shall I Render?

*S. Rajanayagam*

நமது தலைப்பு இடம் பெற்றுள்ள இந்த 116-ம் சங்கீதத்தின் மொழி நடையையும், குறிப்பாக " *கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்* " என்ற வசனங்களடங்கிய பகுதியையும், அதிலுள்ள வார்த்தைகளையும், அவைகளுக்கான அர்த்தங்களையும் நாம் கவனித்தால், இதன் ஆசிரியர் ஒரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதினிமித்தம் தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லிப் பாடியுள்ளார் என்று தெரிந்து கொள்ளலாம். இப்படி, ஆபத்திலிருந்து தன்னை விடுவித்த தேவனுக்கு எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாமல் தடுமாறி, தனக்குத் தானே தன் இருதயத்தோடு பேசியுள்ளார் என்பதையும் காணமுடியும்.

சரி, இப்பொழுது, சிறப்புமிக்க இச்சங்கீதத்தின் வசனங்களிலிருந்து, நமக்கு என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்த்துப் பயனடைவோம்.

### I கர்த்தர் நன்மைகளைச் செய்பவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (வ – 12)

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபகாரங்களைச் செய்கிறவராயிருக்கிறார் என்பது.

இச்சங்கீதக்காரன், வசனம் 12-ல், கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் என்று சொல்வதின் மூலம் தன் வாழ்வில் பெற்றுக் கொண்ட எல்லா நன்மைகளுக்கும் காரணம் தேவாதி தேவன் தான் என்பதை முற்றும் முடிய ஒத்துக்கொள்கிறார். இதே கருத்தை புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியரும் கூறியுள்ளார். " *நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை* " என்று (யாக். 1:17) ஆனால், இவ்வழகிய கருத்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்சங்கீதக்காரனுக்குப் புரிந்துள்ளது.

என் உழைப்பின் பலனாக இந்த உயர்வு வந்தது என்றும், என்னுடைய முயற்சியின் விளைவாக அந்த நன்மை கிடைத்தது என்றும், என்னுடைய செல்வாக்கின் காரணமாக அக்காரியம் கை கூடிற்று என்றும் தானே சொல்லுகிறோம். இன்னும், என்னுடைய அதிர்ஷ்டத்தினால் இந்த யோகம் அடித்தது என்று தானே பீற்றுகிறோம். அப்படித்தானே! ஆமாம்தானே! ஆனால், இச்சங்கீதக் காரனோ, கர்த்தர் எனக்குச் செய்த "*எல்லா உபகாரங்கள்*" என்று கூறுகிறார். ஆம்,

ஒருவேளை அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், கர்த்தர் தனக்குச் செய்ததாகவே எண்ணியுள்ளான். பக்தன் யோபு கூறுவது போல் " கர்த்தர் கொடுத்தார் " (யோபு 1:21) என்றல்லவா எண்ணியிருக்கிறான். நம்மில் எத்தனை பேர் தேவனிடத்தில் நாம் பெற்று அனுபவிக்கிற நன்மைகளுக்காக இப்படிச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்.

இங்கே, தேவன் மனிதனுக்குச் செய்திருக்கும் நன்மைகளில் மிகப்பெரிய நன்மையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. யோவான் 3:16-ம் வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். " *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவன் அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* ". ஒருவேளை, அவர் நம் வாழ்வில் செய்த மற்ற நன்மைகளை நாம் மறக்கிறவர் களாக இருந்தாலும், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்த நன்மையை யாராவது மறக்கலாமா? நிச்சயமாக மறக்கக்கூடாது. குமாரனாகிய இயேசுவுக்கும், அவரை அனுப்பின தேவனுக்கும் நாம் என்றென்றும் நன்றி யுடையவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருப்பது இப்பூமியில் பிறந்து வாழும் ஒவ்வொருவரின் கடமை. இதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.

## II. அவருக்கு எதையாவது செலுத்தவேண்டும் (வ – 12)

சங்கீதம் 116:12-13 வசனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக நாம் எதை யாகிலும் செலுத்த வேண்டுமென்பது.

சர்வ வல்ல தேவனிடத்திலிருந்து பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக் கொண்ட இச்சங்கீதக்காரன், நம்மில் அநேகரைப்போல் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு போகிறபோக்கில் ஒரு " நன்றி" சொன்னால் போதுமென்று எண்ணாமல், பெற்றுக்கொண்டவைகளுக்கு ஈடாக "அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" என்று எண்ணி மலைத்துள்ளான்!.

என்னத்தைச் செலுத்துவேன் என்று இவன் மலைத்து நின்று சொன்னது, இவன் நிலை பற்றி நமக்கு இரண்டு காரியங்களைச் சொல்லுகிறது. முதலாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாகச் செலுத்துவதற்கு என்னிடத்தில் ஒன்றுமே இல்லையே என்று குமுறுவது. இரண்டாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்குப் பதிலாக என்னிடத்தில் இருப்பதில் எதைச் செலுத்தினால் கொஞ்ச மாகிலும் கிட்ட நெருங்கும் என்று எண்ணித் தவிப்பது.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்பவைகளுக்கு ஈடாக, நாம் எதையும் ஒருபோதும் செய்துவிட முடியாது என்பது உண்மையே. ஆனாலும், நான் பெற்று அனுபவிப்பவைகளுக்காக, எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ண முடையவர்களாக இருப்பது மிகமிக அவசியம்.

அருமையானவர்களே, நாம் பார்க்கும் இந்த பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் போலவும், நம்முடைய புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, அவர்களிடத்திலிருந்து நாம்

பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருக்கிறோமா? ஒருவேளை இதுகாறும் அப்படிப்பட்ட எண்ணமில்லாதவர்களாக இருந்திருப்போமானால், சரி, போகட்டும், இனிமேலாகிலும், தேவனுக்குச் செலுத்த வேண்டியவைகளைச் செலுத்துகிறவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகர், "*இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்*" என்று நமக்குச் சொல்லியுள்ளதை நாம் கண்டிப்பாக மறக்கக் கூடாது (மத். 22:21)

### III இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும் (வ-13)

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு முக்கியமான பாடம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது.

கர்த்தர் செய்த உபகாரங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணி, அதற்கு நன்றியாக எதைச் செலுத்தினால் சரியாக இருக்குமென்று மூளையை கசக்கி பிழிந்து, எதையும் முடிவெடுக்க முடியாத நிலையில் எப்படியோ ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தான் நம் சங்கீதக்காரன். அந்த அரிய தீர்மானம் தான், *இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்வேன்* என்பது. ஆஹா! எப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! வேறு என்ன தீர்மானம் எடுத்திருந்தாலும் இதற்கு ஈடாகுமா அல்லது இணைதான் ஆகுமா? முடியவே முடியாது. சங்கீதக்காரனே, சபாஷ்! சரி இவன், மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவனாதலால், இரட்சிப்பின் பாத்திரம் என்பது, அன்றைய கால கட்டத்தில், பிரமாணங்களினடிப்படையில் தேவன் கட்டளையிட்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் மார்க்க கடமைகளைச் செய்ய தன்னை ஒப்புக் கொடுப்பது தான். ஆம், இச்சங்கீதக்காரன், பொன்னைக் கொடுக்கலாமா, பொருளைக் கொடுக்கலாமா, இதைக் கொடுக்கலாமா, அதைக் கொடுக்கலாமா என்று குழம்பிப்போய், இறுதியில் தனக்கிருக்கும் ஒரே வழி *இரட்சிப்பின் பாத்திரம்* என்று கண்டு கொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இந்தப் பழைய ஏற்பாட்டுப் பக்தன், இரட்சிப்பின் பாத்திரம் எடுப்பேன் என்று தீர்மானித்து வாழ்ந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்து, *அவனைக்காட்டிலும் மிக அதிகமான ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியம் உள்ள நாம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தர்வகளாக* நம்முடைய வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள். இச்சங்கீதத்தின் ஆசிரியர், தாவீது என்று நம்பப்படுவதாலும், அவன் ஓர் அரசனாக இருந்தானென்பது உண்மையாக இருப்பதாலும், அவனுக்கு முன்பாக வேறு பல பாத்திரங்களும் நிச்சயமாக இருந்திருக்கும். அதாவது, உலக இன்பம் என்ற பாத்திரம், உல்லாச வாழ்க்கை என்ற பாத்திரம், நாடு பிடிக்கும் ஆசை என்ற பாத்திரம், சர்வாதிகாரம் என்ற பாத்திரம் என்று பல பாத்திரங்கள் இருந்திருக்கும். ஆனால், இவனோ, பெத்தானியா கிராமத்து மரியாள் போல, "*தேவையானது ஒன்றே*" என்று தீர்மானித்து, (லூக்கா 10:42) இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொண்டான்.

எப்படி இந்த சங்கீதக்காரனை, கடுமையான சரீரச் சூழ்நிலையிலிருந்து தேவன் விடுவித்தாரோ, அதுபோலவே, நம் ஒவ்வொருவரையும் பாவத்தின் கோரப் பிடியிலிருந்து விடுவிக்கப்படும்படியான சகல காரியங்களையும் நமக்கு கூட்டி வழங்கியுள்ளார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய தேவத்துவத்துள் உள்ள மூவரும், நாம் இரட்சிக்கப்படும்படி தங்கள் பங்கை செய்துள்ளனர். ஆம், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேறான குமாரனை நமக்காகத் தந்துள்ளார் (யோவான் 3:16) குமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய உயிரையே நமக்கு தந் துள்ளார் (எபே. 5:2) பரிசுத்த ஆவியானவர் வேத வசனங்களை நமக்குக் கொடுத்துள்ளார் (யோவான் 14:26, 16:13) அப்படியானால், இதற்குக் கைம்மாறாக, நாம் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்க வேண்டியது அவசியமா?, இல்லையா? நீங்களே சொல்லுங்கள். சரீர நன்மைகளைப் பெற்ற சங்கீதக்காரனுக்கே அது அவசிய மானால், சரீர நன்மைகளையும், ஆவிக்குரிய நன்மைகளையும் ஒருங்கே பெற்ற நமக்கு அது எவ்வளவு அவசியம் என்று தயை கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, ஒருவேளை, உங்களில் யாராவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கா தவர்களாக இருந்தால், உடனடியாக நீங்கள் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். " *இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்* " என்று தேவன் பவுலடியாரைக் கொண்டு சொல்லி யுள்ளார் (II கொரி. 6:2). ஆகவே, நாம் காலம் தாழ்த்தக்கூடாது அப்படித் தாழ்த்துவது தேவ ஆலோசனைக்கு விரோதமானது.

அன்பானவர்களே, தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டவை களுக்குப் பதிலாக ஒன்றைச் செலுத்துவதற்கு இரட்சிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறெதுவுமில்லை. ஆகையால், இன்றே இந்த இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களை மன்றாடிக் கேட்கிறேன். ஆகையால், சத்தியத்தின் படி இரட்சிப்படைந்து, கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு, (அப். 2:47) நித்திய வாழ்விற்கான உத்திரவாதம் பெறுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

சபை என்பது மதகுருக்கள் சடங்காச்சாரங்களை நிறைவேற்றவும், அதை ஜனங்கள் வேடிக்கைப் பார்ப்பதற்குமான ஓர் இடமல்ல. தேவனுடைய வார்த்தையை தைரியத்தோடு கூட்டாக அறிவிக்கக்கூடிய துடிப்பும், அன்பும், நேர்மையும், அர்ப்பணிப்புமுள்ள உண்மையான விசுவாசிகள் கூடும் இடந்தான் சபை. இப்படிப்பட்ட சபைகள் எண்ணிக்கை அடிப்படையில் மிகப் பெரிய வளர்ச்சியை அடைகிறது. ஏனென்றால், கர்த்தர் தாமே இரட்சிக்கப்படு கிறவர்களை சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்போஸ்தலர் 2:47). அதே நேரத்தில் சபைகள் ஐக்கியத்திலும், அறிவிலும், முதிர்ச்சியிலும் வளர்ச்சி யடைந்து சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக பக்தி விருத்தி அடைய வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (எபேசியர் 4:12,15).

# உள்ளடக்கம்


சர்வதேச சத்தியத்தின் குரல் .................. Byron Nichols ... 1

என்னத்தைச் செலுத்துவேன்? .................. S. Rajanayagam ... 4

நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் .................. J.C. Choate ... 10

அவர்கள் எல்லாவற்றையும் விட்டு... .................. Jerry Bates ... 14

பொருள்கள்! .................. Louis Rushmore ... 17

மனோத்தத்துவமா? தேவ வல்லமையா? .................. Benny Martin ... 21

புதிய ஏற்பாட்டு சபை எது அல்ல? .................. P.C. Philemon Raja ... 24

பூரண நம்பிக்கை .................. B. Arjunan ... 26

இன்னும் எத்தனை காலம்? .................. E.Z. Selvanayagam ... 30

**தேவன்** **God**

என்னால் தாங்கிக் கொள்ள முடியாது .................. Charles R. Rose ... 33

பாடுபடும் இரட்சகர் .................. Jack W. Carter ... 35

அதுதான் என் தேவன் .................. Andy Miller ... 36

சகலவித ஆறுதலின் தேவன் .................. Randall Caselman ... 38

**தேவனுடைய வார்த்தை** **The Word of God**

முதலில் வந்தது எது? .................. Glover Shipp ... 40

இரண்டு உடன்படிக்கைகளை ஒப்பிடுதல் .................. Royce Frederick ... 45

வேதாகமத்தின் டைரி .................. Bascom Aller ... 47

**சாட்சியங்கள்** **Evidences**

என்னை அறியமாட்டோமென்கிறார்கள் .................. Rex Banks ... 49

சமுத்திரவியலும், வேதாகமும் .................. Travis L. Quertermow ... 51

**வாழ்வதற்கான உபதேசம்** **Doctrine To Live By**

மகாபெரிய நியாயத்தீர்ப்பு நாள் .................. J.C. Choate ... 52

என்னோடு சேர்ந்து சிந்தியுங்கள் .................. Hollis Miller ... 55

சிந்திப்பதற்கான ஒன்று .................. Sunny David ... 57

| | | | |
|---|---|---|---|
| **இரட்சிப்பு** | **Salvation** | | |
| மார்க்கப்பிரிவினை சபையாரின் | ................. | Cecil Willis | ... 61 |
| நம் இரட்சிப்புக்கு | ................. | Reuben Emperado | ... 64 |
| அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்? | ................. | Bob | ... 68 |
| **சபை** | **The Church** | | |
| கிறிஸ்துவுக்காக கிளர்ந்தெழுதல் | ................. | Maxie B. Boren | ... 70 |
| கிறிஸ்துவின் மணவாட்டி | ................. | Rusty Woods | ... 71 |
| சபைக்கு எவ்வளவு பயனுள்ளவனாயிருக்கிறேன் | ................. | Richard Batten | ... 73 |
| மந்தையைக் கண்காணித்தல் | ................. | Jerry Jeakins | ... 75 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | | |
| அக்கினியிலிருந்து வெளியேற்றுதல் | ..................... | J. Randal Matney | ... 78 |
| கொடுத்தலுக்குப் பலன் | ..................... | V.P. Black | ... 80 |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian Living** | | |
| எல்லாப் புத்திக்கும் மேலான | ..................... | Wayne Barrier | ... 84 |
| அபிப்ராய பேதங்கள் | ..................... | Tom Kelton | ... 86 |
| நான் மேன்மை பாராட்டுவேன் | ..................... | Tye Power | ... 88 |
| பொறாமையைக் குறித்து | ..................... | Agapio V. Catamora | ... 89 |
| இயேசு கிறிஸ்துவின் சிலுவை | ..................... | Hans Dederscheck | ... 91 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | | |
| கீழ்ப்படிதலில் பயிற்றுவித்தல் | ..................... | Betty Burton Choate | ... 93 |
| பிதாக்களே நீங்கள் | ..................... | Charles B. Burch | ... 96 |
| அந்நியன் | ..................... | Author Unknown | ... 98 |
| திறந்த மனது | ..................... | Alex Gibson | ... 101 |
| அன்பு | ..................... | Ashley Bates | ... 104 |
| கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டுதல் | ..................... | B.B. Choate | ... 107 |

# நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர்

## *You are Important to the Lord*

***J.C. Choate***

இப்பாடத்தில் நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். தேவன் மனிதனைப் படைத்தார். அவனைத் தமது சொந்த சாயலிலே படைத்தார் (ஆதி. 1:26,27,2:7). அதாவது, அவனுக்கு ஆவி, ஆத்துமா போன்ற அழியாதவற்றைத் தந்தார் (மத்தேயு 16:26) அவர் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுமையான சிலுவையில் சாகக் கொடுக்கும் அளவிற்கு அவனை நேசித்தார். (யோவா 15:13) ஏதோ ஒருவனுக்காக மாத்திரம் இதைச் செய்யாமல் எல்லா மனுக்குலத்துக்காகவும் இதைச் செய்தார். அதன் பொருள், ஒவ்வொரு மனிதனும் மிக முக்கியமானவர். இன்னும் அதன் பொருள், நீங்கள் அவருக்கு முக்கியமானவர் என்பதே.

வேதாகமத்தில் சிறப்புக்குரியவர்களாக உள்ள தனி மனிதர்களைக் கவனியுங்கள். கர்த்தர் அவர்களை உபயோகப்படுத்த அனுமதித்ததால் அவர்கள் மகத்தான மனிதர்களாக மாறினர். நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல், ஏசாயா, எலியா, எலிசா, யோவான்ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் போன்ற இன்னும் அநேகரை எண்ணிப் பாருங்கள்.

உதாரணத்திற்கு, அப்போஸ்தலன் பவுலை கவனியுங்கள். தன்னுடைய வாழ்நாட்காலத்தில் கர்த்தருக்காக அவனால் என்ன சாதிக்க முடிந்தது என்றும் பாருங்கள். கர்த்தருக்குள், அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதி என்றளவில் தன் வாழ்க்கையைத் துவக்கினான். ஆனால், அவன் மனமாற்றமடைந்த பின் கர்த்தருடைய காரியத்திற்காக மிகக் கடுமையாக வேலை செய்தான். அவன் மேற் கொண்ட சுவிசேஷப் பிரயாணங்களையும் கிறிஸ்துவினண்டையில் அவனால் வழி நடத்தப்பட்டவர்களையும் எண்ணிப் பாருங்கள். மற்ற அப்போஸ்தலர் களுடன் சேர்ந்தும் தனிப்பட்ட அளவிலும் மிகச் சிரத்தை எடுத்து ஊழியம் செய்து அநேகரை மனமாற்றம் அடையச் செய்ததால், முப்பது வருடங்களுக்குள்ளாகவே நற்செய்தி யானது, உலகெங்கிலும் எடுத்துச் செல்லப்பட்டது. ஆர்வமும், ஒப்புக்கொடுத்தலும், ஊழிய வாஞ்சையும் இருந்தால் நம்ப முடியாத அளவுக்கு நன்மைகளை மிகச் சிலரால் அல்லது தனி ஒருவரால் செய்ய முடியும்.

அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில், ஒரு மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். அந்தக் குடும்பம், கொர்நேலியுவும் அவன் குடும்பத்தாரும் தான். கொர்நேலியு

ராணுவத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நல்ல மனிதன். அவன் பக்தியுள்ளவனும், எப்போதும் தேவனை நோக்கி ஜெபம் செய்து, தான தர்மங்களைச் செய்து கொண்டிருந்த இவனை தேவன் கவனித்தார். தொடர்ந்து நாம் வாசித்தால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியான நோக்கத்தோடு பேதுரு இவன் வீட்டிற்கு வரும்படியான ஓர் ஏற்பாட்டை தேவன் செய்தார். இந்த ஏற்பாடு நடந்தேறியவுடன், காரியங்கள் இவ்விதம் நடந்ததென்று வேதாகமம் கூறுகிறது (அப். 10:44-48).

கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் மனம் மாற்றப்பட்ட இச்சம்பவத்தில் விசேஷமாக அடங்கியிருக்கிற ஒரு காரியம் என்னவென்றால், அவர்கள் புறஜாதிகளாயிருந்தார்கள். கர்த்தருக்குள்ளாக மனமாற்றப்பட்ட, முதல் புறஜாதியினர் இவர்கள்தான். அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதனின் மனமாற்றத்தை நாம் படிக்கலாம். அவன் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்குப் போயிருப்பதால் அவன் யூத மார்க்கத்தமைந்தவனாயிருக்க வேண்டும். புறஜாதியானாக இருந்த கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் அந்நாட்களில் மனமாற்றப்பட்டது கிறிஸ்துவின் காரியமாக என்ன அர்த்தம் தந்தது என்று எண்ணிப்பாருங்கள். புறஜாதியாரில் இருந்து வந்த முதல் கனி அவர்கள் தான். புறஜாதிகள் கிறிஸ்தவர்களாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும் வருவதற்கு மாதிரியாக அந்நாள் முதற்கொண்டு பேசப்பட்டு வருகிறார்களென்பதில் சந்தேகம் இல்லை. அதுமாத்திரமல்ல, அவர்கள் வழியாக வந்த எல்லா புறஜாதியாரையும் நினைத்துப்பாருங்கள். இந்நாள் வரை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறஜாதி பின்னணியிலிருந்து தான் வந்துள்ளார்கள்.

இப்பொழுது எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றத்திற்கு செல்வோம். பிலிப்பு சமாரியாவில் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் ஊழியம் செய்து கொண்டிருந்த போதிலும் வேதம் இவ்விதம் கூறுகிறது. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குப் போகிற வனாந்திர மார்க்கமாய் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து ஊருக்குத் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர் நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடன் சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதை கேட்டு நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி பிலிப்புவை, ஏறி தன்னுடனே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேத வாக்கியம் என்னவென்றால், *"அவர் ஒரு ஆட்டைப்போல் அடிப்பதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர் கத்தரிக்கிற வனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல் அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத்தாமே தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்*

*போயிற்று அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி தீர்க்கதரிசியாரைக் குறித்து இதைச் சொல்கிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவை குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி இதோ, தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடை என்ன என்றான். அதற்கு பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான் அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரை யேறின பொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியில் போனான்* " (அப் 8:26-39).

இந்த மனமாற்ற சம்பவத்தை வாசிப்பதிலிருந்து நாம் அநேக மகத்தான பாடங்களைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், இந்த இடத்தில் நாங்கள் வலியுறுத்த விரும்புவது, இந்த மனிதன் தேவனுக்கு முக்கியமானவாக இருந்துள் ளான் என்பதுதான். இவனுக்கு சத்தியம் போதிக்கப்பட்டு இவன் கர்த்தருக்குக் கீழ்ப் படியும் வாய்ப்பைப் பெறும்படியாக, கர்த்தருடைய தூதன் இவனையும் பிலிப்பையும் ஒன்று சேர்த்தார். சரி, யார் இந்த மனிதன்? இவன் மிக பக்தியுள்ளவன். யூத மார்க்கத்தின்படியாக தேவனை தொழுது கொள்வதற்கு எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணி வந்தான். அதன் பொருள், அவன் தாழ்மை யும், நேர்மையும், ஒப்புக்கொடுத்தலும் உள்ளவனாக இருந்தான். கந்தாகே என்ற இராஜ ஸ்திரீக்கு பொக்கிஷதாரியாக இருந்தபடியால் இவன் அதிகாரமுள்ள வனாகவும் இருந்தான். இப்பொழுது சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தன் தேசத்திற்குத் திரும்பி வந்து, தனிமனிதனாக இவன் தன் தேசத் தலைவர்களிடமும் குடும்ப அங்கத் தினர்களிடமும், குடிமக்களிடமும் எந்த வகையான செல்வாக்குப் பெற்றிருந் திருப்பான் என எண்ணுகிறீர்கள்? தன்னுடைய காரியமாக செயல்படும் மாபெரும் திராணியை கர்த்தர் இவனுக்குள்ளாக கண்டிருக்கக்கூடுமென்று நாம் முடிவெடுக்க வேண்டும். இந்த எத்தியோப்பியன் மற்றவர்களுக்கு கர்த்தரைக் குறித்து சொல்லுவதில் கர்த்தரை ஏமாற்றமடைய செய்துவிட்டானோ என நான் கடுமையாக சந்தேகிக்கிறேன்.

இப்பொழுது நீங்கள் யார்? ஒருவேளை, நான் ஒன்றுமில்லையென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், நீங்கள் உங்களுக்கு ஒன்றுமில்லாதிருக்கும் பொழுது, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு உங்களை ஒப்புக் கொடுக்கும் போது, அவர் உங்களை எடுத்துப் பயன்படுத்த முடியும். நீங்கள் இளைஞராக, முதியவராக, ஒரு பெண்ணாக, ஓர் ஆணாக, பணக்காரராக, ஏழையாக, படித்த வராக, படிக்காதவராக, அல்லது எப்படிப்பட்டவராகவும் இருக்கலாம். இந்நிலையில் நான் கர்த்தருக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாக இருக்க முடியாதென்று அதை ஒரு

சாக்காகப் பயன்படுத்தலாம். ஆனால், உங்கள் எண்ணம் தவறானது. வேதாகமத்தில் உள்ள ஆண்களையும், பெண்களையும் கவனியுங்கள், அவர்களைத் தேவன் எப்படி எடுத்து தனக்காகச் சிறந்த ஊழியர்களாகப் பயன்படுத்தினார் என்று பாருங்கள். அதையே ஏன் உங்களிடம் தேவன் செய்ய முடியாது? நான் சொல்ல வருவது இதுதான். நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சபையில் அங்கமானால், இன்று நீங்கள் உங்களை அவருக்குக் கொடுத்தால், அதாவது நீங்கள் அவருக்காக வேலை செய்தால், பிறகு நீங்கள் ஒரு பிரசங்கியாகவோ, வேத ஆசிரியராகவோ அல்லது அவருடைய காரியமாக ஏதாவது ஒரு வகையில் அவருக்காகப் பணியாற்றக் கூடியவராகவோ இருக்க முடியும்.

இந்தப் பாடங்களில் நாங்கள் வலியுறுத்துவது போல கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில், ஒருவேளை ஊழியத்தைத் தொடங்கும்படியாக நீங்கள் தலைமையேற்றுக் கொள்ளமுடியும். ஆம், நீங்கள் அதைச் செய்ய முடியும். கர்த்தர் உங்களோடிருந்து உங்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்துள்ளார். தயவுசெய்து இந்தக் காரியங்களை உங்கள் மனதில் நினைத்து தேவ சித்தம் உங்கள் வாழ்க்கையில் நடந்தேறும்படியாக ஜெபியுங்கள்.

## கிறிஸ்தவர்கள் செய்யக்கூடாத காரியங்கள்

1. நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடக் கூடாது (அப்போஸ்தலர் 7:26).
2. நாம் ஒருவருக்கொருவர் குற்றவாளிகளென்று தீர்க்கக் கூடாது (ரோமர் 2:1,15)
3. நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய் இறுமாப்படையக் கூடாது (1 கொரிந்தியர் 4:6).
4. நாம் ஒருவருக்கொருவர் வழக்காடக் கூடாது (1 கொரிந்தியர் 6:1)
5. நாம் ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கக் கூடாது (கலாத்தியர் 5:15).
6. ஒருவரையொருவர் கோபமூட்டக் கூடாது. ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளக் கூடாது. (கலாத்தியர் 5:26)
7. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடக் கூடாது. (யாக்கோபு 5:9)

இணை ஆசிரியர் உரை

# அவர்கள் எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள்

## THEY FORSOOK ALL AND FOLLOWED HIM

*Jerry Bates*

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகள் லூக்கா 5:11 ல் இடம் பெற்றுள்ளது. அது பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் தங்கள் மீன் பிடி படகுளை விட்டு விட்டு மனுஷர்களைப் பிடிக்கும்படி இயேசுவுக்குப் பின் சென்றது சம்மந்தமாகப் பேசுகிறது. பொருளாதாரக் கண்ணோட்டத்தில் அவர்கள் இயேசுவைப் பின்பற்ற பெரிய அளவில் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தையும், செழிப்பான தொழிலையும், பாதுகாப்பையும் விட்டு விட்டு தலைசாய்க்க இடமில்லாத மனிதனுக்குப் பின்னே சென்றார்கள் (லூக்கா 9:58). நிச்சயமாகவே, அவர்கள் மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றைத்தான் பெற்றுக் கொண்டார்கள். இயேசுவைப் பின்பற்ற அவர்களுக்கு இருந்த விசுவாசத் திற்காகவும், தைரியத்திற்காகவும் அவர்களை நிச்சயமாக நாம் மெச்ச வேண்டும்.

அவர்களுடைய முழுமனதோடு கூடிய அர்ப்பணிப்புக்காக அவர்களைப் பாராட்டும் அதே நேரத்தில், இந்த மீனவர்கள் செய்தது போல, நாம் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றும்படி இயேசு நமக்குக் கட்டளையிடவில்லையென்று நமக்கு நாமே வக்காலத்து வாங்குகிறவர்களாயிருக்கிறோம். நாம் இயேசுவுக்கு சீஷர்களாயிருக்க எல்லாவற்றையும் விட்டு அல்லது எல்லாவற்றையும் விற்று அவரைப் பின்பற்ற வேண்டுமென்று பிரத்யேகமான கட்டளை எதுவும் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்பது உண்மைதான். இப்படிப் பிரத்யேகக் கட்டளை யில்லாதபடியால், பலர் தாங்களும் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சீஷர்கள் என்று நம்பிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், கிறிஸ்து வினிடத்தில் கொஞ்சம் அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டு, அவரை விட உலகப் பிரகாரமான காரியங்களுக்கு அதிக நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இயேசு நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்? அந்த மாபெரும் மனிதர்களிடம் எதிர்பார்த்ததை விட நம்மிடம் அவர் குறைவாக எதிர்பார்க்கிறாரா? முதல் பார்வையில், அதற்கான பதில் " ஆம் " என்று நாம் நினைக்கலாம். நிச்சயமாக, கிறிஸ்து நம்மிடமிருந்து குறைவாகத்தான் எதிர்பார்ப்பார். ஏனென்றால், அவருடைய ராஜ்யத்தின் அப்போஸ்தலர்களாக இருப்பதற்கு நாம் அழைக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்து, சுவிசேஷத்தை இழந்து போன உலகிற்கு அறிவித்த போது அவரோடு போகும்படியாகவோ அல்லது அவருடைய இறுதி தியாகமாகிய

மரணத்திற்கு அவர் ஆயத்தமானபோது அவரோடு போகும்படியாகவோ நாம் கேட்டுக் கொள்ளப்படவில்லை. இருந்தபோதிலும், நாம் வேத வாக்கியங்களை மிக நெருக்கமான முறையில் ஆராய்ந்தால், அந்தக் கேள்விக்கான பதில் " இல்லை" என்று நினைக்கிறேன். அவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் எதிர்பார்த்ததை விட நம்மிடம் குறைவாக எதிர்பார்க்கவில்லை. அவரை நாம் பின்பற்ற விரும்பினால் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் போன்ற மற்ற அப்போஸ்தலர்களெல்லாரும் செய்தபடி நாமும் செய்ய வேண்டும். உதாரணமாக, லூக்கா 14:26,27 வசனங்களை கவனியுங்கள். " *யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்* ". தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்று 26 ஆம் வசனம் நம்மை, சிலுவை சுமப்பதோடு ஒப்பிட்டு நாம் செய்ய வேண்டிய தியாகத்தை வலியுறுத்திக்காட்டுகிறது. *இச்சிலுவையானது பலருக்கு கழுத்திலோ அல்லது மணிக்கட்டிலோ சிறுமைப்படுத்தப்படுதல் மற்றும் மரணம் போன்றவைகளின் அடையாளமாகக் காணப்படுகிறது.* ஆனால், அது மிகப்பெரிய தியாகத்தின் அடை யாளமாக இருந்தது. நாம் அந்த அளவுக்கு தியாகம் செய்ய விரும்பவில்லை யென்றால், நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக எண்ணப்பட முடியாது.

அதன் பிறகு இயேசு செல்லுஞ்செலவை கணக்குப் பார்ப்பதற்கான உதாரணங்களைக் கொடுக்கிறார். மேலும், அவர் அவரைப் பின்பற்றுவதில் செல்லுஞ்செலவு உட்படுத்தப்படுகிறதென்கிற உட்பொருளில் பேசினார். இயேசு ஒரு சீஷனை கோபுரத்தைக் கட்டுகிற ஒரு மனிதனோடும், யுத்தத்திற்குப் புறப்பட சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு ராஜாவோடும் ஒப்பிடுகிறார். ஒவ்வொரு காரியத் திலும், அந்த மனிதன் தன்னால் அந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க முடியுமா என்று செல்லுஞ் செலவை கணக்குப் பார்க்கிறான். அடுத்ததாக, இயேசு இந்த வசனப்பகுதியை இவ்விதமாக சுருக்கி, " *அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்றார்* ". (லூக்கா 14:33). இந்த வார்த்தைகளை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. இல்லை, நமக்கு உண்டானவை களையெல்லாம் உண்மையாகவே விற்றுவிட வேண்டியதில்லை. ஆனால், எல்லாவற்றையும் இயேசுவிடம் ஒப்புக்கொடுக்க நாம் முன்வர வேண்டும். இங்கே நமக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறதென்பதோ, நாம் ஆராதனையில் எத்தனை முறை கலந்து கொண்டிருக்கிறோம் என்பதோ அல்லது நாம் தேவனிடத்திலோ, கிறிஸ்துவினிடத் திலோ எவ்வளவாக அன்பு கூருகிறோம் என்பதோ ஒரு பொருட்டே அல்ல.

இங்கே கேள்வி என்னவென்றால், " என் வாழ்க்கையில் யார் முக்கிய மானவர்? இயேசு முதலாவதாக இருந்தால், மற்றதெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து தான் வரும் ".

நாம் கிறிஸ்துவின் சீஷர்களாயிருப்பதற்கு உண்மையாகவே நமக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்க வேண்டிய தில்லை. இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து நம் முழுமனதோடு கூடிய அர்ப்பணிப்பை நமக்குக் கட்டளையிடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் நம் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார் (ரோமர் 12:1). மேலும், பவுல் தனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினதாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணினதாகவும் சொன்னபோது இதை இன்னும் விவரமாக விளக்கினார் (பிலிப்பியர் 3:7,8). தாங்கள் கடந்த கால சாதனைகள் பற்றி இப்படிச் சொல்லக் கூடியவர்கள் குறைவு என்று தான் தெரிகிறது. இவ்வுலகத்தின் காரியங்கள் பெரும்பாலான கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் இருக்கவேண்டிய அளவுக்கு அதிகமாக முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை விட முக்கியமான ஒன்று நமக்கு எதுவும் இருக்கக்கூடாது. நாம் கர்த்தருக்கென்று குறைவாக செய்துவிட்டு சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்து ஏமாந்து விடாதீர்கள். ஆம், அவர் நம்மிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார், ஆனால், அதைவிட அதிகமாக நமக்கு வாக்குத்தத்தம் செய்கிறார், " *என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்* " என்று. (பிலிப்பியர் 4:19).

## சபை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

1. தேவனுக்கு - தன் ஒரே பேறான குமாரனை விட ... (யோவான் 3:16)
2. கிறிஸ்தவுக்கு - தன் சொந்த இரத்தத்தை விட ... (அப். 20:28)
3. ஸ்தேவனுக்கு - தன் உயிரை விட ...(அப். 6:7)
4. பவுலுக்கு - தன் பெருமைக்குரியவைகளை விட ... (2 கொரி. 11 : 22-28)
5. மத்தேயுவுக்கு - தன் தொழிலை விட ... (லூக்கா 5 :27)
6. பிலிப்புவுக்கு - தன் நேரத்தை விட ... (அப். 8 :26-40)
7. யாக்கோபுக்கு - தன் கௌரவத்தை விட ... (யாக். 1:1)
8. பேதுருவுக்கு - தன் மனோபாவித்தை விட ... (2 பேதுரு 1 :10,11)
9. யோவானுக்கு - மற்ற மகிழ்ச்சிகளை விட ... (3 யோவான் 4)
10. யூதாவுக்கு - தன் சுதந்திரத்தை விட ... (யூதா 1:1)

இணை ஆசிரியர் உரை

# பொருள்கள்!

## THINGS!

*Louis Rushmore*

V.P. Black என்பவர் வழக்கத்திற்கு மாறான நான்கு வேத பாட புத்தகங்களை எழுதினார். அவைகள் வேதாகமத்தில் இல்லாதவைகளைப் போதிப்பதினாலோ அல்லது வேதாகமத்தில் இருக்கின்ற ஏதோ ஒன்றை சிறப்பாக போதிப்பதினாலோ அவை வழக்கத்திற்கு மாறானவைகளென்று நம்மால் அழைக்கப்படுகின்றன. உண்மையைச் சொல்லப் போனால் இந்த நான்கு தலைப்புகளும் வேதாகமத்தில் வேறு எந்த தலைப்புகளையும் விட அதிகமாக போதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இப்போது பிரச்சனை என்ன? கிறிஸ்தவர்கள் கூட இந்தப் பாடத்தை பிடிக்காத ஒன்றாகக் காண்கிறபடியால், அதை முழுப்பகையாய் தவிர்க்கிறார்கள். இந்தத் தலைப்புகளை ஆராதனை வேளைகளில் அறிமுகப்படுத்தினால், அது சில கிறிஸ்தவர்களை உண்மையாகவே கடுங்கோபமடையச் செய்கிறது. இதே எண்ணத்தோடு கூடிய சிலர் அந்த வேத பாட வகுப்புகளை புறக்கணிக்கிறார்கள். இவ்வகையான மக்கள் தங்கள் உக்கிர கோபத்தை வகுப்பை நடத்துபவரிடத்திலோ அல்லது சபை பொறுப்பாளர்களிடத்திலோ வெளிப்படுத்துவதாகவோ நினைத்துக் கொள்ளலாம், ஆனால், உண்மையிலேயே அவர்கள் தங்கள் உக்கிர கோபத்தை உலக சம்பத்துக்கள் சம்மந்தமாக வேத வாக்கியங்களைக் கொடுத்த தேவனிடத்தில் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். சகோதரர் Black அவர்கள் "கர்த்தாவே, எங்களுக்கு கொடுக்கக் கற்றுத்தாரும்"; "என் தேவனும் என் பணமும்"; "கொடுத்தலும், பெற்றுக் கொள்ளுதலும்"; மற்றும் "துருவின் சாட்சி" போன்ற புத்தகங்களை எழுதி இருக்கிறார். வழக்கமாக, சபைகளில் இந்த வேதபாட புத்தகங்கள் சபைகளில் பயன்படுத்தப்படும்போது உலகச் செல்வத்தை குறித்து வேதாகமம் என்ன போதிக்கிற தென்று அறிந்து, அதை எப்படி பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அப்படிக் பெற்றுக் கொண்டவர்கள் சபைகளில் காணிக்கை பெரிய அளவில் உயர தங்கள் பங்களிப்பை சிறப்பாகச் செய்தும் இருக்கிறார்கள். மேலும், அதைத் தொடர்ந்து காணிக்கைப் பணத்தை கர்த்தருடைய பணியில் எப்படி பயன்படுத்துவதென்பதைப் பற்றியும் அப்புத்தகங்கள் வாயிலாக கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் தேவனுடைய பிழையற்ற வார்த்தையானது எந்த ஒரு பாடத்துக்கும் ஒரு முறையிலேயே தீர்வை அளித்துவிடும் வேண்டும். அப்போது தான் அது தேவனால் அங்கீகரிக்கப்பட்ட போதனையாக இருக்க முடியும். வேதாகமம் பல தலைப்புகளைப் பற்றி எண்ணற்ற முறைகள்

பேசுகிறது. நிச்சயமாகவே, தேவனுடைய பல பிரமாணங்களைக் குறித்து மனித இனத்துக்குப் பிரச்சனைகள் இருப்பது உண்மையாயிருந்தாலும் இந்த தெய்வீகக் கட்டளை அவசியமாகிறது. உலகச் செல்வத்தைப் பொறுத்த வரை மனித இனம் தேவனுடைய பிரமாணங்களின்படி செய்ய விருப்பமில்லாதிருக்கிறபடியால் தேவன் திரும்பத்திரும்ப அவைகளை வலியுறுத்துகிறார். உதாரணமாக, கர்த்தருடைய உவமைகளில் பாதி, பணத்தைப் பற்றி தான் பேசுகிறது. யாரோ ஒருவர், மத்தேயு சுவிசேஷப் புத்தகம் பத்தில் ஒரு பகுதி கொடுத்தல் என்னும் பாடத்தைப் பற்றி தான் பேசுகிறது என்று சொல்லியிருக்கிறார் (Black, என் தேவனும், என் பணமும் 17). மேலும், சகோதரர் Black கூறும்போது " மத்தேயு நற்செய்தி நூலில் கொடுத்தலைப் பற்றி முப்பத்தி மூன்று முறைகள் விவாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். மாற்கு புத்தகத்திலும் கொடுத்தலானது இருபது முறைகள் விவாதிக்கப்பட்டிருக்கிறது. லூக்கா புத்தகத்தில் கொடுத்தல் விவாதிக்கப்பட்டிருக்கிறது. பிலேமோன், 2 மற்றும் 3 யோவான், யூதா போன்றவைகள் அந்தப் புத்தகங்களாகும். மற்றெந்த பாடத்தை விட கொடுத்தலைப் பற்றி வேதாகமம் அதிகமாகப் பேசுகிறது. (சகோ. Black துருவின் சாட்சி 9).

சரி, உலகச் செல்வத்தை அதிகமாக உச்சரிக்கும் அல்லது அதைப் பற்றி அதிக வெளிப்படையாகப் பேசும் வசனப்பகுதி எது? வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளும், ஒரு தேவனுடைய பிள்ளையின் மீது உலகச் செல்வம் ஏற்படுத்தும் தவறான தாக்கம் பற்றி சரியான வசனங்களைத் திரும்ப திரும்ப மனித மனதிற்குள் அடித்துச் சொல்கிறது. உலகச் செல்வத்தை அதிகமாக மதிக்கும் மனித பலவீனத்தைக் குறித்து பிசாசுக்கு நன்றாகவே தெரியும். அவன் பழைய ஏற்பாட்டு, பக்தனாகிய யோபு செல்வ இழப்பினால் பாதிக்கப்படுவான் என்று தப்புக் கணக்குப் போட்டான். யோபு தன் ஆஸ்திகளும், பிள்ளைகள் எல்லோரும் தன்னிடமிருந்து எடுக்கப்பட்ட போதிலும் அவர் சர்வவல்லவருக்கு முன்பாகத் தன் உத்தமத்தைக் காத்துக் கொண்டார். (யோபு 1 ஆம் அதிகாரம்).


தேவனுடைய பரிசுத்த வார்த்தை முழுவதிலும் ஒன்றன் பின் ஒன்றாக உலகச் செல்வம் பற்றிய சரியான கண்ணோட்டம் நிலை நாட்டப்பட்டுள்ளது. " *அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப் பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது* " (சங்கீதம் 37:16). *சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம்* " (நீதிமொழிகள் 15:16). "*பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும், புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை!*" (நீதிமொழிகள் 16:16). "*வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்* " (பிரசங்கி 4:6).

சாலொமோனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஞானம் பிரசங்கி புத்தகத்தில் இதே கருத்தை எதிரொலிக்கிறது. " *பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே;*

பொருள் பெருக்கினால் அதைத் தின்கிற வர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக் குப் பிரயோஜனம் என்ன? வேலை செய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்கவொட்டாது. சூரியனுக்குக்கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குண்டு; அதாவது, ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண் டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்.

அந்த ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்து போகிறது. தாயின் கர்ப்பத்தி லிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன் றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை. அவன் வந்த பிரகாரமே போகிறான், இதுவும் கொடுமை யான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன? "(பிர. 5:10-16).

அதேபோல், அப்போஸ்தல னாகிய பவுலும் இதே விதமான மொழி நடையைப் பயன்படுத்தி, புதுப்பிக்கப் பட்ட புதிய ஏற்பாட்டு பயன்பாட்டைக் கொடுக்கிறார் (1 தீமோத்தேயு 6:6,10). உலக சம்பத்தை சம்பாதிப்பதும், தக்க வைத்துக் கொள்வதும், அதைப் பகிர்ந்து கொடுப்பதும் ஒருவருடைய ஆவிக்குரிய நலனில் ஆத்தும இரட்சிப்பில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இப்படிச் சொல்லப்பட்டிருக்க, செல்வச்செழிப்பு மிக்க அமெரிக்கா பல சேமிப்புக் கிடங்கு களை தன்னகத்தே கொண்டுள்ளபடி யால், உலக சம்பத்தைப் பற்றி பொதுவான மனப்பான்மையாக என்ன சொல்கிறது? மாநகரங்களில், நகரங்களில், கிராமங் களில், கிராமப்புற சமுதாயக் கூடங்களில் சேமிப்புக் கிடங்குகளை வைத்திருக் கிறார்கள். அதற்குள் ஒருவர் தனது மிதமிஞ்சிய உடைமைகளை சேமித்து வைக்க முடியும். இந்த வசதிகளை



ஒழுக்க ரீதியாக சரியென்றோ அல்லது தவறென்றோ நாம் சொல்ல முடியாது. இருந்தபோதிலும், பல தேசங்களில் இப்படிப்பட்ட சேமிப்புக்கிடங்குகள் திரளாகக் காணப்படுவதைக் காணும் போது தேவன் வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் தம்முடைய தாசர் களைக் கொண்டு எழுதச் சொன்ன காரியங்களுக்கு எதிராக உலக சம்பத்துக்களின் மீதான மனநிலை இருப்பதை நாம் காண முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (லூக்கா 12:15-21) வசனங்களில் சொல்லியிருக்கிற உவமை தங்களுக் காக சேர்த்து வைக்கும் மக்களின் மன நிலையைக் காட்டுகிறது. மறுபடியும், செல்வச் செழிப்பாக வாழ்வதிலும் தவறு ஏதுமில்லை. ஆனால், செல்வத்தோடு பொறுப்பும் கூட வருகிறது. நாம் அதை எப்படிப் பெற்றுக் கொள்கின்றோம், நாம் அதை வைத்து என்ன செய்கிறோம், செல்வத்தின் மீதான நம் மனநிலை (நாம் அதை வைத்திருந்தாலும், அதை இச்சித்தாலும்) தொடர்ச்சியாக நாம் பார்க்கும் போது நம் கர்த்தர் செல்வத்தை விமர்ச்சிக்கவில்லை. ஆனால், ஒருவரே அந்தச் செல்வத்தை அனுபவிப்பதை யும், அதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தாமல் இருப்பதையும், அதற் கெல்லாம் காரணம் தேவன் என்பதை ஒத்துக்கொள்ளாமலிருப்பதையும் ஏற்றுக்கொள்வதில்லை. நம் கர்த்தர் தம்மைப் பின்பற்றினவர்களுக்குத் தொடர்ந்து போதிக்கும்போது உலக சம்பத்துக் குறித்த கவலையைப் பற்றி மிக விவரமாக விவரிக்கிறார் (லூக்கா 12: 22-34).

நானும், மற்றவர்களும் வளர்ந்து வரும் நாடுகளில் பயணம் செய்து தனிப் பட்ட முறையில் கண்ட காரியம் என்ன வென்றால், அமெரிக்காவில் இருக்கிற வர்கள் அனுபவிக்கும் காரியங்களோடு ஒப்பிடும் போது, பொருளாதாரப் பற்றாக் குறையில் இருக்கும் வளர்ந்து வரும் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச் சியான வாழ்விற்கு, பொருளாதார பற்றாக்குறை ஒரு தடையே இல்லை என்பதாகும். அமெரிக்காவில் வாழ் பவர்கள் அவசியமென்று கருதுபவை களைச் கொஞ்சமாக உடையவர்கள் அல்லது அவைகள் முற்றிலுமாக இல்லா தவர்கள் தான் நான் சந்தித்ததிலேயே மகிழ்ச்சியானவர்கள். உலக சம்பத்து நல்லதுமல்ல, கெட்டதுமல்ல என்றாலும் கூட, பெரும்பாலும் சம்பத்து அல்லது செல்வம் தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய பார்வையை மங்கலாக்கி விடுகிறது.

"....*தரித்திரத்தையும், ஐசுவரி யத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் சொல்லாத படிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்* " (நீதிமொழிகள் 30 : 8,9).

**நாம் தேவனுடையவர்களானால் ஒழுக்க நெறிகளும், நற்பண்புகளும் நம்மால் தீர்மானிக்கப்படுவதில்லை. அவைகள் தேவனால் ஏற்படுத்தப்படுகிறது. அவைகள் நம் வாழ்க்கையை ஆளுகின்றன.**

மொழியாக்க ஆசிரியர் உரை

# மனோதத்துவமா தேவ வல்லமையா?

## PSYCHOLOGY OR POWER OF GOD?

***Benny Martin***

இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதைப் பழக்க, வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ, நண்பர்களை யோ, தெரிந்தவர்களையோ நேரில் காணும்போதோ, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதோ நலம் விசாரிக்கிறோம். பெரும்பாலும் நாம் உடல் நலனைப் பற்றித்தான் விசாரிக்கிறோம். மனநலனைப் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதற் கான அடையாளமோ, அளவுகோலோ அல்ல. ஒருவருடைய மனநலம் நன்றாக இருக்கும் போது மட்டுமே அவர் முழுமையான ஆரோக்கியமுள்ள மனிதனாக மாறுகிறார். இன்றைய நாட்களில் பலர் குடும்பச்சூழல், சுற்றுச்சூழல் மற்றும் வேலைச் சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படு கின்றனர். இச்சீர்குலைந்த சமுதாயம் இவர்களைச் சமமாக நடத்தாமல், இவர் களோடு நெருக்கமாகப் பழகாமல் வெறுக்கிறது. உடல் நலம் குன்றிவிட்டால் மருந்து, மாத்திரைகள் என பலவழிகள் உண்டு. ஆனால், மனநலம் குன்றி விட்டால் வழி என்ன? தேவன் அதற்கான வழியை வேதாகமத்தில் வைத்திருக் கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச் சிறந்த புத்தகம் வேதாகமம் தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் மனித வாழ்க்கைக்கான வழிகாட்டிப் புத்தகமாகத் திகழ்கிறது. நாம் எப்படி ஒரு வீட்டு உபயோகப் பொருளைப் பற்றிய முழுமையான விவரத்தை அறிந்து கொள்ள வழிகாட்டி புத்தகத்தை பார்க்கிறோமோ அதேபோல் நம்மைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேதாகமத்தைப் பார்க்க வேண்டும். மனித நலனுக்காக தேவன் வேதாகமத்தில் வைத்திருக்கும் காரியங்களை விட தத்துவ ஞானிகளின் கைவசம் அதிக தத்துவங்கள் இருக்கிறது என்று யாரும் பெருமைப் பாராட்ட முடியாது. அதுவும் குறிப்பாக, பிலிப்பியர் நிருபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை விட மனித நலனுக்கான வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

பவுல் இந்நிருபத்தை தனக்குப் பொருளாதார நன்மைகளைக் கொடுத் தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்துவதற்காக எழுதினார் (பிலி. 1:4,5; 4:18). அந்தச் சபையார் எப்பாப்பிரோதீத்து மூலமாக பொருளாதார உதவிகளைச் சிறையிலிருந்த பவுலுக்குக் கொடுத்தனுப்பினார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையைப் பற்றிய கூடுதல் தகவல் களையும் கொண்டு வந்தார். அந்தப் பட்டணத்து சபையார் பவுலின் சிறை வாசத்தைக் கேள்விப்பட்டு அதிகமாக கவலைப்பட்டார்கள் (1:30). பவுல் தனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று அவர் களுக்குத் தெரியப்படுத்தினதின் மூலமாக அவர்களை ஆறுதல்படுத்தினார்.

அவர்கள் தன்னைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டு விட்டு தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபட வேண்டும் என்பதற்காகப் பவுல் அவர்களை அவ்விதமாக ஆறுதல் படுத்தினார். அவர்கள் தேவ சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டிய காரியங்களை பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். இதிலிருந்து நாம், மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

## I. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும்

இது மனோரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றியுள்ளவனாயிருக்கப் பல காரணங்கள் உண்டு. நமக்காகக் கிறிஸ்து செய்த தியாகம் இவ்வுலகில் அதை விட முக்கியமான ஒன்று வேறு எதுவுமில்லை என்கிற முடிவை எடுக்க நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் பெரும்பாலும் உலகக் கவலைகளும், மனச்சோர்வுகளும் நம் மகிழ்ச்சியை மங்கச் செய்ய அனுமதித்து விடுகிறோம். இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்ச கட்டத்திற்குச் செல்லும்போது மனோதத்துவ நிபுணர்கள் அவர் சிரித்து மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே பரிசுத்த வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் நாங்கள் புதிதாக கண்டுபிடித்து விட்டோம் என்று மெச்சிக்கொள்ள ஒன்றுமில்லை.

## II. நம் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிய வேண்டும்

" *சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்* " என்று மலைப்பிரசங்கத்தில் நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார். கோபப்படுவது, எரிச்சலடைவது, பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்வதெல்லாம் உலகத்தாருடைய குணாதிசயங்கள். இவைகள் நம் சரீர உறுப்புகள் பாதிப்படையக் காரணமாகின்றன. கோபப்படுவதினால் உடலில் அழுத்தம் அதிகமாகி அது பல்வேறு நோய்களுக்கு வழி வகுக்கின்றன. கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் (பிலி. 4:11). நம் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்து அவர்கள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். நாம் எதற்கும் பதட்டப்படாமல், கோபப்படாமல் சாந்தமாக இருக்க வேண்டுமென்று தான் மனோத்தத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும், அதாவது இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்று தான்.

## III நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் இருக்க வேண்டும்

இது மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற்பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில் அழையா

விருந்தாளியாக வந்து நம்மை நிலைகுலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையானவைகள் எவை என்பது நம்மை விட தேவனுக்கு நன்றாகத் தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும் போது தேவைகளைத் தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லி யிருக்கிறார் (மத். 6:25-34). உலகக் கவலைகள் நம்மை நெருக்கும் போது தேவ காரியங்களில் நாம் திரும்பி கவனத்தைச் செலுத்துவோம். தேவ காரியங்கள் என்று வரும்போது நாம் தேவனுடைய வசனங்களை தியானிக்கலாம், நோயாளிகளைப் போய் சந்திக்கலாம், தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யலாம் இவ்விதமாக பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும் போது ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல் பாடுகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்கு கிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேத வசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனைகளைத்தான் எதிரொலிக்கிறது.

## IV நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனிடத்தில் தெரியப்படுத்த வேண்டும்.

பிரியமான வாலிபர்களே, நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம், உறவினர்களிடம் தெரிவிக்கி றோம். அதனால், தீர்வு உண்டாவதில்லை. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்க விளைவுகளை ஏற்படுத்துகிற, நம் ஆத்துமாவை அதல பாதாளத்தில் தள்ளுகின்ற தீர்வாகத்தான் இருக்கிறது. மனோதத்துவ ரீதியாக நம் கவலை களை, பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கி வைக்காமல் பிறரிடம் பகிர்ந்து கொள்வது, தெரியப்படுத்துவது பாரத்தை குறைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், யாரிடம் தெரியப்படுத்துகிறோம் என்பது முக்கியம். சில வேளைகளில் நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரிவிக்கும்போது அது மற்றுமொரு மிகப் பெரிய பிரச்சனைக்கு வழி வகுத்து விடுகிறது. எனவே தான், நாம் ஒன்றுக்குங் கவலைப் படாமல் எல்லாவற்றையுங்குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் (பிலி. 4:6). நாம் ஜெபத்தின் மூலமாக நம் பிரச்சனைகள் எல்லா வற்றையும் தேவனுக்குத் தெரியப்படுத்தும் போது நல்ல தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் பாரம் இறங்கி விடுகிறது. நவீன மனோதத்துவம் ஒருவர் தியானத்தில் ஈடுபடுவது அவருடைய மனநலத்திற்கு இன்றியாமையாதது என்று சொல்கிறது. ஆனால், மனித உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் தேவையான வைகளைத் தேவன் வேத வாக்கியங்களில் ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டார்.

இன்றைய நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாகப் பேசப்படும் விஷயமாக இருக்கிறது. மன நலத்தை மேம்படுத்த மனோதத்துவ நிபுணர்களை நோக்கி ஆட்டு மந்தையைப் போல் படையெடுத்துச் செல்லும் இந்த நாட்களில் மனித மன நலத்திற்காக, அதன் மேம்பாட்டிற்காக தேவன் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத்திருக்கின்ற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்படும். நம் ஆத்துமாவுக்கு தேவையான ஆகாரமும் தங்கு தடையின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் (III யோவான் 2).

# புதிய ஏற்பாட்டு சபை — எது அல்ல

## *WHICH IS NOT THE NEW TESTAMENT CHURCH*

*P.C. Philemon Rajah*

சபை என்றால் என்ன என்பதைப் பற்றி படிப்பதைப் போன்றே, சபை என்றால் எது அல்ல என்று படிப்பதும் மிக முக்கியமானது ஆகும். இது நிச்சயம் சபைக்கான தேவனுடைய இருதயத்தை (சிந்தையை) நமக்குள்ளே உண்டாக்க வேண்டும்.

**1. சபை என்பது நிச்சயம் மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல**

சபை என்பது உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் தன்னுடைய இருதயத்தில் திட்டமிட்டு உண்டாக்கியது. எபே 3:10-11 உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய? காண்பிக்கிறதற்கு, இந்தக்கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஏசா. 2:2-3 கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

**2. சபை என்பது நிச்சயம் குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமல்ல**

சபை என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு சொந்தமல்ல, அது உலகளாவிய இரட்சிக்கப்பட்ட மக்களின் கூட்டம். மாற்கு 16:15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். மேலும், மத். 28:18-20 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். மற்றும், அப். 2:39 வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வர வழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொன்னான்,

**3. சபை என்பது நிச்சயம் சமூக நிலையை உயர்த்துவதற்கான ஒரு ஸ்தாபனமல்ல**

❖ சபை என்பது ஒரு சமுதாயப் பணி செய்வதற்கான ஒரு நிறுவனம் அல்ல. ஏனெனில், சபை என்பது ஆவிக்குரியது மற்றும் பரலோகத்திற்குரியது. அப். 9:31 அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம்

பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயன்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.

❖ எபே 4:12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்,

**4. சபை என்பது நிச்சயம் மனிதானால் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல**

சபை என்பது பிரமாண்டமான அல்லது சிறய கட்டிடம் அல்ல; அது இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம். அப் 5:11 சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. மற்றும், எபி 10:25 சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடாமல் , ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.

மேலே உள்ள வசனங்களில் சபை என்பது, கட்டிடத்தை அல்ல, மாறாக மக்கள் கூட்டத்தையே குறிப்பதை நாம் கவனிக்க முடிகிறது.

**5. சபை என்பது நிச்சயம் பிரிவினை கூட்டமல்ல**

சபை என்பது இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ஏக மனதும் ஏக சிந்தனையுடன் ஐக்கியமாயிருந்து, தேவசித்தத்தை நிறைவேற்ற, தேவனுடைய போதனைகளை கடைபிடிக்க உண்டாக்கப்பட்ட கூட்டம். அப் 20:29-30 நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக் கிறேன். மேலும், 1 தீமோ. 4:1-3 ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணா திருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டு மென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்.

**6. சபை நிச்சயம் தனக்கு தானே சொந்த பிரமாணத்தை கொடுக்க கூடியதல்ல**

சபை தேவனுடையது, சபைக்கான சட்டதிட்டங்களை தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனும், நம்முடைய இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் கொடுத்துவிட்டார். ஆகையால், சபை தனக்கான உபதேச புத்தகத்தை தானே உண்டாக்கி கொள்ள முடியாது. எபி 2:1-2 பூர்வகாலங்களில் பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், 2.இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைக் கொடுத்து, நமக்கு வாங்கி தந்துள்ள அவருடைய சபையைக் குறித்த தெளிவு நமக்கு இல்லையெனில், நம்முடைய இரட்சிப்பும் பரலோக ஆசையும் வீணாகிவிடும். கிறிஸ்துவினுடைய சபையைக் குறித்தான அனைத்து சத்தியங்களும் புதிய ஏற்பாட்டில் உள்ளது. கவனமாக படித்து அந்த குடும்பத்தில் அங்கமாவோம்!

# பூரண நம்பிக்கை

## *HOPE FULLY*

***B. Arjunan***

நம்பிக்கை நம்முடைய வாழ்க்கையின் அச்சாணியாயிருக்கிறது. நம்பிக்கையில்லாமல் ஒருவரும் இப்பூமியில் வாழமுடியாது. பரிசுத்த வேதாகமம் பூரண நம்பிக்கையைப் பற்றி பேசுகிறது. நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர் களாயிருங்கள் என்று (1 பேது.1:13). எந்த ஒரு பொருளும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அந்த பொருள் ஏதாவது ஒரு அரையில் வைத்து பாதுகாக்க வேண்டும் அப்பொழுது தான் அந்த பொருள் பத்திரமாக இருக்கும். அதைப்போல நம்முடைய மனதின் அரை கட்டப்படவேண்டும். மனது சரியில்லையென்றால் கண்போன போக்கிலே சென்று முடிவிலே தவறான இடத்தில் நிறுத்தப்படுவோம்: சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும். நீதி யென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் என எழுதுகிறார் (எபே. 6:14). சத்தியத்தை நாம் உடுப்பாக உடுத்தும்போது சத்தியம் நம்மை பாதுகாக்கிறது. ஒரு போதும் பொய்யுரையாத தேவனோடு ஐக்கியமுள்ளவர்களாயிருக்கிறோம். வெளி வேஷம் போடுகிறவர்கள் வெள்ளை மாறாமல் வஸ்திரங்களை வைத்துக் கொண்டி ருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உள்ளமோ கொள்ளையாக இருக்கும். ஆகையால், ஆண்டவர் அப்படிப்பட்டவர்களைக் குறித்து சொல்லும் போது; வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்றார். நாம் ஒருபோதும் வேஷம் போடுகிறவர்காளாயிராதபடிக்கு சத்தியத்தை சார்ந்தவர்களாயிருப்போம்.

பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதி. 16:32). இந்த வசனத்தில் சாலொமோன் நான்கு மனிதர்களைப் பற்றி சொல்லுகிறார். ஒருவன் பலவான். இந்த பலவான் எப்படியிருப்பான் அவனுடைய பெலம் எப்படி யிருக்கும் என்பதை அறிவோம். அவன் நினைத்ததை சாதிக்கக்கூடியவனாக இருப்பான். தனக்கு நிகர் யாருமில்லையென்று அவனுடைய உள் மனது சொல்லும். தன்னுடைய பலத்தில் நம்பிக்கையுள்ளவனாயிருப்பான். இப்படிப்பட்ட பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் என்று சொல்லும்போது அதற்கு முடிவுயில்லை. அந்த அளவு பொறுமையுள்ளவர்களாயிருக்கும்போது வெற்றியடைய முடியும். மோசே பார்வோனுடைய சமுகத்தில் ஒன்பது முறை முறையிட்டான். பார்வோனோ அதிகாலமே போய் சந்திப்பான். பத்தாவது முறை மோசே பார்வோனை சந்தித்து இனி நான் உன்னை பார்க்கமாட்டேன் என்றான். ஆக பத்து முறை பார்வோனிடம் மோசே சென்று இறுதியில் வெற்றிகண்டான். நீடிய சாந்தம் என்று சொல்லும்போது

இந்த மோசேயைப்போல நீடிய சாந்தமுள்ளவர்களாயிருப்போமானல் நம்முடைய வாழ்க்கையிலும் வெற்றிகளை காணமுடியும். சிலர் ஒரு சில நாட்களிலே சோர்ந்து போய் இனி என்னால் முடியாது என்று சொல்லும்போது பெலவான் வெற்றி யடைவான். அவனை தோல்வியடைச் செய்ய நீடிய சாந்தம் அவசியமாயிருக் கிறது. இரண்டாவது பட்டணத்தை பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். ராஜாக்கள் அநேக பட்டணங்களை பிடித்தார்கள். சாலொமோன் தன் ராஜ்யத்தின் எல்லையை விரிவுபடுத்தினான். ஆனாலும், தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் என்று எழுதுகிறான். மனது அடக்கப்படும்போது சுனாமி அலைகளால் ஏற்படும் சேதங்கள் குறைக்கப்படுவது போலிருக்கும். எனவே, அன்பான சகோதரனே, சகோதரியே உன் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு தேவனுடைய செயலை கவனித்துப்பார். அப்பொழுது பூரண நம்பிக்கை உன்னில் ஏற்படும்.

வாழ்க்கையில் தெளிவு மிகவும் அவசியம். தெளிவு இல்லாவிட்டால் நம்மை முதலாவது யாரும் நம்பமாட்டார்கள். பேச்சிலும் செயலிலும் தேளிவு அவசியம். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து. விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையுர் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம் (1 தெச.5:8). ஒரு கிறிஸ்தவன் பகலுக்குரியவனாயிருக்கிறான். அவனுக்கும் இருளுக்கும் சம்பந்த மில்லை. ஆகையால் பவுல் நம்மை பகலுக்குரியவர்கள் என்கிறார். இருளுக் குரியவர்கள் இருளிலே அநேக தீமையான காரியங்களை செய்வார்கள். நல்லவர்கள் நலமான காரியங்களை பகல் வேளைகளில் செய்வார்கள். ஆகையால், பகலுக்குரியவர்களாகிய நாம் தெளிந்தவர்களாயிருக்க போதிக்கப் படுகிறோம். இப்படி தெளிவுள்ள நாம் விசுவாசம் அன்பு என்னும் மார்க்க வசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொள்ள வேண்டும். இவைகளை தரிக்காமல் நாம் பகலுக்குரியவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் ஒன்றுமில்லை. ஒருவேலைக்கு செல்லும் போது அதற்கு வேண்டிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போகிறோம். அதைப் போல ஒவ்வொரு நாளும் நாம் வீட்டை விட்டு செல்லும்போது; விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவம்சத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலை சீராவையும் தரித்துக்கொண்டு செல்லவேண்டும். டூ வீலரில் செல்பவர்கள் தலைக் கவசம் அணியவேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது. நம்மில் எத்தனைபேர் அந்த சட்டத்தை மதித்து அதை அணிந்து செல்கின்றோம். அது அவர்களுடைய தலையை பாதுகாக்கும் ஒரு கவசமாக இருக்கிறது. அதைப்போல இரட்சிப்பை ஒருவன் தலைச்சீராவைப்போல தரிக்க வேண்டியவனாயிருக்கிறான். ஆகையால் பகலுக்குரியவர்களாகிய நீங்கள் தெளிவானவர்களாக இருந்து. தெளிவானவை களை பேசுங்கள், தெளிவானவைகளைக்குறித்து சிந்தியுங்கள். முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கிய முள்ளவர்களுமாயிருக்கும்படி புத்தி சொல்லு (தீத். 2:2). முதிர் வயதில் அநேகர்

தெளிவில்லாதவர்களாக போய் விடுகிறார்கள். ஆகையால் முதிர் வயதுள்ளவர் களுக்கு புத்திசொல்லு என பவுல் தீத்துவுக்கு எழுதுகிறார். ஆம் முதிர் வயதுள்ள வர்கள் ஞாபகசக்தியை இழக்கிறார்கள். அவர்களுடைய நடபடிகள் வயதாக வயதாக மாறுபடுகிறது. இதற்கு அவர்களுடைய சரீர குறைபாடு ஒருபுறம் இருக்கிறது. ஆனால், கர்த்தருக்குள்ளானவர்கள் முதிர்வயதிலும் கனிகொடுப்பார்கள் என திருமறை நமக்குப் போதிக்கிறது. எனவே அவர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களும். தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்தி சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால், இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்களா என்றால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனக்கென்ன தெரியாதா? நான் என்ன சிறு குழந்தையா? என்று சொல்லுவார்கள். உண்மையென்ன வென்றால் தங்களில் இருக்கும் தெளிவை இழந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அவ்வப்போது புத்திமதியான வார்த்தைகளை சொல்லவேண்டியது மிகவும் அவசியம்.

1 பேதுரு. 1:13ல் பேதுரு கடைசியாக சொல்லும்போது; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்கிறார். நம்முடைய தேவன் கிருபையின் தேவன். அவர் தமது கிருபையின்படியே நமக்கு இறங்குவார். அவர் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருக்க நாம் போதிக்கப்படுகிறோம். எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நி தானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள் என்கிறார் பவுல் (1 தெச. 2:19). ஒரு ஊழியனுக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவன் வழி நடத்திக்கொண்டுவந்த ஆடுகள் தான். அவர்கள் இறுதிவரை நிலைத்திருந்து பிரதான மேய்ப்பரை எதிர் நோக்குவதே யாகும். இயேசுவானவருடைய வருகையை எதிர்பார்த்து காத்திருக் கிறோம். அவர் வரும்போது அவர் தமது கிருபையின்படியே நமக்கு இறங்குவார் என்ற பூரணநம்பிக்கையுள்ளவர்களாக இருந்து கொண்டு அவரு டைய வருகையை எதிர்நோக்குகிறோம். அன்பானவர்களே. கிருபையினாலே விசுவாசத் தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபே.2:8). கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இது அவருடைய பணியாகவும். அவரால் நமக்கு கிடைக்கக்கூடிய ஈவாகவும் இருக்கிறது. ஜீவபுத்தகத்திலே இரட்சிக்கப்படுகிறவர்களுடைய நாமங்களை எழுதி வைக்கிறார். இதை நாம் விசுவாசத்தின் மூலமாக அறிகிறோம். இரட்சிப்பு என்பது நம்முடைய கரத்தில் இல்லை. அது தேவனுடைய ஈவாக இருக்கிறது. சிலுவையில் தொங்கிய கள்ளன் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். அவனோ ஒரு கள்ளன் குற்றவாளி. அவனை கர்த்தர் மன்னித்து இன்று என்னோடுகூட பரதீசில் இருப்பாய் என்றார். இது அவருடைய ஈவு. அந்த கள்ளன் தன்னுடைய நற்காரியத்தினால் இந்த இரட்சிப்பை சம்பாதிக்கவில்லை. அவன் தான் ஒரு குற்றவாளி என்பதை ஒத்துக் கொண்டவனாக குற்றமில்லாத ஆண்டவர்

இயேசுவை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று மற்ற கள்ளனிடம் எடுத்துரைக்கிறவனாகக் காணப்பட்டான். அவனுடைய நம்பிக்கை கர்த்தர்மீது இருந்தது. அதினால் அவன் காக்கப்பட்டான்.

இச்செய்தியை வாசிக்கும் நண்பரே, இன்றைய நாளில் நாம் தியானித்த இந்த செய்தியில் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து. இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரணநம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று பேதுரு சொல்லும் ஆலோசனையை குறித்து தியானித்தோம். பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். உங்களுடைய நம்பிக்கையை கர்த்தர் மீது பூரணமாக வையுங்கள். நீங்கள் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தால் உங்களுக்கு அளிக்கப்படும் கிருபை பெரிதாக இருக்கும்.

**இந்த பூரண நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் ஒருவர் கேட்டால் என்ன சொல்லுவீர்கள்?**

பேதுரு சொல்லுகிறார்; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்கிறார் (1 பேதுரு. 3:15). ஆசிரியர் பாடம் சொல்லிக்கொடுத்தது ஒரு மாணவனுக்கு நன்கு புரிந்துவிட்டால் அவனை நடுராத்திரி எழுப்பிக் கேட்டாலும் அதை அவன் அப்படியே சரியாய் சொல்லுவான். உங்களில் கர்த்தரைப் பற்றிய நம்பிக்கை முழுமையாக இருக்குமானால்; உங்களிடத்தில் ஒருவர் இயேசுவைப் பற்றியோ அல்லது உங்களுடைய நம்பிக்கையைப் பற்றியோ கேட்கும்போது நீங்கள் அவர்களுக்கு சாந்தத்தோடு உத்தரவு சொல்ல எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக இருங்கள். இப்போது எனக்கு சமயம் இல்லையென்று ஒருபோது சொல்லக்கூடாது. யாராவது நம்மிடத்திலே கேட்கமாட்டார்களா என்ற ஆர்வத்தோடிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## நாம் சொல்வதும், தேவன் சொல்வதும்

| நாம் | தேவன் |
|---|---|
| ❖ இது என்னால் முடியாது | ❖ என்னால் எல்லாமே கூடும் |
| ❖ நான் மிகவும் சோர்வாயிருக்கிறேன் | ❖ நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் |
| ❖ என்னை யாரும் நேசிப்பதில்லை | ❖ நான் உங்களை நேசிக்கிறேன் |
| ❖ என்னால் தொடர்ந்து செயல்பட முடியவில்லை | ❖ என் கிருபை உனக்குப் போதும் |
| ❖ என்னால் காரியங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை | ❖ நான் உன் பாதையைச் செவ்வைப் படுத்துவேன் |

# இன்னும் எத்தனை காலம்...?

## Still How Long?

*E.Z. Selvanayagam*

**கி**றிஸ்தவ மார்க்கத்தில் காணப்படும் குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணமே வேதாகமத்தைப் பகுத்துப் போதிக்காதது தான் என்றால் மிகையாகாது.

பரிசுத்த வேதாகமம் இரண்டு ஏற்பாடுகளால் ஆனது. ஒன்று பழைய ஏற்பாடு; மற்றொன்று புதிய ஏற்பாடு. ஏற்பாடு என்றால் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்று பொருள். அதாவது, இரண்டு தரப்பினருக்கடையே சில காரியங்ளைச் செய்யும்படி பேசி முடிவு எடுத்து ஒப்பந்தம் செய்து கொள்வது ஆகும்.

பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது யெகோவாவாகிய தேவனுக்கும், இஸ்ரவேல் நாட்டாருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட தேசீய ஒப்பந்தம் (உபா. 5:1,3) அது இஸ்ரவேலரல்லாதவருக்குப் பொருந்தாது

ஆனால், புதிய உடன்படிக்கை என்து கிறிஸ்துவுக்கும், உலகம் எங்கிலும் உள்ள (யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடு இன்றி) ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே செய்யப்பட்டுக்கின்ற ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை. அதைக் தான் புதிய ஏற்பாடு என்கிறோம். ஏற்பாடு என்றால் என்னமோ ஏதோ என்று மலைக்க வேண்டாம்.

இந்த இரண்டு உடன்படிக்கைகளிலுமே சில நிபந்தனைகள் உண்டு. அதாவது, நீ இப்படிச் செய்தால் நான் இன்னின்னதைத் தருவேன் என்று இதுதான் நிபந்தனை என்பது.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்த வரையில் அதன் நிபந்தனை என்ன? புதிய உடன்படிக்கையின் பேதனைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே பாவ மன்னிப்பு கிடைக்கும் என்று புதிய உடன்படிக்கை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியா கூறுகிறார். மேலும், அவர் பழைய உடன்படிக்கையோடு ஒப்பிட்டு அதிலுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் பாவ மன்னிப்பு உண்டு என்றாலும் ஒருவனும் அந்த உடன்படிக்கையின் பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க இயலவில்லையாதலால் அது அருளப்படவில்லை. (அப். 13:39; ரோமர் 3:20; கலா. 2:16;3:10-12) அதாவது, பழைய உடன்படிக்கை யாருக்கும் பாவ மன்னிப்பு அளிக்கவில்லை. ஆனால், புதிய ஏற்பாடு பாவமன்னிப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. அது ஒரு வித்தியாசம் (எரே. 31:34).

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கம் வேறொரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பழைய உடன்படிக்கையின்படி தேவனுக்கும், முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை ஆபிரகாமின்

சந்ததியில் உதித்த மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆதி. 17:1-14 வரை உள்ள வசனப் பகுதியில் நான் (தேவன்) உனக்கும் உனக்குப்பின் வரும் சந்ததி யாருக்கும் தேவனாய் இருப்பேன் என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார். ஆகவே ஆபிரகாமுடைய சந்ததியர் பிறவியிலேயே, தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்குச் சொந்தக்காரராகி விடுகிறார்கள். அந்த ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதற்கு அடையாளமாக அவர் சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்வித்தார்கள். ஆனால், அப்படி விருத்தசேதனம் செய்விக்கப்பட்ட குழந்தை களுக்கு அந்த உடன்படிக்கையின் போதனைகளைப் புரிந்து கொள்ளும் ஞானம் இருக்க நியாயமில்லை. பின்னர் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது யெகோவாவையும் அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் பற்றிப் போதிக்க ப்பட்டார்கள். இது ஒரு வகையில் நம்முடைய நாட்டில் முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்த பாலிய விவாகத்தைப் (குழந்தைத் திருமணம்) போன்றது. குழந்தைகளின் விருப்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் பெற்றோர்கள் தங்கள் கருத்தைத் திணிப்பது, விளைவு என்ன? அவர்கள் அந்த உடன்படிக் கையை விபரம் தெரிந்து விருப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் நான் அவர்களுக்கு நாயகராக இருந்தும் , அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று தேவன் வருத்தப்படுகிற அளவுக்கு அவர்கள் அந்த உடன்படிக்கையை அசட்டை செய்தார்கள்.

ஆகையால், தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்தப் புதிய உடன்படிக்கையின்படி என்னுடைய (தேவன்) பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களிலே அவைகளை எழுதுவேன். நான் அவர்களின் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லோரும் என்னை அறிவார்கள் (எபி. 8:10,11) மேற்சொல்லப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்து என்ன? போதிப்பதினாலும், கற்பிப்பதினாலும் ஒரு விஷயத்தை ஒருவன் மனதிலே பதிப்பிக்க முடியும். புதிய ஏற்பாட்டின் கீழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதின் மூலம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை போதிக்கப்படுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை என்னை அறிவார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதின் கருத்து இதுதான். இங்கே ஒரு வித்தியாசத்தைக் கவனியுங்கள். பழைய உடன்படிக்கையின்படியும் மக்கள் போதிக்கப்பட்டார்கள். ஆனால், அதை ஏற்றுக்கொள்வதா? வேண்டாமா? என்கிற சுதந்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக் கையில் அந்த சுதந்தரம் உண்டு. ஒருவன் அதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியலாம் அல்லது விட்டு விடலாம். கீழ்ப்படிகிறவர்களுக்கு பாவ மனனிப்பு உண்டு; தேவனுடைய புத்திரர்கள் ஆகும் வாய்ப்பு உண்டு; கீழ்ப்படியாதவர்களுக்கு அது இல்லை, நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவளுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபி. 8:12) இந்த வாக்குத்தத்தம் யாருக்கு? புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைக் கற்று தங்கள் இருதயங்களில் விசுவாசித்துக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே. இந்தக் கருத்தை இயேசு கிறிஸ்து

தம்முடைய பிரதான கட்டளையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். "*நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். பெ விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசி யாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " (மாற்கு 16:15,16) ஒருவனுக்கு விசுவாசம் எப்படி வரும்? என்பதை விளக்க அப்போஸ்தலன் பவுல் "*விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " என்கிறார் (ரோமர் 10:17).

இரண்டு காரியங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பழைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுவதற்கு நாம் யூதரல்ல. அதாவது, ஆபிரகாமின் மாம்சீக வழித் தோன்றல்கள் அல்ல; இரண்டாவது, பழைய உடன்படிக்கை மாற்றப்பட்டு புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தாயிற்று (எபி 8:13; கொலோ 2:14).

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இன்னும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலம், கர்த்தரே பிரயோஜனமற்றது, சரிப்பட்டு வர வில்லை என்று தள்ளிப்போட்ட பிரமாணத்துக்கு நீங்கள் புத்துயிர் கொடுக்கிற பாவத்தைச் செய்கிறீர்கள் என்று உணராதிருக்கறீர்களே! அஞ்ஞானிகள் என்று நாம் வர்ணிக்கிற மக்கள் பால்யவிவாகம் நியாயமற்றது; சம்பந்தப்பட்டவர் களுடைய கருத்தைக் கேட்காமல் செய்யப்படும் காரியங்களுக்கு அவர்கள் உடன்பட வேண்டியதில்லை என்று புரிந்து கொண்டு அதைப் புறக்கணித்துப் போட்டார்கள். ஆனால் நாமோ, வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டு ஆவிக்குரிய பால்ய விவாகமான குழந்தை ஞானஸ்நானத்தை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொண்டு சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்கு அநியாயம் செய்கிறோம்; தேவனுக்கும் எதிர்த்து நிற்கிறோம்.

அப்படி அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் கிறிஸ்தவமார்க்கம் அழிந்து போகுமென்று பயப்படுகிறீர்களா? கிறிஸ்தவம் கத்தி முனையிலும், கட்டாயத்திலும் வளர்க்கப்படுவதற்கு அது ஒன்றும் செத்த மார்க்கமல்ல; அது ஜீவனும் பெலனும் உள்ளது, வளர்க்கக்கூடியது. தேவனுடைய வார்த்தைகள் இருதயங்களை நொறுக்கும் சம்மட்டி, இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது, ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் உருவக்குத்தி, பிரிக்கும் வல்லமையுடையது. அதை எடுத்து உபயோகித்து சத்துருவாகிய சாத்தானை வீழ்த்தாமல், உலுத்துப் போன கொள்கைகளை, மாய ஜால வித்தைகளை, மோடி மஸ்தான் கையாளுகிற நாலாந்தர யுத்திகளைக் கையாண்டு கிறிஸ்தவத்தை வளர்க்கவும் நிலை நிறுத்தவும் முடியும் என்று நம்புகிற உங்களுக்கு ஐயோ!

இன்னும் எத்தனை காலம் தான் கிறிஸ்து நம்முடைய மதியீனத்தையும், நிர்விசாரப் போக்கையும் பொறுத்துக் கொண்டிருப்பார்.

நண்பர்களே! தாய்க்குலமே! வாசி, சிந்தி, விரைந்து செயல்படு!


காலம் சமீபமாய் வந்து கொண்டிருக்கிறது.

தேவன்

# என்னால் இனிமேல் தாங்கிக் கொள்ள முடியாது

# "I JUST CAN'T HOLD ON ANY LONGER"

*Charles R. Rose*



இவ்வுலகத்தின் பாடுகள் நம்மைப் பாடாய்ப்படுத்தும்போது தலைநிமிர்ந்து நடப்பதென்பது சில வேளைகளில் கடினமான ஒன்றாகிவிடுகிறது. இருந்த போதிலும், ஓர் உண்மையான தேவனுடைய பிள்ளைக்கு இது நம்பிக்கையற்றவர்களுக்கு எப்படி கடினமானதாக இருக்கிறதோ அப்படி கடினமானதாக இருக்கக் கூடாது. வேதாகமம் முழுவதிலும் நம் பரமபிதா, நாம் அவர் மீதும், அவருடைய ஒரே பேறான குமாரன்மீதும் விசுவாசத்தையும், நம்பிக்கையும் வைக்கும் போது, நாம் தங்குதடையின்றி தொடர்ந்து செயல்படவும், விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும் திராணியைப் பெற்றுக்கொள்ளவும் அவர் உறுதி அளித்திருக்கிறார். கீழ்க்காணும் காரியங்களை ஆழ்ந்து சிந்திக்கவும்.

**1. தேவனுடைய கரங்கள் உங்களை உயர்த்தும்படிக்கு ஆதாரமாக இருக்கிறது :** பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்குச் சொல்லப்பட்டது போல *"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் ..."* (உபாகமம் 33:27) ஆகையால், *"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்"* (யாக்கோபு 4:10).

**2. பிதாவாகிய தேவன் அருகில் இருக்கிறார் :** அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தாருக்குச் சொல்லும்போது *"... அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம்,*

*அசைகிறோம், இருக்கிறோம் ..."* (அப் 17:27,28) என்று சொன்னார். சங்கீதக் காரன் *"உம்முடைய ஆவிக்கு மறைவாக நான் எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?"* (சங்கீதம் 139:7) என்று கேட்கிறார். மேலும், சங்கீதக்காரன் தொடர்ந்து சொல்லும்போது தேவனுடைய சமூகத்தை விட்டு மனிதன் தப்பித்துக் கொள்ளத்தக்க இடம் இப்பூமியில் இல்லை என்னும் உட்பொருளில் பேசுகிறார் (சங்கீதம் 139:8-18)

**3. குமாரனாகிய தேவன் உங்களைப் பெலப்படுத்துவார் :** உண்மை யுள்ள பவுலைப் போல், உண்மையுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனு ண்டு"* என்று சொல்ல முடியும் (பிலிப் 4:13).


**4. தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய பயங்கரமான வல்லமை யால் காக்கப்படுகிறார்கள் :** அப்போஸ்தலனாகிய பேதுரு பரலோக சுதந்திரத் தைப் பற்றிப் பேசுகிறார் (பேதுரு 1:3,4). அதன் பின்பு அவர் தேவனுடைய பிள்ளை களில் உண்மையுள்ளவர்கள் " *கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது* " என்று சொல்கிறார் ( I பேதுரு 1:5)

**5. தேவனால் உங்களை வழுவாதபடி காத்துக் கொள்ள முடியும் :** யூதா இந்த உற்சாகமூட்டும் வார்த்தைகளைக் கொடுக்கிறார், *"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சி யோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் ..."* (யூதா 24).

**6. தேவன் உங்களை விட்டு ஒரு போதும் விலகுவதில்லை :** இன்று நாமெல்லாரும் எதிர்கொள்கிற சோதனையான நேரங்களில் கூட நாம் தேவனை நம்ப முடியும். ஆகையால், *"நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்க ளுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லி இருக்கிறாரே"* (எபிரெயர் 13:5).

இனிமேல் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்கிற நிலை வரும் போது அல்லது அந்த கட்டத்தை நீங்கள் அடையும் போது இவ்வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள், *"...இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவரா லே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவ னானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானா லும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்"* (ரோமர் 8:3-39).

# பாடுபடும் இரட்சகர்
## THE SUFFERING SAVIOR
*Jack W. Canter*



இயேசுவானவர், தம்முடைய சிருஷ்டிகளுக்கு மத்தியில் வாசம் செய்ய வந்த போதே, தான் மரணத்திற்குக் நியமிக்கப்பட்டிருந்ததை அறிந்திருந் தார். இது ஆச்சரியமூட்டும், தாழ்மைப் படுத்தும் *மனித செயலாகும்.* நம்மை உருவாக்கி, அன்புடன் நம் மத்தியில் வாசம் செய்ய வந்த மாபெரும் நம்பிக்கையின் வாக்குத்தத்தமாகிய இயேசு மிகக் கொடூரமான முறையில் நமக்காக மரித்தார்.

இயேசுவுக்கு அது மிக மோசமான அனுபவமாக இருந்திருக்காது என்று நாம் முடிவுக்கு வருவது மிக எளிதாகும். ஏனென்றால், அவர் தெய்வீகத்தன்மை உடையவராக இருந்தபடியால், தெய்வீ கத்தன்மை உடையவருக்கு வலி வேத னை இருக்குமா? அவர் உண்மை யாகவே தெய்வீகத்தன்மை உடைய வராக இருந்தார், அதே நேரத்தில் அவர் முழுமையாக மனுஷீகத்தில் தான் இருந்தார். எனவே, அவர் முழு வேத னையையும் அனுபவித்தார்.

கெத்சமனே தோட்டத்துக் காட்சிகள் நம் இருதயங்களை உருக்க வேண்டும். அதாவது, அந்த அனுபவம் எளிதான ஒன்றாக இருந்திருக்குமானால் வியர்வைத் துளிகள் இரத்தத்துளிகளாக விழுந்திருக்குமா?

பாடுபட்ட இரட்சகரைப் பற்றிய மிகப்பெரிய சாட்சி அப்போஸ்தலனாகிய பேதுருவால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு, சேவல் கூவுவதற்கு முன்பு பேதுரு தம்மை மூன்று தரம் மறுதலிப்பார் என்று எச்சரித்திருந்தார். ஆனால், பேதுரு, தான் அப்படிச் செய்யப் போவதில்லையென்று சத்தியம் பண்ணி, இயேசுவுக்காக சிறைச் சாலைக்குச் செல்லவும் மரிக்கவும் ஆயத்தமாக இருப்பதாகச் சொன்னார்.

இந்த மாபெரும் மனிதனாகிய பேதுரு ஒரு கோழை என்று நம்ப நமக்கு காரணம் எதுவுமில்லை. பேதுரு இயேசுவை தனக்குத் தெரியாது என்று மறுதலித்த போது இயேசு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட வேண்டுமென்று கோழைத்தனமாக அவரைத் தெரியாது என்று சத்தியம் பண்ணவில்லை.

# அது தான் என் தேவன்!

## THATS MY GOD

*Andy miller*

**எ**த்தனை முறை நாம் ஆராதிக்கிற தேவன் எவ்வளவு பெரியவரென்று சிந்தித்துப் பார்த்திருக்கிறோம்? நம் பரபரப்பான வாழ்க்கையில் ஆண்டவரைப் பற்றி ஆழ்ந்து யோசிக்க நேரத்தை செலவழிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நம் தேவனைப்பற்றி தெளிவாக வெளிப்படுத்தி, பெருமையாக அறிவித்திருக்கிறார்கள், அவைகளை நாம் ஆழ்ந்து சிந்திக்க முடியும்.

**அவர் இரக்கமுள்ளவர் :** " *அற்ப காலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும், நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்* " (ஏசாயா 54:8).

**மன்னிக்கிறவர் :** " *அவர்கள் எனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்து, எனக்குக் விரோதமாய் துரோகம் பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்* " (எரேமியா 33:8).

**மகிமையானவர் :** " *சமுத்திரமும் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்* " (ஆபகூக் 2:14).

**பரிசுத்தமானவர் :** " *நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும், இஸ்ரவேலின் சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர்* " (ஏசாயா 43:15).

**மாறாதவர் :** " *நான் கர்த்தர், நான் மாறாதவர்* " (மல்கியா 3:6).

**நீதியுள்ளவர் :** " *கர்த்தராகிய நான் நியாயத்தை விரும்பி, கொள்ளைப் பொருளினால் இடப்பட்ட தகன பலியை வெறுக்கிறேன்; நான் அவர்கள் கிரியையை உண்மையாக்கி, அவர்களோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவேன்* " (ஏசாயா 61:8).

**நீடிய பொறுமையுள்ளவர் :** " *என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்தி வைத்தேன்; பொறுமையாயிருப்பேன்* " (ஏசாயா 48:9).

**அன்புள்ளவர் :** " *அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால், காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்* " (எரேமியா 31:3).

**சர்வ வியாபி :** " *நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். எவனாகிலும் தன்னை நான் காணாத படிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக்கூடுமே என்று கர்த்தர் சொல்லுகிறார்;*

*நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்* " (எரேமியா 23:23,24).

**சர்வ வல்லவர் :** " *நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை; என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமான வைகளையெல்லாம் செய்வேன்* " (ஏசாயா 46:9,10).

**உண்மையுள்ளவர் :** " *....நான் நீதியைப்பேசி, யதார்த்தமானவைகளை அறிவிக்கிற கர்த்தர்?* " (ஏசாயா 45:19).

# நான் சொல்லுகிறேன்

என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுவது
சொல்லுகிறபடி ஒவ்வொரு நாளும்
செய்ய முயற்சிப்பதை விட மிகவும் சுலபமானது.

தேவனுடனான என் பக்தி
உயிருள்ளதாய் இருக்கும்படி
நான் எப்போதும் நாடி முயற்சிக்கட்டும்.

வாயின் வார்த்தைகள்
வேகமாகவும், சுத்தமாகவும் வரும்.
என் வாழ்க்கை பரிசுத்தமாயிருக்கிறதா?

மற்றவர்கள் இன்னும் நினைவில்
வைத்திருப்பவைகளை திரும்ப நினைக்கிறேனா
அல்லது மறக்க விரும்புகிறேனா?

நான் சரியாக வாழ முயற்சித்தால்
என் செயல்கள்
அவைகளில் கண்டிப்பாக வெளிப்படும்.

அல்லது நான் சரியாக நடக்காவிட்டால்
என் வாழ்க்கையை மற்றவர்கள்
பரிதாபமாகப் பார்ப்பார்கள்.

*- Marthe D. Manely*

# சகலவித ஆறுதலின் தேவன்

# THE GOD OF ALL COMFORT

*Randall Caselman*

**தே**வனைப் பற்றிய உங்கள் பார்வை என்ன? தேவனைப் பற்றிய மங்கலான பார்வை நீங்கள் அன்றாடம் தேவனோடு நடப்பதைத் தடுத்துவிடும். உதாரணமாக, சிலர் தேவனை தங்கள் மனச்சாட்சியாகக் காண்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களைக் குறித்து கண்டித்து உணர்த்துகிற மெல்லிய சத்தமாக தேவனைக் காண்கிறார்கள். மற்றவர்கள் தேவனை, நம் ஆசைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்கிற கிறிஸ்துமஸ் தாத்தாவாக காண்கிறார்கள். இன்னும் சிலர் அவரை ஆகாய போலீஸ்காரராகக் காண்கிறார்கள். அவர்கள் தேவனை, மனிதன் தவறு செய்ய வேண்டுமென்று காத்திருந்து பின்பு தண்டிக்கும் ஒருவராகக் காண்கிறார்கள். தேவனைப் பற்றிய சரியான பார்வை என்ன? பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்து, தேவனை நாம் அறியும்படி செய்திருக்கிறார். இயேசு நமக்கு தேவனை காண்பிக்கும்படி வந்தார்.

**தேவனை நண்பராகக் காணுங்கள் :** சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு. நம்மை ஒருபோதும் கைவிடாத நண்பராக தேவன் இருக்கிறார். ஒரு நண்பராக, அவர் நாம் எந்த பிரச்சனைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறோமோ அவைகளை நன்றாக அறிந்திருக்கிறார். "*என் தேவனும் நானும் வயல்வெளிக்கு சேர்ந்து போகிறோம். நாங்கள் நல்ல நண்பர்கள். எப்படி நடக்கவும், பேசவும் வேண்டுமோ அப்படியே செய்கிறோம்; நாங்கள் கைகளை இறுக்கப் பிடித்துக் கொள்கிறோம்; எங்கள் குரல்கள் சிரிப்பலையாய் எதிரொலிக்கிறது, என் தேவனும் நானும் புல்வெளியில் உலாவுகிறோம்*". உண்மையாகவே, தேவன் நம் நண்பராக இருக்கிறார் என்பதை அறிவது எவ்வளவு ஆறுதலான காரியமாகும்.

**தேவன் நம் மேய்ப்பராயிருக்கிறார் :** தாவீது ராஜா தேவனை தன் வழிகாட்டியாக, ஆலோசகராக, ஆறுதல் அளிப்பவராகக் கண்டார். அவர் நம்மை போஷிப்பவர், தாங்குபவர், அவர் நம் உள்ளான மனுஷனைப் புதுப்பிக்கிறார். அவர் மரண இருளின் பள்ளத்தாக்கில் நம்மோடு வருகிறார். அவர் தம்முடைய வளங்களைக் கொண்டு நம்மைப் பராமரிக்கிறார், சுகப்படுத்துகிறார், ஒழுங்குபடுத்துகிறார், நம்மைத் தேற்றுகிறார். அவர் இந்த வாழ்க்கையிலும் நம்மை ஆசீர்வதித்து, அவரோடு என்றென்றும் வாழ்வதற்கான வீட்டையும் உண்டாக்குகிறார். ஒரு மேய்ப்பராக, அவர் நமக்கு நன்மையானவைகளை எப்போதும் தருகிறார்.

**தேவன் நம் தகப்பனாயிருக்கிறார் :** இவ்வுலகத்தை சிருஷ்டித்தவர், தாங்குபவர், பாதுகாப்பவர், போஷிப்பவர் நம் தகப்பனாயிருக்கிறார் என்பதை

அறிந்து கொள்வதினால் ஏற்படும் ஆறுதலைச் சிந்தித்துப் பாருங்கள். நம் தேவைகளை அவர் அறிந்திருக்கிறார். அவர் நம் ஜெபங்களைக் கேட்கிறார். நாம் எதைக் கேட்க வேண்டுமென்று நமக்குத் தெரியாவிட்டாலும், நமக்குத் தேவை யானவைகளை அவர் தருகிறார். ஒரு தகப்பனாக அவர் எல்லாவற்றையும் நமக்கு நன்மைக்கேதுவாக மாற்றித் தருகிறார். "*நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது*" (யாக்கோபு 1:17)

**தேவன் நம் இரட்சகராயிருக்கிறார்** : நம்மில் பலர் தேவனையும், அவருடைய கிரியையும், கடந்த கால ஒன்றாகக் கடத்தி விடுகிறோம். நாம் அவரை ஆபிரகாம், மோசே, ரூத், மரியாள், பேதுரு மற்றும் பவுல் போன்றோரின் வாழ்க்கையில் கிரியை செய்கிற ஒருவராகக் காண்கிறோம். ஆனால், நம் சொந்த ஜீவியங்களில் அவரை நிகழ்கால உண்மையாகக் காணத் தவறுகிறோம். தேவனுடைய மீட்கும் வல்லமை இன்றும் உயிரோட்டமுள்ள ஒன்றாக இருந்து கிரியை செய்கிறது. யோவான் 3:16 இன்றும் உண்மையாயிருக்கிறது.

**தேவன் ஆறுதல் செய்கிறவராயிருக்கிறார்** : நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர் களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவேர எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். எப்படி யெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்து வினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. (2 கொரி. 1:3,4,5)

## உக்கிராணத்துவ விதிகள்

1. நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள் (கலாத்தியர் 6:7)
2. கொடுக்கப்படும் ஒன்றைவிட அதைக் கொடுக்கிறவரின் மனநிலை முக்கியமானது (1 கொரிந்தியர் 9:7)
3. கொடுக்கப்பதற்கான சரியான நேரமும், வேளையும் இப்பொழுது தான் (2 கொரிந்தியர் 9:5)
4. முதலில் நம்மை நாமே காத்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (2 கொரிந்தியர்8:5)
5. இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள் (மத்தேயு 10:8)
6. தேவனுக்கு எல்லாவற்றிலும் முதற்பலனைக் கொடுங்கள் (நீதிமொழிகள் 3:9,10).


# முதலில் வந்தது எது, கிருபையா அல்லது உபதேசமா?

## Which Came First, Grace or Doctrine?

*Glover Shipp*

**நா**ன் வளர்ந்து கொண்டிருந்த காலகட்டங்களில் பிரசங்கத்திலும், போதனையிலும் உபதேசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கிருபை அரிதாகத்தான் குறிப்பிடப்பட்டது. ஏனென்றால், கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்தவ சட்ட திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உபதேசம் எப்போதுமே அவசியமாக இருந்து வருகிறபடியால், நம் முன்னோர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்ததில் எந்தத் தவறும் இல்லை. அதனால் தான் கர்த்தர் தம்முடைய கட்டளைகளுக்கும், உடன்படிக்கைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டு மென்று கட்டளையிட்டார்.

மோசேயின் மரணத்திற்கு முன்பாகக் கர்த்தர் தம்முடைய ஜனங்களை இவ்விதமாக எச்சரித்தார். இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக்



கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளை யெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள். இது உங்களுக்கு வியர்த்தமான காரியம் அல்லவே. இது உங்கள் ஜீவனமாயிருக்கிறது (உபாகமம் 32:46,47).

இது தேவனுடைய ஜனங்கள் எதிர்கொள்ளும் எல்லா சூழ்நிலைகளுக்கும் தேவையான பத்து கட்டளைகள் உட்பட பலவிதமான கட்டளைகள் கொடுக்கப்பட்ட பிறகு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது (யாத். 20-30). லேவியராகமம் (19 மற்றும் 20 அதிகாரங்கள் தனிப்பட்ட மற்றும் ஒழுக்க ரீதியிலான குறிப்பிட்ட பிரமாணங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. மோசேக்குப் பிறகு தலைமைப் பொறுப்பை ஏற்ற யோசுவாவிடம் கர்த்தர் நியாயப்பிரமாணத்தை விட்டு வலது, இடது புறம் விலகாதிருப்பாயாக என்று சொன்னார். இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக என்று யோசுவாவுக்கு கர்த்தரால் கட்டளை கொடுக்கப்பட்டது (யோவான் 1:7,8). " *சாமுவேல் தீர்க்கதரிசி, கீழ்ப்படியாத சவுல் ராஜாவைப் பார்த்து, கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?*" என்று கேட்டார்.

தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிகிறதைப் பற்றி பழைய ஏற்பாட்டிலிருந்து அதிகமாக நாம் மேற்கோள் காட்ட முடியும். சங்கீதம் 19 நமக்கு இப்படிச் சொல்கிறது.

*கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.*

*கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.*

*கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமா யிருக்கிறது*

*கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது*

*கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது*

*கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.*

*அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும் தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.*

*அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்.*

அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பயன் உண்டு.

119வது சங்கீதம் அதன் 176-ம் வசனங்களில் தேவனுடைய பிரமாணங் களின் குணாதிசயங்களை கிரமமாக விவரிக்கிறது. *அவருடைய நியாயங்கள் செம்மையானது; அவருடைய பிரமாணங்கள் நீதியுள்ளவைகளாயிருக்கிறது. எரேமியா 31:33 கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார். அவருடைய நியாயப்பிரமாணம் அவர்களுடைய இருதயத்திலும், உள்ளத்திலும் இருக்கும் என்று சொல்கிறது.*

## உபதேசம் பற்றி புதிய ஏற்பாடு

இப்போது புதிய ஏற்பாடு பிரமாணம் மற்றும் உபதேசம் பற்றி என்ன சொல்கிறது? உண்மையாகவே அதிகமாக சொல்லுகிறது!

**மத்தேயு 7:28 :** *ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்.*

**யோவான் 7:16,17 :** *இயேசுவின் உபதேசம் அவருடையதாயிராமல், பிதாவினுடையதாயிருக்கிறது.*

**அப்போஸ்தலர் 2:42 :** *அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள்.*

**ரோமர் 6:17 :** *ரோமாபுரி சபை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தது.*

**1 தீமோ 4:13 :** *தீமோத்தேயுக்குச் உபதேசத்தில் ஜாக்கிரதையாயிருக்கும்படி சொல்லப்பட்டது.*

**மத்தேயு 7:28 :** *ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்.*

**யோவான் 7:16,17 :** *இயேசுவின் உபதேசம் அவருடையதாயிராமல், பிதாவினுடையதாயிருக்கிறது.*

**அப்போஸ்தலர் 2:42 :** *அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில், உறுதியாய் தரித்திருந்தார்கள்.*

**ரோமர் 6:17 :** *ரோமாபுரி சபை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தது.*

**1 தீமோத்தேயு 4:13 :** *தீமோத்தேயு உபதேசத்தில் ஜாக்கிரதையாயிருக்கும்படி சொல்லப்பட்டது.*

**2 தீமோத்தேயு 3:16,17 :** *வேதவாக்கியங்களெல்லாம் உபதேசத்துக்கு பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

**2 தீமோத்தேயு 4:2 :** *எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் புத்தி சொல்லும்படி கட்டளையிடப்பட்டது.*

**தீத்து. 2:1 :** *தீத்து ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசும்படியாக கட்டளையிடப்பட்டிருந்தார்.*

**2 யோவான் 9 :** *கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன்.*

*இதுவே எல்லாம் அல்ல, எவ்விதத்திலாவது நாம் விசுவாசிக்கின்ற, நடைமுறைப்படுத்துகிற எல்லாவற்றிலும் ஆரோக்கியமான உபதேசத்தின் முழுமையான தேவையை அடையாளப்படுத்த இது போதுமானதாக இருக்க வேண்டும்.*

### கிருபை, காசின் மறுபக்கம்

உபதேசத்திற்கு கீழ்ப்படிவது மாத்திரமே போதுமானதல்ல, அதேபோல, கிரியைகளும் போதுமானதல்ல. எந்த ஒரு மனிதனும் மிக நுணுக்கமான முறையில் உபதேசத்தைக் கைக்கொள்வதினாலோ அல்லது நற்கிரியைகள் செய்வதினாலோ பரலோகத்துக்குப் போய்விட முடியாது. தாய் பரலோகத்தில் தனக்கென ஓர் இடத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக நித்திய ஜீவனை சுதந்தரிக்க நம்மில் யாரும் நாமாகவே தகுதி பெற முடியாது என்பதை அவர் ஒரு போதும் உணரவில்லை.

எனவே, இங்கே நம்மை பரலோகத்திற்கு உயர்த்துவதற்கு அவசியமானது எது? கிருபையே ஒரு வயதான பிரசங்கியார் ஒருமுறை சுருக்கமாக, அதே நேரத்தில் நினைவில் நிற்கத்தக்கதான ஒரு பிரசங்கத்தில் நமக்கு மூன்று காரியங்கள் தான் தேவை என்று சொன்னார். நமக்கு தேவனுடைய தயவு தேவை. அதுதான் கிருபை. நமக்கு சம்பத்து தேவை, அதுதான் உலகப் பொருள்கள். அடுத்ததாக, கர்த்தரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் எல்லாவற்றிற்காகவும் நமக்குத் தேவை நன்றியுணர்வு. நாம் கிருபை சம்மந்தமாக அதிக அக்கறையுள்ள வர்களாயிருப்பது சரிதான். ஏனென்றால், வேதாகமம் அதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறது. கிருபை பற்றி கீழ்க்கண்ட சில வித்தியாசமான வசனப் பகுதிகளை நாம் காண்போம்.

**ஆதியாகமம் 6:8 :** *நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது*

**யாத்திராகமம் 33:12 :** *என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது.*

**நீதிமொழிகள் 3:34 :** *தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கிறார்*

**யோவான் 1:17 :** *கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.*

**அப்போஸ்தலர் 14:3 :** *தேவன் பவுல் மற்றும் பர்னபா மூலமாக தம்முடைய கிருபையின் வசனத்தை உறுதிப்படுத்தினார்.*

**ரோமர் 3:24 :** *இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசு விலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமானாக்கப்படுகிறார்கள்.*

**ரோமர் 6:1 :** *கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?*

**ரோமர் 6:14,15 :** *நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்.*

**ரோமர் 11:5,6 :** *கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. அது கிரியைகளினாலே உண்டாக வில்லை.*

**2 கொரிந்தியர் 8:1 :** *மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.*

**கலாத்தியர் 1:15 :** *தேவன் பவுலைப் பிரித்தெடுத்து தம்முடைய கிருபையினால் அழைத்தார்.*

**எபேசியர் 2:8 :** *கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனு டைய ஈவு.*

**எபேசியர் 4:7 :** *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக்கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.*

**கொலோசெயர் 3:16 :** *நாம் இருதயத்தில் கிருபையுடன் கர்த்தரைப் பாடி துதிக்க வேண்டும்.*

**2 தீமோத்தேயு 2:1 :** *தீமோத்தேயுக்கு, கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படும்படியாகச் சொல்லப்பட்டது.*

*தீத்து. 3:7 : நாம் தேவனுடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்.*

எபிரெயர் 12:15 : *ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.*

யாக்கோபு 4:6 : *தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார்.*

1 பேதுரு 4:10 : *நாம் தேவனுடைய கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்.*

1 பேதுரு 5:12 : *நாம் தேவனுடைய மெய்யான கிருபையில் நிற்கிறோம்.*

2 பேதுரு 3:18 : *நாம் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும்.*

வெளிப்படுத்தின விசேஷம் 22:21 : *தேவனுடைய வார்த்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக என்று ஆசீர்வாத மன்றாட்டுடன் முடிகிறது.*

## பயன்பாடு

கிருபை - என்ன ஓர் ஆச்சரியமான ஈவு! தேவனுடைய கிருபையின் ஈவை விவரிக்கும் வசனப்பகுதிகளை வாசித்தபிறகு நாம் அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்? அதன் விவரிக்க முடியாத மதிப்பை எண்ணி மரியாதை கலந்த பயத்துடன் நாமெல்லாரும் நிற்க வேண்டாமா?.

எத்தனை முறை நான் இலவசமாக பெற்றுக்கொண்ட சன்மான சான்றிதழை இழந்து போயிருக்கிறேன் அல்லது அது காலவதியாகும்வரை விட்டிருக்கிறேன். இப்படி எப்போதாவது உங்களுக்கு நடந்திருக்கிறதா? அதே விதமாக, வேதவாக்கியங்களில் ஈவாக அழைக்கப்படுகிற சன்மானச் சான்றிதழை அதற்கு நாம் முற்றிலும் தகுதியில்லாத நிலையில் அதை நாம் பெற்றிருந்தாலும் கூடப் பொதுவாக கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். நம்மெல்லாருக்கும் தேவனுடைய கிருபை அவசரத் தேவையாயிருக்கிறது. இருந்தாலும் நாம் அதை ஏற்றுக் கொள்ளத் தாமதமாயிருக்கிறோம். இருந்தபோதிலும் சிலர் கிருபையின் அருமையை கண்டுபிடித்து தெய்வீகப் போதனையின் ஊசலை போதனையின் ஓரத்திலிருந்து, கிருபையின் ஓரத்திற்கு தொங்கும்படி அனுமதிக்கிறார்கள். இதைத் தாங்கள் புதிய வெளிப்பாடாகச் சொல்கிறார்கள். நம்மில் சிலர் இனிமேல் உபதேசம் ஒரு பொருட்டே அல்ல என்று நினைக்கத் தொடங்கி இருக்கிறோம். ஆயினும், ஒருவருக்கு கிருபை மட்டுமே எல்லாவற்றுக்கும் போதுமானது என்று சொல்கிறார்கள். எனவே, அவர்கள் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி மற்றும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் மற்ற பகுதிகள் அவைகள் கட்டளைகளாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அவைகளை கீழ்நோக்கிப் பார்க்கிறார்கள்.

உபதேசத்துக்கும் கிருபைக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த ஊசல் இரண்டுக்கும் சமமான இடத்தில் எப்போது நிற்கும்? இவ்விரண்டு பாடங்களைப் பற்றிய வசனப்பகுதிகளை நாம் சாதாரணமாக வாசித்தால் கூட தேவனுடனான நம் உறவுக்கு இரண்டுமே முற்றிலும் அவசியம் என்பத்தைத்தான் அவ்வசனங்கள் நமக்குப் போதிக்கும். கர்த்தருக்காகவும், நம் இரட்சிப்புக்காகவும் அந்த ஊசல் உபதேசத்தின் பக்கத்திலோ அல்லது கிருபையின் பக்கத்திலோ நின்று அதன் மிதமிஞ்சிய நிலையை அடைய நாம் அனுமதிக்கக்கூடாது.

# இரண்டு உடன்படிக்கைகளையும் ஒப்பிடுதல்

## Comparing the Two Covenants

*Royce Frederick*

வெவ்வேறு காட்சிகளை உள்ளடக்கிய இரு ஓவியங்கள் ஒரே ஓவியரால் வரையப்படும்போது அதில் பல ஒற்றுமைகளிருக்கும். அதேபோல், தேவனுடைய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக்கிடையில் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. இரண்டு ஏற்பாடுகளுமே கொலை செய்வதும், விபச்சாரம் செய்வதும் பாவம் என்று தான் சொல்கின்றன. இரண்டு ஏற்பாடுகளுமே நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது. ஆயினும், இரு ஏற்பாடுகளுக்குமிடையில் பல வித்தியாசங்களும் உண்டு.

பழைய உடன்படிக்கை இஸ்ரவேல் மக்களோடு மட்டும் தேவன் செய்த உடன்படிக்கையாகும் (உபாகமம் 5:1,4; எபேசியர் 2:11-13). புதிய உடன்படிக்கை தேவன் எல்லா தேசத்தாரோடும் செய்த உடன்படிக்கையாகும் (மாற்கு 16:15,16; கலாத்தியர் 3:28).

பழைய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மோசே (கலாத்தியர் 3:19; யோவான் 1:17). புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் இயேசு கிறிஸ்து. (எபிரெயர் 9:15).

பழைய உடன்படிக்கை மிருகபலியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது (யாத்தி ராகமம் 24:1-8). புதிய உடன்படிக்கை தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவால் பிரதிஷ்டை செய்யப்பட்டது (யோவான் 3:16; லூக்கா 22:20; எபிரெயர் 9:15,26).

பழைய உடன்படிக்கை இயேசு சிலுவையில் மரித்தபோது முடிவுக்கு வந்தது (கொலோசெயர் 2:14; கலாத்தியர் 3:24,25). புதிய உடன்படிக்கை இயேசு சிலுவையில் மரித்தபோதுதான் தொடங்கியது (எபிரெயர் 9:15,17).

பழைய உடன்படிக்கை யூதர்களுக்கான அடிமைத்தன நுகமாக இருந்தது (கலாத்தியர் 5:1,3; அப்போஸ்தலர் 15:10). புதிய உடன்படிக்கை எல்லா தேசத்தாருக் குமான சுயாதீனப் பிரமாணமாயிருக்கிறது (யாக்கோபு 1:25; ரோமர் 1:16; மத்தேயு 28:19).

பழைய உடன்படிக்கை கூடாரம், பின்பு தேவாலயம் போன்ற சரீரப் பிரகாரமான பொருள்களை உள்ளடக்கியது (யாத்திராகமம் 36,40; 1 ராஜாக்கள் 6-7). புதிய உடன்படிக்கை ஆவிக்குரிய ஆலயமாகிய சபையை உள்ளடக்கியது. அச்சபை கிறிஸ்துவை12அஸ்திபாரமாகவும், கிறிஸ்தவர்களை ஜீவனுள்ள கற்களாகவும் கொண்டது (1 கொரிந்தியர் 3:11,146,17; 1 பேதுரு 2:45).

பழைய உடன்படிக்கை பல பரிசுத்த நாட்களையும், பலிகளையும், பண்டிகைகளையும் உள்ளடக்கியது. இஸ்ரவேலர்கள் அடிக்கடி ஒரு நகரத்தில் ஒன்று கூட வேண்டியதாயிருந்தது (லேவியராகமம் 23; யாத்திராகமம் 34:24, உபாகமம் 12:1-11, 26,27). புதிய உடன்படிக்கை வாரத்தின் முதல் நாளில் பரிசுத்த நினைவு கூருதலாகிய கர்த்தருடைய பந்தியை மட்டும் உள்ளடக்கியது. அந்நாளில் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் அவரவருடைய இடங்களில் சபையாக ஒன்று கூடுகிறார்கள் (யோவான் 4:21-24; அப்போஸ்தலர் 20:7; 1 கொரிந்தியர் 11:17-26).

பழைய உடன்படிக்கை தசமபாகம் (அதாவது வருமானத்தில் பத்தில் ஒன்றைக் கொடுப்பது), மிருக பலிகள், தூபவர்க்கம், ஆராதனையில் இசைக்கருவி களின் பயன்பாடு போன்றவற்றை உள்ளடக்கியது (லேவியராகமம் 3,7; 27:30; 16:12; 2 நாளாகமம் 29-25).


புதிய உடன்படிக்கையில் மேற்சொல்லப்பட்ட காரியங்கள் எதுவும் இடம் பெறுவதில்லை. ஆனால், பாடல், ஜெபம், பிரசங்கம், போதனை கர்த்தருடைய பந்தி, காணிக்கை போன்றவைகள் இதில் இடம் பெறுகின்றன (எபேசியர் 5:19; 1 கொரிந்தியர் 14:15,16; 16:1,2; 2 கொரிந்தியர் 9:7; அப்போஸ்தலர் 20:7).

பழையதில் இஸ்ரவேல் தேசத்தின் ஒரு கோத்திரத்தை மட்டும் ஆசாரியர் களாக இருக்கும்படி அனுமதித்தது (யாத்திராகமம் 28:1; எண்ணாகமம் 3:1-10; எபிரெயர் 7:5). புதியதில் தனியாக ஆசாரித்துவம் எதுவும் கிடையாது. ஏனென்றால், இதில் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாயிருக்கிறார்கள் (1 பேதுரு 2:9; வெளிப்படுத்தின விசேஷம் 1:6). இயேசு கிறிஸ்து நம் பிரதான ஆசாரியராயிருக் கிறார் (எபிரெயர் 3:1; 4:14-16).

பழைய உடன்படிக்கை செழிப்பான கானான் தேசத்தை இஸ்ரவேலர் களுக்கு வாக்குத்தத்தமாக அளித்தது (யாத்திராகமம் 6:4; 1 ராஜாக்கள் 8:5,6). புதிய உடன்படிக்கை எல்லா உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கும் பரலோகத்தில் நித்திய சுதந்திரத்தை வாக்களிக்கிறது (யோவான் 14:2; 1 பேதுரு 1:4; வெளிப்படுத்தின விசேஷம் 2:10).

## எது சுவிசேஷம் ?

நீங்கள் செய்யும் செயல்களாலும்
நீங்கள் பேசும் வார்த்தைகளாலும்
ஒவ்வொரு நாளும் சுவிசேஷப் புத்தகத்தின் ஓர் அதிகாரத்தை
நீங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்
மனிதர்கள் அவைகள் உண்மையுள்ளவைகளா அல்லது உண்மையற்றவைகளா
என்பதைத் தொடர்ந்து வாசிக்கிறார்கள்
உங்களைப் பொறுத்தவரை எது சுவிசேஷம் சொல்லுங்கள்?




# வேதாகமத்தின் டைரி

## Diary of a Bible

***Bascom Aller***

**பே**சும் ஒரு வேதாகமம் இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். இது போன்று ஏதோ ஒன்றை நாம் கேட்போமா?

**ஜனவரி:** இது எனக்கு பரபரப்பான நேரம். குடும்பத்தில் பெரும்பாலானோர் இவ்வருடம் முழுவதும் என்னை வாசிப்பதாக தீர்மானித்தார்கள். முதல் இரண்டு வாரங்கள் நான் பரபரப்பாகப் பயன்படுத்தப்பட்டேன், ஆனால், அவர்கள் இப்போது என்னை மறந்து விட்டார்கள்.

**பிப்ரவரி:** இது சுத்தப்படுத்தும் காலம். நேற்று நான் தூசி துடைக்கப்பட்டு என் இடத்தில் வைக்கப்பட்டேன் . குடும்பத்தலைவர் என்னை கடந்த வாரம் சில நிமிடங்கள் பயன்படுத்தினார். அவர் ஏதோ ஒரு வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டு தான் சொன்னது சரி என்பதை நிரூபிக்க என்னில் சில வசனங்களைத் தேடிக் கொண்டிருந்தார்.

மார்ச் : மாதத்தின் முதல் நாளிலே பரபரப்பாகக் காணப்பட்டேன். அப்பொழுது அவர் PTA-ன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சொற்பொழிவாற்ற என்னைப் பயன்படுத்தினார்.

ஏப்ரல் : இம்மாதம் தாத்தா என்னைச் சந்தித்தார். அவர் என்னை அவருடைய மடியில் வைத்துக் கொண்டு 1 கொரிந்தியர் 13யை வாசிப்பதில் செலவழித்தார். என் வீட்டில் மற்றவர்களை விட அதிகமாக அவர் என்மேல் சிந்தையாயிருந்தது போல் தெரிந்தது.

மே : என் பக்கங்களில் சில பச்சைக்கறைகள் காணப்பட்டன. சில வசந்தகால மலர்கள் என் பக்கங்களில் நசுக்கப்பட்டன.

ஜூன் : இப்போது நான் சிறு சித்திரங்கள் ஒட்டப்பயன்படும் புத்தகம் போலாகி விட்டேன். அவர்கள் செய்தித் தாள்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளை எனக்குள் அமுக்கிவைத்தார்கள். வீட்டிலுள்ள பெண்களுள் ஒருவருக்கு திருமணம் ஆனது.

ஜூலை : இன்று என்னை சூட்கேஸில் வைத்துவிட்டார்கள். நாங்கள் விடுமுறையை கழிக்க செல்கிறோம் என்று நான் யூகிக்கிறேன். வீட்டில் இருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று நினைக்கிறேன். சூட்கேசுக்குள் குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் அடைத்து வைக்கப்பட்டிருப்பேன் என்பது எனக்குத் தெரியும்.

ஆகஸ்ட் : இன்னும் சூட்கேஸில் தான் இருக்கிறேன்.

செப்டம்பர் : கடைசியாகத் திரும்பவும் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டு பரிச்சயமான இடத்தில் வைக்கப்பட்டேன். இப்போது எனக்கு நண்பர்களும் வந்து விட்டார்கள். எனக்கு மேல் இரண்டு பெண்கள் பத்திரிகைகளும், நான்கு நகைச்சுவை புத்தகங்களும் குவிக்கப்பட்டுள்ளன. அவைகள் எந்த அளவுக்கு வாசிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நானும் வாசிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அக்டோபர் ; அவர்கள் இன்று என்னை சற்று வாசித்தார்கள். வீட்டில் ஒருவர் சுகவீனமாயிருக்கிறார். இப்போது நான் காப்பி மேஜையின் நடுவில் இருக்கிறேன். வீடு சந்திப்பிற்காக பிரசங்கியார் வருகிறார் என்று நினைக்கிறேன்.

நவம்பர் : இப்போது மறுபடியும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டேன்.

டிசம்பர் : குடும்பத்தினர் விடுமுறையைக் கழிக்க தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் நான் ஒவ்வொரு கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது காணப்படுவதைப் போல அலங்காரத் தாள்களால் சுற்றப்பட்டிருப்பேன் என்று யூகிக்கிறேன்.

ஓசியா தீர்க்கதரிசி இதை நன்றாக 4:6-ல் சொல்லியிருக்கிறார். "*என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்*" என்று (ஓசியா 4:6).

சாட்சியங்கள்

# அவர்கள் என்னை அறியமாட்டோமென்கிறார்கள்

## (எரேமியா 9:6)

## THEY REFUSE TO KNOW ME

*Rex Banks*

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பாக எரேமியா தீர்க்கதரிசி துன்மார்க்கமான காரியங்களைச் செய்து விட்டு வெட்கப்பட மறுத்த, விபச்சாரம், பொய், அவதூறு, துரோகம் போன்றவைகளைச் செய்த மக்களுக்காக அழுது புலம்பியிருக்கிறார் (எரேமியா 3:3; 8:18; 9:1). ஆபிரகாமின் பிள்ளைகளுக்கு இது எப்படி நடந்தது? அடிப்படையில் அவர்கள் *"வீணானவைகளுக்காக தங்கள் மகிமையை மாற்றினார்கள்"* (2:11). வேறு விதமாகச் சொன்னால், அவர்கள் தேவர்களல்லாதவர்களுக்காக தங்கள் மெய் தேவனை மாற்றினார்கள், மேலும் அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனை விட்டு விட்டு, தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள் (2:11,13). ஒரு சமுதாயமாக நாமும் இதைத் தான் செய்திருக்கிறோம். பொதுவாக, *"நாம் தேவனுடைய சத்தியத்தை விட்டுக் கொடுத்து அதற்குப் பதிலாக பொய்யைப் பெற்றிருக்கிறோம்"* (ரோமர் 1:25); ஆனால், நம்முடைய விஷயத்தில் நாம் மரம், கல் போன்ற விக்கிரகங்களால் வசீகரிக்கப் படவில்லை. மாறாக, தேவனை விட்டு விட்டு மனிதனை மையப்படுத்தும் உலகப் பார்வையால் நாம் வசீகரிக்கப் படுகிறோம். இது உடனடியாக நடந்துவிடவில்லை. மேற்கத்திய நாடுகளில் மனிதக் கொள்கைகள் கட்டுக்கடங்காமல் பரவிக் கொண்டிருக்கிறது. அது நம் சமுதாயத்தின் மீது ஏற்படுத்தியிருக்கிற தாக்கம் பயங்கர அழிவிற்குரியதாயிருக்கிறது.

மனிதனை மையப்படுத்தும் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தொடர்ந்து பதினெட்டாம் நூற்றாண்டில் செல்வாக்குள்ள சிந்தனையாளர்கள் மத்தியில் தெய்வீகக் கொள்கை என்னும் கொள்கை மிகப் பிரபலமாயிருந்தது.

தெய்வீகக்கொள்கை என்பது காரணகாரியங்கள் மற்றும் சாட்சியங்களால் உறுதியாக்கப்பட்ட தத்துவ ஞான அடிப்படையிலான ஒரு தெய்வ நம்பிக்கை ஆகும். ஆனால், இக்கொள்கை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தகவல்களை ஏற்றுக்கொள்வதில்லை. இத்தெய்வீகக் கொள்கை கடவுள் ஒருவர் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார் என்று நம்புகிறது. ஆனால், மனித ஜெபங்களுக்கு கடவுள் பதில் அளிப்பதில்லை என்று வாதிடுகிறது.

மனித இனத்துக்கு இப்பிரபஞ்சத்தை இயக்குகிற ஒரு கடவுள் அவசியமாயிருந்தது. ஆனால், அக்கடவுள் தூரத்திலிருந்து இயக்குகிறவராக, தூரத்திலிருக்கிற ஓர் உருவமாக இருந்து மனிதனுடைய தன்னாட்சியில் தலையிடாத ஒருவராக இருக்க வேண்டுமென்று மனித இனம் எதிர்பார்த்தது. இப்போது, தெளிவாக, டார்வின் கொள்கைகள் போன்றவை வளம் பெறுவதற்கு இந்தத் தெய்வீகக் கொள்கை செழிப்பான மண்ணாக இருந்தது. ஏனென்றால், டார்வின் கொள்கை தேவனை ஒதுக்கி செயல்பட வித்திட்டது. மனிதன் தற்சார்பு உடையவனாக சுய ஆளுமைத் தன்மை உடையவனாக இருக்க வேண்டுமென்கிறவர்களுக்கு டார்வின் கொள்கை மிகப் பொருத்தமான ஒன்றாக இருந்தது. டார்வின் எழுதிய *"இனங்களின் ஆரம்பம்"* என்னும் புத்தகம் வெளிவந்து சில வருடங்கள் கழித்து டேவிட் ஸ்ராஸ் என்பவர் இவ்விதம் எழுதினார்.

தத்துவஞானிகளாகிய நாங்களும், இறையியல் விமர்சகர்களும் திரும்பத் திரும்ப *அற்புதங்கள் ஒழிந்து போகும்படியாக விருதாவாகவே புலம்பிக் கொண்டிருக்கிறோம்;* செயல்படாத எங்கள் ஆணைகள் எல்லாம் ஒழிந்து போயின; எங்களால் அற்புதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை; பெரும்பாலானோரைப் போல் டேவிட் ஸ்ராஸ் அவர்களும் மனிதர்களுடைய விவகாரங்களில் தேவன் தலையிடக்கூடாது என நிலவின கோட்பாட்டை வரவேற்றார். ஆனால், அந்தச் சுதந்திரத்திற்காக நாம் பயங்கரமான விலையைக் கொடுத்து விட்டோம். பரிணாமக் கொள்கையின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்ட முன்னணி தத்துவஞானி ஒருவர் ஒழுக்க நெறிகள் நாம் ஒத்துழைக்கும்படி மரபணுக்களால் நம்மீது திணிக்கப்பட்ட பொய்யான தோற்றம்தான் என்று சொல்லியிருக்கிறார். மேலும், நாம் எல்லோரும் கீழ்ப்படியும்படி ஓர் ஒழுக்கநெறி நமக்குள் உந்தும் சக்தியாக இருக்கிறது என்றும் அவர் சொன்னார். எனவே, ஏமாற்றுவது, பொய் சொல்வது, திருடுவது, கொலை செய்வது போன்றவற்றை நீங்களும், நானும் தவறென்று நினைக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட நினைப்பே மாயை என்று சொல்கிறார் அந்த தத்துவஞானி. அதே நேரத்தில், இவரும் பலரைப் போல் தெய்வீகச் சட்டத்தைக் கொடுப்பவர் ஒருவரில்லாமல் நன்மை, தீமை பற்றிய அறிவோ, அது போல் ஒழுக்கம், ஒழுக்கமில்லாமை போன்றவைகளைப் பற்றிய அறிவோ அர்த்தமற்றது என்று சொல்கிறார்.


சகோதரரே, *"கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது"* என்னும் முக்கியமான சத்தியத்தை நம் பிள்ளைகளுக்குப் போதிக்க நாம் ஆயத்தமாக வேண்டும் (சங்கீதம் 33:6). நாம் மட்டமான ஒன்றிலிருந்து உருமாறவில்லை, தேவ சாயலில் படைக்கப்பட்ட சிருஷ்டிகள். பரிசுத்தராகும்படி பரிசுத்த தேவனால் அழைக்கப்பட்டவர்கள். நாம் ஆத்துமாக்களுடன் கூடிய மனிதர்கள், நமக்குப் பரலோக நம்பிக்கை இருக்கிறது. நம் ஆரம்பம் அல்லது தோற்றத்தைப் பற்றி எதை நம்புகிறோமோ அது உண்மையாகவே மிகவும் முக்கியமானது. ஏனென்றால், கடைசியாக இந்த நம்பிக்கை நம் நித்தியத்தைப் பாதிக்கக்கூடியது.

# சமுத்திரவியலும், வேதாகமும்

# OCEANOGRAPHY AND THE BIBLE

*Travis L. Quertermous*


சமுத்திரத்தைப் பற்றி விஞ்ஞானப் பூர்வமாகப் படிப்பது தான் சமுத்திர வியலாகும். நவீன சமுத்திர வியலின் தந்தையாக Mathew FonTaine Maury என்பவர் அழைக்கப்படுகிறார் (1806-1873). இவர்தான் கடலில் உள்ள வழிகளைக் கண்டுபிடித்தவர். ஆனால், இவரைப் பற்றி பலருக்கும் தெரியாத உண்மைகளில் ஒன்று இவருடைய செல்லப்பெயர் வேதாகமத்திலிருந்து வந்தது என்பது தான்.



Mathew Maury வேதாகத்தில் பக்தியுள்ள விசுவாசியாக இருந்தார். புகழ்பெற்ற இந்த விஞ்ஞானி ஒருமுறை நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் படுத்திருக்கும் போது, வேத வசனங்களை வாசிக்கும்படி தன் மகனை கேட்டுக் கொண்டார். அவருடைய மகன் சங்கீதம் 8யை எடுத்து வியாதியிலிருந்த தகப்பனுக்காக வாசிக்கத் தொடங்கினார். சங்கீதம் 8:8 "சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் " என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மூலமொழியில் கடலில் உள்ள வழிகளை என்று இருக்கிறது. Mathew Maury அந்த வசனத்தை மறுபடியும் வாசிக்கும்படி கேட்டுக் கொண்டு இவ்விதமாகச் சொன்னார்" தேவனுடைய வார்த்தை கடல்களில் வழி இருப்பதாகச் சொன்னால் நிச்சயமாக அவைகள் இருக்கும் நான் அவைகளைக் கண்டுபிடிப்பேன் " என்றார்.

ஆம்,அவர் அப்படியே செய்தார் கடல்வாழ் உயிரினங்களும், கப்பல்களும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்தை கடக்கப் பயன்படுத்தும் கடல் வழியான நீரோட்டத்தை அவர் கண்டு பிடித்தார். இந்த கடல் நீரோட்டங்கள் தான் உண்மையாகவே கடல் பாதையாக செயல்படுகிறது. இதைதான் சங்கீதக்காரன் தாவீது கி.மு. 1000ல் சங்கீதம் 8:8ல் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி விஞ்ஞானத்தின் பல கிளைகள் வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன.

வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதற்கு இத்தகைய விஞ்ஞான முன்னறிவு மிகச் சிறந்த சான்றாகும். இல்லையென்றால், நவீன விஞ்ஞானம் சுமார் 150 வருடங்களுக்கு முன்பு வரை கண்டுபிடித்திராத கடல் வழியை தாவீது எப்படி அறிந்திருக்க முடியும்? தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா?




# மகாப் பெரிய நியாயத்தீர்ப்பு நாள்

## THE GREAT JUDGMENT DAY

*J.C. Choate*

மகா பெரிய நியாயத் தீர்ப்பு நாள் ஒன்றிருக்கும் என வேதாகமம் போதிக்கிறது. பல காரணங்களினிமித்தம் அது மகா பெரிய நாளாயிருக்கும்.

**1. அந்த நாள் எப்போதென்று எந்த ஒரு மனிதனுக்கும் தெரியாது - அது கர்த்தரால் நியமிக்கப்பட்ட நாள் :** *"அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே"* என்று வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம் (எபிரெயர் 9:27).

**2. இதுவரை வாழ்ந்த, இனிமேல் வாழப்போகிற எல்லோரும் அந்நாளில் காணப்படுவார்கள் :** இது கற்பனை செய்து பார்ப்பதற்கே கடினமான ஒன்றாகும். ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றில்லை. *"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (கொரிந்தியர் 5:10) ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்"* (ரோமர் 14:12).

**3. தேவன் எல்லோரையும் கிறிஸ்து மூலமாகவும் அவருடைய வார்த்தை மூலமாகவும் நியாயந்தீர்ப்பார் :** எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொன்னார். *"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாதிபதியாகிய தேவனிடத் திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்"* (எபிரெயர் 12:23). பவுல் அத்தேனே பட்டணத்தாருக்குப் பிரசங்கிக்கும் போது *"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷ ரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே, அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார்* என்றார் (அப்போஸ்தலர் 17:30-31). இயேசு கிறிஸ்து *"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்"* என்று சொன்னார் (யோவான் 12:48).

**4. நாம் நம் வாழ்க்கையினாலும், எண்ணங்களாலும், வார்த்தை களாலும் நியாயந் தீர்க்கப்படுவோம் :** இயேசு கிறிஸ்து *"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்"* என்று சொன்னார் (மத்தேயு 12 : 35-37) (வெளிப்படுத்தின விசேஷம் 21:18).

**5. தேவன் பட்சபாதமுள்ளவராக இருக்கமாட்டார் :** தேவனைப் பற்றி நமக்கு இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. *"தேவனிடத்தில் பட்சபாதமில்லை"* (ரோமர் 2:11). பவுல் கொலோசே பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களிடம் *"அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான் ; பட்சபாதமே இல்லை"* என்று விவரித்தார் (கொலோசெயர் 3:25). கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாருடைய மனமாற்றச் சம்பவத்தில் வேத வசனம் இப்படிச் சொல்லுகிறது. *"அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி : தேவன் பட்சபாதமுள்ள வரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்"* (அப்போஸ்தலர் 10:34,35)

**6. நியாயத்தீர்ப்பு இறுதியானதாயிருக்கும் :** ஒருவர் மரித்த பிறகு, கர்த்தருக்கு முன்பாக தன் நிலையை மாற்றிக் கொள்ளவே முடியாது. அவருடைய உறவினர்கள் தங்கள் ஜெபத்தால் அவரை இரட்சிக்க முடியாது. அல்லது அவர் இரட்சிக்கப்படும்படி மற்றவர்களுக்கு பணம் கொடுத்து ஜெபிக்க வைக்க முடியாது.

யாருக்கும் இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. அதனால்தான் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதினாலும், மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருப்பதினாலும் தேவனை சந்திக்க ஆயத்தப்பட வேண்டும் (மாற்கு 16:16 ; வெளி 2:10).

**7. கர்த்தர் துன்மார்க்கரை நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களை நித்தியஜீவனை அடையவும் அனுப்புவார் [மத்தேயு 25:46] :** எல்லாமே நித்தியமானது. வேறுவிதமாகச் சொன்னால் இழந்து போனவர்கள், பாவிகள், தேவபக்தியற்றவர்கள், உண்மையில்லாதவர்கள் என்றென்றும் இருக்கும்படியாக நரகத்தில் தூக்கி எறியப்படுவார்கள். இது நியாயமா? அன்புள்ள தேவன் அதைச் செய்வாரா? தேவனை குற்றஞ்சாட்ட வேண்டாம். அவர் எல்லோரிடத்திலும் அன்பு கூர்ந்து, எல்லோருக்கும் இரட்சிப்பை அளிக்க தம்முடைய குமாரனையே ஒப்புக்கொடுத்தார். ஒருவர் அந்த அன்பு கிருபை மற்றும் இரக்கத்தை நிராகரித்தால் அல்லது தள்ளினால் அந்த நபர் தன் செயலுக்கான விளைவை சந்திக்க வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் உண்மையாயிருப்பவர்கள் பரலோகம் போய் கர்த்தரோடு என்றென்றுமாய் வாழ்வார்கள்.

நியாயத்தீர்ப்பையும், அதற்காக நாம் ஆயத்தமாவதின் அவசியத்தையும் நீதிமான்களாக தீர்க்கப்படுபவர்களுக்காக கர்த்தர் வாக்குரைத்த ஆசீர்வாதங்களையும் நாம் அறிந்து கொள்வோமாக.

## சிலந்தியிடமிருந்து

என் வீட்டு ஜன்னல் கண்ணாடியின் வெளியே பார்த்தபோது
ஏதோ ஒன்று தொங்கிக் கொண்டிருக்கிறதைப் பார்த்தேன்;
ஒரு சிலந்தி தன் வலையை பாதுகாப்பாகப் பின்னிக் கொண்டிருந்தது

இவ்வாழ்க்கையில் நாமும் கூட ஆத்தும ஆதாயம் குறித்த
அக்கறையும் கிறிஸ்தவ அன்பும் நிறைந்த வார்த்தை
வலையைப் பின்னுகிறோம் என்று நினைத்தேன்

வாழ்க்கைக் கவலைகள் நம்மை சிக்க வைக்கிறது
வலைகளை நாம் பெரும்பாலும் பாவத்தை மேற்கொள்வதற்கான
நல்நோக்கத்துடன் பின்னுகிறோம்

வெட்டவெளியில் சிலந்திகள் நம்பிக்கையுடன் பின்னுவதைப் போல
நாம் ஏன் பின்னக்கூடாது? பின்னி, இயேசு கிறிஸ்துவின் ஆச்சரியமான
கிருபைக்காக அவரில் நம்பிக்கையை ஏன் வைக்கக்கூடாது?

# என்னோடு சேர்ந்து சிந்தியுங்கள்

## Think With Me

*Hollis Miller*

இனிமையாகப் பழகுவதை பலர் குறிப்பிடுவதுண்டு. எல்லாரோடும் அன்பாகவும், புரிந்து கொள்ளுதலுடனும், மென்மையாகவும் பழக நான் விரும்புவதுண்டு. தான் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறேன். வேதாகமம் தேவனுடைய சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது என்பதையும் விசுவாசிக்கிறேன். நான் இக்காரியங்களை விசுவாசிக்கிறபடியால் நான் தேவனுக்குக் கீழ்ப்படிவதா அல்லது மனிதர்களிடம் நன்றாக நடந்து கொள்வதா என முடிவெடுக்கும்படி தூண்டப்படுகிறேன். இது விநோதமாக இருந்தால், இதை விளக்கும்படி என்னை அனுமதியுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவுக்குப் பிரியமான ஊழியக்காரராக இருந்தார். அவர் ரோம சாம்ராஜ்யம் முழுவதையும் சுற்றித் திரிந்து தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் மன்னிப்பை அறிவித்தார். இருந்த போதிலும் அப்போஸ்தலனாகிய பவுல் எல்லோரிடமும் நன்றாக நடந்து கொள்ள அவர்கள் அவரை அனுமதிக்கவில்லை. அவர் சென்ற இடமெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் பவுல் இப்படிப்பட்ட ஒருவனைப் பார்த்து " *பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே* " என்று கடிந்து கொண்டார். (அப்போஸ்தலர் 13:10). தற்கால காதுகளுக்கு அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் கொடூரமாக இல்லாவிட்டாலும் கூட கடுமையாகத் தெரிகிறது. ஆயினும், சில வேளைகளில் இயேசு கிறிஸ்து கூட கடுமையாகச் சாடுவது அவசியமானது என்று கண்டார் (மத்தேயு 23). நிச்சயமாக, சிந்தையுள்ள எந்த ஒரு தனி மனிதனும் இயேசு கிறிஸ்துவோ அல்லது பவுலோ மனப்பான்மையிலும், நோக்கத்திலும் அன்பற்றவர்களாக நடந்து கொண்டார்கள் என்று குற்றம் சாட்டத் தயாராக இல்லை.

இன்று உலகெங்கிலும் ஒருவிதமான மனநிலை நிலவுகிறது. அது காட்டுத் தீயைப்போல வேகமாகப் பரவி வருகிறது. இவ்விதமான மனநிலை அதிக துக்கத்தையும், தர்ம சங்கடத்தையும் உண்டு பண்ணி இல்லங்களையும், பள்ளிகளையும், சமுதாயத்தையும், சபைகளையும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. இந்த மனநிலை; " *நான் என் விருப்பப்படி செய்யப் போகிறேன்.. அப்படிச்*

*செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொல்ல உனக்கு எவ்வளவு துணிச்சல். நான் செய்து கொண்டிருப்பதை நீ எதிர்த்தால், நீ பழமைவாதியென்றும், குறுகிய மனப் பான்மையுள்ள சோம்பேறியென்றும், கற்கால மனிதனென்றும் முத்திரை போட்டு விடுவேன்* " என்று மிரட்டுவதாகத்தான் இருக்கிறது. இதில் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த ஏமாற்று வேலை எடுபடுகிறது.

ஏமாற்று வேலை இவ்விதமாக இருந்தபோதிலும், மனிதர்கள் செய்ய உரிமையில்லாத சில காரியங்கள் உண்டு. ஆண்களும், பெண்களும் தவறான உறவு வைத்துக் கொண்டு தாங்கள் செயல்பாட்டை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. அதுபோல், சபைகள் தேவனுடைய வார்த்தையை அவமதித்து விட்டு மற்றவர்கள் அதை ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதற்கோ அல்லது மற்றவர் களைப் பார்த்து மிதமிஞ்சிய அடிப்படைவாதிகள் அல்லது பழமைவாதிகள் என்று முத்திரை பதிப்பதற்கோ அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் எழுந்து விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும். ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாகப் போராடுவதற்கு நேரம் வந்து விட்டது. இப்படிப் போராடுவது ஒரு கிறிஸ்தவனை மோசமான நபராகக் காட்டினால் அது அப்படியே இருக்கட்டும். " *உண்மையை நிராகரிக்கிறவர்களுக்கு, பொய்யினால் போஷிக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை* " *என்று மிகச் சரியாகச் சொன்னார் ஒருவர்.*

## கிறிஸ்து நமக்கு எப்படியாக இருக்கிறார்?

1. கிறிஸ்து நம்முடைய ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12)
2. கிறிஸ்து நம்முடைய ஜீவனாக இருக்கிறார் (யோவான் 11:25)
3. கிறிஸ்து நமக்கு வழியாக இருக்கிறார் (யோவான் 14:6)
4. கிறிஸ்து நம்முடைய இரட்சகராக இருக்கிறார் (அப். 4:12)
5. கிறிஸ்து நம்முடைய கன்மலையாக இருக்கிறார் (1 கொரிந்தியர் 10:4)

# சிந்திப்பதற்கான ஒன்று

## Something to Think About

*Sunny David*

ஒருவர் நான்கு வித்தியாசமான நிலங்களில், வித்தியாசமான விதைகளை விதைத்து விட்டு முதல் இடத்திலிருந்து மக்காச் சோளத்தையும், இரண்டாவது இடத்திலிருந்து பட்டாணியையும், மூன்றாவது இடத்திலிருந்து வெள்ளரியையும், நான்காவது இடத்திலிருந்து பீன்ஸையும் அறுவடை செய்தால், நாம் நான்கு வகையான விதைகள் விதைக்கப்பட்டதாகத் தான் முடிவுக்கு வருவோம். ஆனால், எல்லா இடங்களிலிருந்தும் மக்காச்சோளம் அறுவடை செய்யப்படுமானால் முடிவு என்னவாயிருக்கும்? அதன் பொருள் எல்லா இடங்களிலும் மக்காச்சோளமே விதைக்கப்பட்டது என்பதாகத் தான் இருக்கும்.

சுவிசேஷகனாகிய பிலிப்பு சமாரியாவுக்குப் போயிருந்தபோது, அவர் தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்துப் பிரசங்கித்தார் என்று வேதாகமம் சொல்கிறது. அதன் விளைவு எப்படி இருந்தது? இதே வசனத்தில், அதாவது அப்போஸ்தலர் 8:12-ல் புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வாசிக்கிறோம்.

அடுத்து, இதே எட்டாம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு பிரசங்கித்தார் என்று வாசிக்கிறோம். 35 ஆம் வசனத்தில் " *அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்* " என்று வாசிக்கிறோம். பிலிப்பி எதைப் பிரசங்கித்தான்? இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தான் என்று வேத வாக்கியம் சொல்கிறது. அதன் விளைவாக என்ன நடந்தது? அடுத்த வசனமாகிய 8:36-ல் " *இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர்*



*இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமார னென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்* " என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் பவுலும், சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் இருந்தபோது லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயை சந்தித் தார்கள். அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். அவள் பக்தியுள்ள ஸ்திரீ என்பதும், தேவனுக்குப் பயப்படுகிற ஸ்திரீ என்பதும் வெளிப்படையாகவே தெரிகிறது. 16:14வது வசனம் " *பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்* " என்று சொல்கிறது. உடனடியாகவே அடுத்த வசனத்தில் " *அவளும், அவளுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்* " என்று வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 16:15).

இதே அப்போஸ்தலர் பதினாறாம் அதிகாரத்தில் பவுலும், சீலாவும் பயமின்றி இரட்சிப்பின் வழியை எல்லோருக்கும் அறிவித்ததற்காக சிறையில் அடைக்கப் பட்டார்கள். ஆயினும், நடுராத்திரியில் சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச்சாலைக் காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்பேனார்களென்று எண்ணிப் பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்துகொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு; நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே நாங்கள் எல்லோரும் இங்கே தான் இருக்கிறோம் என்றான. அந்த சிறைச்சாலைக்காரன் எவ்வளவு மகிழ்ச்சியை அடைந்திருப்பான் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஆகையால் தான் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். " *அப்பொழுது அவன் தீபங் களைக் கொண்டு வரச் சொல்லி உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும், சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்து வந்து; ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும், இராத்திரியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும், அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ் நானம் பெற்றார்கள்* " (அப்போஸ்தலர் 16:25-33). நாம் இதுகாறும் பார்த்த சம்பவங்களிலிருந்து மிக முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம். அதாவது, ஆரம்பத்தில் அப்போஸ்தலருடைய காலத்தில் தேவனு டைய ராஜ்யத்தைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றியும்,

தேவனுடைய வார்த்தையைப் பற்றியும் எங்கெல்லாம், எப்போதெல்லாம், பிரசங்கிக்கப்பட்டதோ அதன் பலனாக அல்லது நேரடி விளைவாக ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றதை நாம் வாசிக்க முடியும். அதாவது, இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டவர்கள் கடைசியாக பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று பார்க்கிறோம். (அப்போஸ்தலர் 2:37,38).

மேலும், மேலே சொல்லப்பட்டுள்ள சம்பவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் முக்கியமான பாடம் என்னவென்றால், ஒருவர் இரட்சிக்கப்படும்படியாக கிறிஸ்து எதைப் போதிக்கிறாரோ அதைப் பிரசங்கிக்காமல் நாம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியோ, இயேசு கிறிஸ்துவைப் பற்றியோ தேவனுடைய வார்த்தையைப் பற்றியோ பிரசங்கிக்க முடியாது (மாற்கு 16:15,16). மேலே மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற வசனங்களில் ஒரு மனமாற்ற சம்பவத்தில் கூட ஞானஸ்நானம் குறிப்பாக குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு சம்பவத்திலும் ஜனங்கள் " *தேவனுடைய ராஜ்யம்* " அல்லது " *இயேசு கிறிஸ்துவின் நாமம்* " அல்லது " *தேவனுடைய வார்த்தை* " அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்ட உடனே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். இந்த முடிவு வெளிப்படையாகவும், தெளிவாகவும் இல்லையா?

**ஒருவர் இரட்சிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்லாமல், வேதாகம அடிப்படையில் தேவனுடைய ராஜ்யம், இயேசு கிறிஸ்து, தேவனுடைய வார்த்தை போன்றவை குறித்து முழுமையான அளவில் பிரசங்கிப்பது முடியாத காரியமாகும்.**

**நாம் தேவனுடையவர்களாயிருந்தால் வாழ்க்கை முறைகளும், ஒழுக்கநெறிகளும் தேவனால் தீர்மானிக்கப்படுகிறது. அந்த அளவுகோலை ஏற்படுத்துகிறவர் தேவனே. அவைகள் நம் வாழ்வின் எல்லாவற்றையும் ஆளுகை செய்கின்றன.**

# வாழ்வதற்கான உபதேசங்கள்

நீங்கள் வசனரீதியான ஞானஸ்நானம் பெற்றிருந்தால்,

1. உங்களுக்குப் பாவ மன்னிப்பு உண்டு (அப். 2:38)
2. உங்கள் பாவங்கள் கழுவப்பட்டிருக்கிறது (அப். 22:16)
3. உங்களுக்கு மன்னிப்பு கிடைத்திருக்கிறது (கொலோ. 2:16,13)
4. நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறீர்கள் (ரோமர் 6:17,18)
5. நீங்கள் தண்ணீரினால் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறீர்கள் (எபேசியர் 5:26)
6. நீங்கள் தண்ணீரினால் பரிசுத்தமாகக்கப்பட்டிருக்கிறீர்கள் (எபேசியர் 5:26)
7. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21)
8. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள் (ரோமர் 6:3; எபேசியர் 1:3)
9. நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்கிறீர்கள் (2 கொரிந்தியர் 5:17)
10. நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்கள் (ரோமர் 6:3; எபிரெயர் 9:22).
11. நீங்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள் (கலா 3:27; ரோமர் 13:14).
12. நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்கள் (1 கொரி. 1:13).
13. நீங்கள் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள் (1 கொரி 12:13).
14. நீங்கள் ஒரே சரீரமாக ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறீர்கள் (எபேசியர் 2:16).
15. நீங்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசித்திருக்கிறீர்கள் (யோவான் 3:3-5; கொலோ 1:13).
16. நீங்கள் நல்மனசாட்சி உடையவர்களாயிருக்கிறீர்கள் (1 பேதுரு 3:21).
17. நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாராயும், சுதந்திரராயும் இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:29).

ஒருவேளை, நீங்கள் வசன ரீதியான ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் உங்கள் நிலை என்னவாக இருக்கிறது?.

" *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " (மாற்கு 16:16). "*பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்* " (ரோமர் 6:4).



# மார்க்கப்பிரிவினை சபையாரின் ஞானஸ்நானத்தில் என்ன தவறு இருக்கிறது?

## What is wrong with Denominational Baptism?

*Cecil Willis*

ஞானஸ்நானம் என்கிற வார்த்தை பல உருவங்களில் புதிய ஏற்பாட்டில் 12 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தினால், ஒருவர் ஞானஸ்நானம் பற்றி அதிகமாக பேச வேண்டும் அல்லது வேதாகமத்தின் பெரும் பகுதியை ஒருவர் புறக்கணிப்பவராக இருக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்தவரை மற்ற எல்லா மார்க்கப்பிரிவினை கூட்டங்களும் ஏதோ ஒரு சடங்காச்சாரத்தைச் செய்துவிட்டு அதை அவர்கள் ஞானஸ்நானம் என்றழைக்கிறார்கள். ஆகவே, பெரும்பாலான மக்கள் ஞானஸ்நானம் என்றழைக் கப்படுகிற ஏதே ஒரு மதச் சடங்காச்சாரத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இந்த ஜனங்கள் புதிய ஏற்பாட்டு சபையைப் பற்றி கற்றுக்கொள்ளும்போது அவர்கள் மார்க்கப் பிரிவினை சபையில் பெற்றுக்கொண்ட அதே ஞானஸ்நானத்தோடே புதிய ஏற்பாட்டு சபைக்குள் வர விரும்புகிறார்கள். மார்க்கப்பிரிவினை கூட்ட

சபையில் ஞானஸ்நானம் குறித்து பிரச்சனை இருக்குமானால், தவறு இருக்கிற தென்று நான் நினைக்கிறேன். எனவே, இவர்கள் தவறில் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க வேண்டும். நான் இதை இச்சிறு கட்டுரையின் வாயிலாக அறிவிக்க முயற்சி எடுப்பேன். கீழ்க்காணும் மார்க்கப்பிரிவினை ஞானஸ்நானத்திலுள்ள தவறுகளைக் கவனியுங்கள்.

❖ இது தவறான அதிகாரத்தை உடையது (மத்தேயு 28:18; கொலோ 3:17)

மார்க்கப் பிரிவினை கவுன்சில்களும், கொள்ளைப் புத்தங்களும் இந்த ஞானஸ்நானத்தை அங்கீகரிக்கின்றன. இயேசு கிறிஸ்து ஒரு போதும் அங்கீகரிக்கவுமில்லை, எந்த ஒரு மார்க்கப்பிரிவினை கூட்டத்திலும் ஞானஸ்நானம் பெறும் படியாக கட்டளையிடவுமில்லை.

❖ இது பொதுவாக தவறான பொருளை உடையது (மத்தேயு 28:19-20; மாற்கு 16:15-16; அப். 8:37;2:38)

வேதாகமத்தின் போதனையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிற விஷயம் என்னவென்றால், மனந்திரும்பி, ஒரு விசுவாசி தன் விசுவாசத்தை அறிக்கையிருவது தான், வேதாகம அடிப்படையிலான ஞானஸ்நானத்தின் சரியான பொருளாகும். இந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாத குழந்தைளை மார்க்கப்பிரிவினை சபைகள் தெளிப்பு ஞானஸ்நானத்தில் ஈடுபடுத்துகிறார்கள். மேலும், மார்க்கப்பிரிவினை சபைகள் தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக நினைக்கும் ஜனங்களையும் ஞானஸ்நானப் படுத்துகிறார்கள்.

❖ இது தவறான அறிக்கை உடையதாயிருக்கிறது (அப். 8:37) (மத்தேயு 28:19-20; மாற்கு 16:15-16)

புதிய ஏற்பாட்டில் வாழ்பவர்கள் கிறிஸ்துவின் மீது தங்களுக்கு இருந்த விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் போது அறிக்கை செய்தார்கள். ஆனால், மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களில் ஞானஸ்நானம் பெற விரும்புபவர்கள் தங்கள் கொள்கைகளை அறிக்கை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. எனக்குத் தெரிந்த மார்க்கப்பிரிவினைக் கூட்ட சபையொன்று இருபது போதனைகளை உள்ளடக்கிய கொள்கைப் புத்தகம் ஒன்றை அறிக்கை செய்யும்படி சொல்கிறது. மேலும், வேத வசனதிற்குப் புறம்பான அறிக்கை ஒன்றிருக்கிறது. தேவன் நம் பாவங்ளை மன்னிப்பதற்கு பாவிகளின் ஜெபம் என்றழைக்கப்படுகிற ஜெபத்தை அறிக்கையிட்டால் போதுமானது என்கிற உபதேசந்தான்.

❖ இது பொதுவாக தவறான செயலை உடையதாயிருக்கிறது (அப் 8:37; ரோமர் 6:3,4; கொலோ 2:12).

வேதாகம அடிப்படையிலான ஞானஸ்நானம் அதிகப்படியான தண்ணீரை உள்ளடக்கியது (யோவான் 3:23). மேலும், அது தண்ணீருக்குள் வருவதையும், தண்ணீரிலிருந்து வெளியேறுவதையும் சம்பந்தப்படுத்துகிறது. வேதாகம அடிப்படையிலான ஞானஸ்நானத்தில் ஒருவர் தண்ணீருக்குள் அடக்கம் செய்யப் படுகிறார்.

(ரோமர் 6:34). தெளிப்பு ஞானஸ்நானமோ அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானமோ வேதாகம அடிப்படையிலான ஞானஸ்நானமாகாது. எனவே, உங்கள் தெளிப்பு அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானம் செல்லாது.

❖ **இது தவறான நோக்கத்தை உடையது (அப். 2:38; மாற்கு 16:16; அப். 22:16; 1 பேதுரு 3:21)**

இந்த வசனப்பகுதிகள் ஞானஸ்நானமானது பாவமன்னிப்பிற்காகவும், இரட்சிக்கப்படும்படியாகவும், பாவங்கள் கழுவப்படும்படியாகவும் பெறப்பட வேண்டிய ஒன்று என்று போதிக்கிறது. பொதுவாக, மார்கப்பிரிவினைக் கூட்டத் தினர் ஒருவரை கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானப்படுத்துவதைவிட ஒரு குறிப்பிட்ட மார்க்கப்பிரிவினைக் கூட்டத்திற்குள் ஞானஸ்நானப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர் (கலாத்தியர் 3:26,27; ரோமர் 6:34). எனவே, ஒருவர் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தாலும் கூட, வேதாகம அடிப்படையிலான நோக்கத் திற்காக தண்ணீருக்குள் மூழ்கவில்லையென்றால் அவருடைய ஞானஸ்நானம் தவறானதாகும்.

பெரும்பாலான மார்க்கப்பிரிவினை கூட்டத்தார் தாங்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டதைக் காட்டுவதற்காக ஞானஸ்நானம் பெறுகிறார்கள் இரட்சிக் கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறுவதில்லையென்று போதிக்கிறார்கள். நீங்கள் அவ்விதமாக ஞானஸ்நானம் பெற்றீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டதை அறிக்கை யிட்டது உங்களுக்கு நினைவிருந்தால் (அநேகமாக நீங்கள் அதைச் செய்திருப் பீர்கள்) நீங்கள் தண்ணீருக்குள் மூழ்கியது பாவமன்னிப்புக்கானதென்றும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பெறப்பட்டதென்றும் உறுதி செய்து கொள்வீர்கள் (1 கொரிந்தியர் 12:13).

❖ **இது தவறான ஒழுங்கை உடையது (எபிரெயர் 11:6; ரோமர் 10:17; மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; 8:37)**

இந்த வசனங்கள் மனமாற்ற சம்பவத்தின் செயல்களை வரிசைப்படுத்தி சொல்லியிருக்கின்றன. அவையாவன, கேள்விப்படுதல், விசுவாசம் மனந் திரும்புதல், அறிக்கை, ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் வரம் போன்றவை களாகும். ஆனால், பிரிவினை சபையினர். பரிசுத்த ஆவியின் வரம் மனந்திரும்புதல், விசுவாசம், இரட்சிப்பு அதன் பின்பு ஞானஸ்நானம் என்கிறார்கள்.

❖ **இது தவறான உண்மைப் பற்றைக் கொண்டது:**

பிரிவினைச்சபை ஞானஸ்நானம் ஒருவர் மனிதப்பெயரைத் தரித்துக் கொள்ளவும், மனிதக் கொள்கைகளை அங்கீகரித்து அதற்குக் கீழ்ப்படியவும், மனித அமைப்பைச் சார்ந்து, மனிதத் திட்டங்களுக்கு ஆதரவாக இருக்கும்படியவும் கட்டுப் படுத்துகிறது. ஆனால், வேதகாம அடிப்படையிலான ஞானஸ்நானம் ஒருவரை தெய்வீக நாமத்தைத் தரிக்கவும், தெய்வீகச் செய்திக்கு கீழ்ப்படியவும், தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் பங்கெடுக்கவும் வலியுறுத்துகிறது. மார்க்கப் பிரிவினை சபையாரின் ஞானஸ்நானம் கிறிஸ்துவிடத்திலும் அவருடைய ராஜ்யத் திடத்திலும் ஜனங்களை கவர்ந்திழுக்காமல் மார்க்கப்பிரிவினை சபைகளுக்கு இழுக்கிறது.

# நம் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் முக்கியமானதா?

## "*IS BAPTISM IMPORTANT FOR OUR SALVATION?*"

***Reuben Emperado***

நம் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் முக்கியமானதா? மனிதனை இரட்சிப்ப தற்கான தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் அது சேர்க்கப்பட்டிருக்கிறதா? தண்ணீர் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? இக்காரியம் பற்றி பல மனித அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஆனால், இப்பாடத்தில் ஞானஸ்நானத்தின் வடிவமைப்பைப்பற்றியும், நோக்கத்தைப்பற்றியும் வேத வசனங்களே நமக்குச் சொல்ல அனுமதிப்போம்.

❖ ஞானஸ்நானம் எதற்காக என்று வேதாகமம் வெளிப்படையாகச் சொல்கிறது:

1. சுவிசேஷத்தின் மூலமாக நம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவதற் கானது (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21).
2. அது இயேசுவின் இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பாயிருக்கிறது (அப்போஸ்தலர் 2:38).
3. அது கிறிஸ்துவின் நாமத்தினால் பாவங்கள் கழுவப்படுவதைக் குறிக்கிறது (அப்போஸ்தலர் 22:16).
4. அது கிறிஸ்துவோடு நாம் அடக்கம்பண்ணப்பட்டு எழுந்திருக்கும் வேளையா யிருக்கிறது (ரோமர் 6:3,4; கொலோசெயர் 2:12).
5. அது நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும் வேளையாயிருக்கிறது (கலாத்தியர் 3:26,27).
6. அது மறுபிறப்பை நாம் அனுபவிக்கும் வேளையாயிருக்கிறது (யோவான் 3:3-5).
7. அது தேவனுடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியும் செயலாயிருக்கிறது (மத்தேயு 3:15-17).

❖ ஞானஸ்நானம் இரட்சிப்புக்கானதாகும்:

தண்ணீர் ஞானஸ்நானம் என்கிற பாடத்தை நாம் பரிசீலிக்கும்போது மாற்கு 16:16 வசனம் முக்கியமானதாகும். இந்த ஒரு வசனத்தை மையமாக வைத்தே பல இறையியல் யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த வசனத்தை சரியாகப்

புரிந்து கொள்வது ஞானஸ்நானம் என்கிற முக்கியமான பாடத்தைப் பற்றிய எல்லா தவறான கருத்துக்களையும் நீக்க உதவும்.

"*பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்*" என்றார். (மாற்கு 16:15,16).

இவ்வசனப்பகுதி உண்மையாகவே எதைப் போதிக்கிறது? இந்த வாக்கியம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி, இரட்சிப்பின் நிபந்தனைகள் பற்றி பேசுகிறது. இரண்டாவது பகுதி, ஆக்கினைத்தீர்ப்பிற்கான காரணங்கள் பற்றி பேசுகிறது.

விசுவாசம் மட்டும் என்கிற கொள்கையை ஆதரிப்பவர்கள் மாற்கு 16:16 யை தவறாகப் புரிந்து இதன் போதனையைத் தவிர்க்கிறார்கள் அல்லது அருவருக் கிறார்கள். இவ்வகையான மனப்பான்மை தவறானதும், தேவனுடைய வார்த்தையை எதிர்க்கிறதுமாயிருக்கிறது. இவ்வசனம் எளிமையாகவும், தெளிவாகவும் இருக்கிறது. இவ்வசனத்தின் முதல் பகுதி, யாரெல்லாம் இரட்சிக்கப் படுவார்கள் என்றும், இரண்டாம் பகுதி, யாரெல்லாம் இழந்து போவார்கள் என்று சொல்கிறது. இவ்வசனத்தை நாம் மறுபடியும் பார்ப்போம். *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

**இக்கேள்விகளை உற்றுக் கவனியுங்கள்:**

1. யார் இரட்சிக்கப்படுவர்? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.
2. யார் ஆக்கினைக்குள்ளாகத் தீர்கப்படுவர்? விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் அல்லது அவிசுவாசி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கர்த்தர் சொல்லவே இல்லையே என்று பலர் அடிக்கடி வாக்குவாதம் செய் கிறார்கள். அப்படியானால் மாற்கு 16:16 வசனத்தின் இரண்டாம் பகுதி முதல் பகுதி யை அவமாக்குகிறதா? நிச்சயமாக இல்லை! மேலும்,அவிசுவாசியை நாம் எப்படி ஞானஸ்நானப்படுத்த முடியும்? ஞானஸ்நானத்தை சாத்தியப்படுத்துகிற ஒன்று இருக்கிறதென்றால் அது விசுவாசம் தான்; விசுவாசமில்லையென்றால் ஒருவர் எவ்வித ஆவிக்குரிய தாக்கமுமில்லாமல் வெறுமனே தண்ணீருக்குள் மூழ்குவார். எனவே, ஓர் அவிசுவாசிக்கு ஞானஸ்நானம் எவ்விதத்தில் பிரயோஜனப்படும்? ஒரு பாவியை ஆக்கனைக்குள்ளாக்குவதற்கு அவிசுவாசம் போதுமானது (யோவான் 3:18).

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிகப்படுவான் என்று இயேசு சொன்னார். ஞானஸநானம் விசுவாசத்தைப் பின் தொடர்ந்து

வருகிறது, விசுவாசத்திற்கு முன்பாக வருவதில்லை. இரட்சிப்பு என்பது கூட்டுச் செயல்களின் விளைவாகத்தான் இருக்கிறது. அவிசுவாசம் ஞானஸ்நானத்தை அசாத்தியமான ஒன்றாக ஆக்கி தேவனுடைய கட்டளையைப் பரியாசப் பொருளாக மாற்றி விடுகிறது (எபிரெயர் 11:6).

மேலும், நம் கர்த்தர் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று சொன்னபோது விசுவாசத்தையும், ஞானஸ் நானத்தையும் இரட்சிப்புக்குத் தேவையானவைகளாக ஆக்கிவிட்டார். இதுவே அந்தக் கேள்விக்கான பதிலைத் தருகிறது: தேவனுடைய ஊழியக்காரன் ஒருவன் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்வான் (1 சாமுவேல் 3:10). ஆனால், பெருமையும், கலகமும் நிறைந்த ஒருவன்: கர்த்தாவே உம் அடியேன் சொல்வதைக் கேளும் என்று சொல்வான்.

கீழ்க்காணும் உதாரணத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்: ஒரு மனிதன் ஆகாரத்தை உட்கொண்டு அது ஜீரணமாகும்போது அவன் உயிர் வாழ்வான்; ஆனால், ஆகாரத்தை உட்கொள்ளாமலும்,ஜீரணம் ஆகாமலும் இருக்கிறவன் மரிப்பான் என்று சொல்ல அவசியம் இருக்கிறதா என்று சற்று போசித்துப்பாருங்கள். ஒருவன் புசிக்க மறுத்தால் ஜீரணமாவதற்கு ஒன்றுமில்லை என்பதுதானே உட்பொருள்.

விசுவாசமும், ஞானஸ்நானமும் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந் துள்ளது. அவைகள் ஒன்றுக்கொன்று எதிரான செயல்பாடுகளை உடையவை களல்ல. ஞானஸ்நானம் விசுவாசத்தை அவமாக்குவதில்லை; அதுபோல், அது தேவனுடைய கிருபையையும் அவமாக்குவதில்லை. ஞானஸ்நானம் என்பது மெய்யான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுள்ள இருதயத்தின் நிரூபணமாயிருக் கிறது. ஞானஸ்நானம் இரட்சிக்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவின் வார்த்தை அப்படிச் செய்கிறதாக சொல்கிறது. மனிதர்கள் தவறாக யூகித்திருக்கிறபடி ஞான ஸ்நானம் என்பது இரட்சிப்பை அடைவதற்கான மற்றுமொரு வழியல்ல. அது கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு போட்டியிடுவதில்லை; அது உண்மையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிரூபணமாகும். ஞானஸ்நானத்தில் தான் சுவிசேஷத்தின் முழு சித்திரமும் சித்தரிக்கப்படுகிறது. ஒரு பாவி ஞானஸ்நானத்தில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றழைக்கப்படும் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலுக்கு ஒப்பாக இருக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார் (ரோமர் 6:34; கொலோசெயர் 2:10). ஞானஸ்நானம் பெற மறுக்கும் ஒருவர் விசுவாசியாயிருக்க முடியாது. மாறாக, கலகக்காரராகவும், அவிசுவாசியாகவும் இருக்கிறார் (லூக்கா 7:30). ஓர் உண்மையான விசுவாசி தேவனுடைய சித்தத்திற்கு எதிராக வாக்குவாதம் செய்ய மாட்டார். ஆனால், அவருடைய சித்தத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக் கொடுப்பார் (அப்போஸ்தலர் 2:38-41; மாற்கு 16:16).

**ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானது**

பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்

கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38).

இவ்வசனப்பகுதி ஞானஸ்நானத்தின் நோக்கத்தை தெளிவாக வெளிப் படுத்துகிறது. அது பாவமன்னிப்புக்கானது. ஆயினும், மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தினரால் பரப்பிவிடப்பட்டிருக்கும் தவறான கொள்கைகளினால் இவ்வசனப் பகுதியின் பொருள் திரிந்து, நாசமாக்கப்பட்டு, ஞானஸ்நானமானது பாவ மன்னிப் பினால் பெறும் ஒரு செயலாகவும், அது உட்புற நிலையின் வெளிப்புற வெளிப் பாடாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

பாப்டிஸ்ட் சபையைச் சார்ந்த ஒரு மேதை, நேர்மையாகவும் உண்மை யாகவும் அப்போஸ்தலர் 2:38 பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம் பற்றி தான் பேசுகிறது என்று ஒத்துக்கொண்டார்.

ஜூலை 1877 ல் ஒரு பாப்டிஸ்ட் ஊழியக்காரரால் ஞானஸ்நானமும் " பாவ மனிப்பும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டது. அவர் அக்கட்டுரையில் தன் சகோதரர்களை, அதாவது பாப்டிஸ்ட் சகோதரர்களை கடுமையாகச் சாடினார். ஏனென்றால், பாவமன்னிப்புக்கென்று அர்த்தம் கொள்ளும் வாக்கியத்தை பாவ மன்னிப்பினால் என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்று கடிந்து கொண்டார். அதாவது, அவர் சொன்ன கருத்து. நாம் முன்னோக்கிப் பார்க்க வேண்டும். பின்னோக்கிப் பார்க்ககூடாது. அதன் பொருள் ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாகத்தான். ஆயினும், அவருடைய வார்த்தைகள் பாப்படிஸ்களுக்கிடையே எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

தெளிவாகவே, மாற்கு 16:16 மற்றும் அப்போஸ்தலர் 2:38 ஆகிய வசனங்கள் மனிதனுடைய கடந்த கால பாவங்களிலிருந்து அவனை இரட்சிக்க ஞானஸ்நானம் அவசியமானது என்று தான் போதிக்கின்றன. மெய்யான ஞான ஸ்நானத்திற்கு முன்பாக, உண்மையான விசுவாசம், உண்மையான மனந் திரும்புதல், கிறிஸ்து இயேசுவினிடத்தில் ஒருவருக்கு இருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுதல் போன்றவைகள் வரவேண்டும் (அப்போஸ்தலர் 8:38; ரோமர் 10:10; அப்போஸ்தலர் 2:38). இந்த ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத் தினால் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்பட வேண்டும் (அப்போஸ்தலர் 2:38; மத்தேயு 28:18-20). இதைத்தான் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டார். அதை நாம் ஒவ்வொருவரும் விசுவாசித்து மதிப்புக் கொடுத்து கீழ்ப்படிந்து மற்றவர்களுக்கும் போதிக்க தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

## பொறுப்பு

**நமக்கு நடக்கும் எல்லாவற்றுக்கும் நம்மில் ஒருவரும் பொறுப்பல்ல. ஆனால், சம்பவங்கள் நமக்கு எதிராக நடக்கும்போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதற்கு நாம் தான் பொறுப்பு.**

# ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்?

## Who Sets Yardstick for Spirituality?

***Bob***

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்வது எனக்கு மிகவும் விருப்பம். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு, ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு போகும் போது அங்கே, சட்டங்கள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்தாலும் நான் செல்லும் தேசங்களிலுள்ள சட்டங்கள் என்னைக் கட்டுப்படுத்தும் என்கிற உண்மையை நான் அறிந்திருக்கிறேன். ஒவ்வொரு நாட்டிலுள்ள சட்டங்கள் எல்லாவற்றையும் குறிப்பாக அறிந்து கொள்வது எனக்கும் அல்லது வேறுயாருக்கும் முடியாத காரியம். இது உண்மையாக இருக்கிறபடியால், இது கீழ்க்காணும் கேள்விகளை எழுப்புகிறது.

1. இந்த தேசங்களின் சட்டங்களை நான் முழுமையாக அறியவில்லை என்றாலும் அந்த சட்டங்களுக்கு நான் பொறுப்பாளியா? ஆம்.
2. அந்தச் சட்டங்களை கற்றுக்கொள்வதற்கு எனக்கு நேரம் இல்லை என்றாலோ அல்லது அவைகளை கற்றுக்கொள்ள மறுத்தாலோ அதற்கு நான் பொறுப்பாளியா? ஆம்.
3. என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள் அல்லது என் தேசத்தின் கலாச்சாரமோ, அந்தச் சட்டங்களை மாற்ற முடியுமா அல்லது எனக்கேற்ப அந்தச்சட்டங்கள் மாற்றப்படுமா? மாற்றப்படாது.
4. இந்த தேசங்களுக்குள் நான் சட்டத்தை மீறினால், என் அறியாமைக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா? இல்லை

நம்மால் இனியும் கூடுதலான கேள்விகளை கேட்க முடியும். ஆனால், நம்மெல்லாருக்கும் நான் சொல்கின்ற கருத்து புரியும் என நினைக்கிறேன். இந்த தேசங்கள், அது எந்த தேசமாக இருந்தாலும் சரி, அந்த தேசத்திற்குள் இருக்கும் எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும் என ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. எல்லா மக்களும், அவர்கள் அந்த நாட்டு குடிமக்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அந்த குறிப்பிட்ட ஒரு நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிலைக்குப் பொறுப்பாளிகளாயிருக்கிறார்கள்.

இது தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவிலும் வெளிப்படையாகவே உண்மையயிருக்கிறது. தேவன் ஓர் அளவுகோலை ஏற்படுத்தியிருக்கிறார். அதை தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகமத்தில் நாம் கண்டுகொள்ள முடியும். ஒவ்வொருவரும் தேவன் ஏற்படுத்தியிருக்கிற அளவுகோலுக்கு பொறுப்பாளியாக

இருக்கிறார்கள். அவர்கள் அதை அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, அது அவர்கள் அதை கற்றுக்கொள்ள நேரத்தை ஒதுக்கினாலும் சரி, ஒதுக்காவிட்டாலும் சரி எல்லோரும் தேவனுடைய அளவுகோலுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள் அல்லது கலாச்சாரம் தேவனுடைய அளவுகோலை மாற்றாது. அதே போல எனக்கேற்றவாறு தேவன் தம்முடைய அளவுகோலை மாற்றமாட்டார். தேவன் பாவமில்லாத தம்முடைய ஒரே பேறான குமாரனை காப்பாற்றும்படியாக தம்முடைய திட்டத்தை மாற்றவில்லை என்றால், உங்களையும் என்னையும் காப்பாற்றும்படியாக தம்முடைய திட்டத்தை மாற்ற மாட்டார் என்பதை நினைத்துப்பாருங்கள் (எபிரெயர் 5:7-9). அறியாமை ஒரு விதி விலக்காக சாக்காக அமையாது (அப். 17:30). இது உண்மையென்று நாம் அறிந்திருக்கிறபடியால், மற்றவர்கள் ஆயத்தமாகும்படி நாம் அவர்களுக்குச் சொல்ல இது நம்மை ஏவ வேண்டும் (II கொரி 5:10-11).

நம் தேவனுடைய திட்டம் அவருடைய முடிவில்லாத ஞானத்தையும், அன்பையும் நிரூபிக்கிறது. நமக்கு போராட்டங்கள் உண்டாகும் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் தான் தம் குமாரனுடைய மரணத்தின் மூலமாக மனித இனத்திற்கு அவர் மன்னிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் எப்படி வாழவேண்டும் என மிகச் சிறந்த மாதிரியை இயேசு நமக்கு வைத்துவிட்டு, மனித இனம் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு வழியை உண்டாக்குவதற்காக அவர் மரித்தார். இயேசு நம் ராஜாவாக இருக்கிறபடி யால் அந்த அதிகார அளவுகோலுக்கு நாம் தாழ்மையாகக் கீழ்ப்படிவதே நமக்கு ஒரே வழி.

பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நம் விசுவாசத்தைக்கொண்டு கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் நம்மை மன்னித்து கிறிஸ்து எந்த சபையைக் கட்டும்படி வந்தாரோ அந்த சபையிலே நம்மைச் சேர்த்துக் கொள்வார் என்கின்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. (கொலோ 2:12; மத்தேயு 16:18; அப். 2:38-47; 20:28).

நம் வாழ்க்கையில் சோதனைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நமக்கு உதவிட ஆறுதலையும், பெலத்தையும் நாம் இங்கே கண்டுகொள்ள முடியும்.

## கிறிஸ்துவின் தனித்துவம்

| | | |
|---|---|---|
| 1. | எப்போதும் இருக்கிறபடியால்... | - யோவான் 1:1-3 |
| 2. | தன்னுடைய பிறப்பினால் ... | - மத்தேயு 1:22,23 |
| 3. | பூரணமான வாழ்க்கையினால் ... | - 1 பேதுரு 2:22 |
| 4. | உபதேசம், மற்றும் சத்தியத்தால்... | - மத். 7:28,29; யோவான்14:6 |
| 5. | தன்னுடைய தியாகத்தால் ... | - எபி. 1:18,19 |
| 6. | தன்னுடைய உயிர்த்தெழுதலினால்... | - 1 கொரி. 15:12 |
| 7. | மீட்பின் திட்டத்தினால் ... | - 1 கொரி. 8:9 |

சபை

# கிறிஸ்துவுக்காக கிளர்ந்தெழுதல்

## EXCITED FOR CHRIST

### *Maxie B. Boren*



நமக்கு உற்சாகமுள்ள கிறிஸ்தவர்கள் தேவையில்லை - நம்மிடம் ஏற்னேவே ஆயிரக்கணக்கான உற்சாகமுள்ள கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்- ஆனால், அவர்கள் உலகத்திற்காக உற்சாகமாக இருக்கிறார்கள்! ஆனால், நமக்குத் தேவை கிறிஸ்துவுக்காக உற்சாகமாக செயல்படுகிறவர்கள் தான். ஆனால், தேவனுக்காகச் செயல்பட ஏற்கனவே, வைராக்கியமும் கொண்ட தேவப் பிள்ளைகள் தேவை. மீட்கப்பட்டவர்கள், பலரை மீட்கும் படியாகத் தேவை - கிறிஸ்துவைப் பற்றி சொல்லப் பட்டவர்கள், அவரைப் பற்றி வேறு அநேகருக்குச் சொல்லத் தேவை - ஆதாயப்படுத்தப்பட்டவர்கள், அநேகரை ஆதாயப்படுத்தத் தேவை.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்காகவும், அவருடைய காரியங்களுக் காகவும் உற்சாகமும், உத்வேகமும் கொண்ட கிறிஸ்தவர்கள் தேவை! அதிகமாக கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டு, தங்கள் நேரத்தையும், பணத்தையும் தாலந்து களையும், தன்னலமற்ற முறையில் கர்த்தருக்காகக் கொடுக்கிறவர்கள் தேவை. உற்சாகமின்மையையும் அரை குறைமனதையும், சாதாரண மன நிலையையும் துறந்த தேவ பக்தியுள்ள பிள்ளைகள் போதுமானளவு தேவை.

அப்பொழுது, கர்த்தருடைய சபை வெதுவெதுப்பான நிலையையும், உற்சாகமின்மையையும் குழி தோண்டி புதைத்துவிட்டு, முன்பெப்போதுமில்லாத அளவுக்கு உற்சாகத்துடன் காணப்படும்! ஆதலால், தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லி யிருக்கிறார் (எபேசியர் 5:14).

தீயிட்டு, தீ கொளுந்து விட்டு எரியும்படி செய்யுங்கள்! இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் நாம் விளக்கேற்றுவோம் - போர் என்னும் ஜுவாலைகளினால் நாம் இவ்வுலகில் விளக்கேற்றாமல் நம்மை இரட்சிக்கும் கர்த்தரும், ராஜாவுமா யிருக்கிற கிறிஸ்து என்னும் வெளிச்சத்தினால் நாம் ஒளிவீசுவோம். எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் உலகத்தின் காரியங்களுக்காக கிளர்ந்தெழுவதை விட்டுவிட்டு கிறிஸ்துவுக்காகவும் அவருடைய காரியங்களுக்காகவும் கிளர்ந்தெழ வேண்டு மென்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

# கிறிஸ்துவின் மணவாட்டி

## THE BRIDE OF CHRIST

***Rusty woods***

**வே**தாகம எழுத்தாளர்களின்படி, தேவன் எப்போதுமே தம்முடைய மண வாட்டியை எப்படி நடத்த வேண்டுமென்பதை நன்றாகவே அறிந்திருக்கிறார். எசேக்கியேல் பதினாறாம் அதிகாரம், தேவன் தம்முடைய மணவாட்டியாகிய இஸ்ரவேலுக்கு சித்திரத்தையலாடை உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளைத் தரித்து, கட்ட மெல்லிய புடவைவயயும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் கொடுத்து, ஆபரணங்களால் அலங்கரித்து, நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், காதுகளில் காதணிகளையும், தலையின்மேல் சிங்காரமான கிரீடம் தரித்தது பற்றியும் பேசுகிறது.

புதிய ஏற்பாட்டுக்குத் திரும்பும்போது கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தன் மணவாளனாகிய கிறிஸ்துவுக்காக கறைதிரையற்றதாக இருக்க வேண்டுமென்று பவுல் சொல்வதை நாம் பார்க்கமுடியும். கிறிஸ்து தன் மணவாட்டி மீது கொண்டிருந்த அன்பையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தும்விதமாக தம்மையே ஒப்புக்கொடுத்தார். இவ்விதமாக அவர் மணவாட்டி மகிமையாகவும் அழகாகவும், கறை திரையற்றதாகவும் திகழும்படியான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நான் சமீபகாலமாக அர்ப்பணிப்பு இல்லாத காரணத்தினாலும், சபையில் சக கிறிஸ்தவர்களோடு ஏற்பட்ட மோதல்களாலும் சபையை விட்டு விலகி வேறு இடங்களில் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றச் சென்றிருக்கிற மக்களோடு நேரடியாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

ஒருவேளை நீங்களும் கூட உங்கள் உண்மையுள்ள நண்பன் இவ்விதமாகச் சொல்லக் கேட்டிருக்கலாம். வாரத்திற்கு ஒரு முறை அருகிலிருக்கும் டீக்கடையில் நண்பர்களை சந்திப்பதினால் எங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுகிறது. இது முக்கியமான காரியங்களைக் குறித்து விவாதிக்க ஏதுவாயிருக்கிறது. அல்லது ஒருவேளை யாரோ ஒருவர் இப்படிச் சொல்ல நீங்கள் கேட்டிருக்கலாம். அருகிலிருக்கும் மருத்துவமனையில் நானாகவே முன்வந்து கிறிஸ்து எப்படி சேவைச் செய்தாரோ அதுபோல் செய்ய ஆசைப்படுகிறேன், அது தான் என் சபை என்று.

மேற்சொல்லப்பட்ட காரியங்களின் முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. குறிப்பாக, நான் தற்போது வேலைச் செய்து கொண்டிருக்கிற கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரை சேவையும், சமுதாயப் பணிகளும் அவர்களுடைய கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக இருப்பதால் எனக்கு எப்போதும் அதன் மீது பெரிய மரியாதை உண்டு.

ஆயினும், இந்த செயல்களையெல்லாம் சபையானது மரியாதையாகவும், துல்லியமாகவும் பெண்தோழி அல்லது மணவாட்டியின் தோழியினுடைய பணிகளாகத்தான் அடையாளங் காண்கிறது - மணவாட்டியின் பணியாக அல்ல. மணவாட்டி மேலிருந்து கீழ்வரை கிறிஸ்துவின் முழு சரீரமாயிருக்கிறது - அதாவது, அது வயதானவர்கள், வாலிபர்கள், ஏழைகள், பணக்காரர் போன்ற அப்பகுதியில் வாழும் தேவனுடைய கிருபையுள்ள விசுவாசப் பிள்ளைகளை உள்ளடக்கியது. இத்தனை வித்தியாசங்கள் இருந்தபோதிலும் ஆவிக்குரிய முதிர்ச்சி அடையும்படி ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தும்படி ஒட்டு மொத்த அங்கத்தினர்களுள் கிறிஸ்துவின் அழகான மணவாட்டியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தம் மணவாட்டியை கறைதிரையற்றதாக ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவின் தீவிர ஆசையை, சபையாகிய நாம் அவருடைய அர்ப்பணிப்பை கனப்படுத்தும் வகையில் வாழ்க்கை வாழ நம்மை ஊக்கப்படுத்த அனுமதிக்க வேண்டும். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றமுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5:25,27).

## ஜாக்கிரதையாயிருங்கள்

❖ உங்கள் எண்ணங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் ஏனென்றால், அவைகள் தான் வார்த்தைகளாகின்றன

❖ உங்கள் வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் ஏனென்றால், அவைகள் தான் செயல்களாகின்றன

❖ உங்கள் செயல்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் ஏனென்றால், அவைகள் தான் பழக்கங்களாகின்றன

❖ உங்கள் பழக்க வழக்கங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் ஏனென்றால், அவைகள் தான் உங்கள் குணாதிசயங்களாகின்றன

❖ உங்கள் குணாதிசயங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் ஏனென்றால், அவைகள் தான் உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கிறது.

# நான் சபைக்கு எவ்வளவு பயனுள்ளவனாயிருக்கிறேன்?

## WHAT AM I WORTH THE CHURCH?

***Richard Batten***

கிறிஸ்து சபையை வாங்குவதற்கு மிகப்பெரிய விலையைக் கொடுத்தார் (அப்போஸ்தலர் 20:28). சபை அவருக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்திருக்க வேண்டும். சபையில் மட்டுமே என்னால் தேவனுடைய ஊழியஞ் செய்து, அதற்குப் பிரதிபலனாக என் மரணத்திற்குப் பிறகு அதற்கான பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் (1 கொரிந்தியர் 15:48). வியாபார ரீதியாக நாம் பார்க்கும் போது ஒருவர் ஒரு கம்பெனியின் சம்பளப் பதிவேட்டில் நிலைத்திருக்க வேண்டு மென்றால் அவர் அக்கம்பெனியின் பொது நலனில் தன் பங்களிப்பை கொடுத் திருக்க வேண்டுமென்பதை எல்லோரும் சுலபமாகப் புரிந்து கொள்வார்கள். ஒரு கம்பெனி என் பெயரை அவர்களுடைய பதிவேட்டில் வைத்திருக்க வேண்டு மென்றால் என் செயல்பாட்டில் அவர்கள் திருப்தியடைய வேண்டும். இது சபை யிலும் உண்மையாயிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 3:1-5 ல் நாம் வாசிக்கும் போது அந்த சர்தை சபையிலிருந்தவர்களுடைய செயல்பாடுகளில் தேவன் அதிருப்தியடைந்து ஜீவபுத்தகத்திலிருந்து அவர்களுடைய பெயரை கிறுக்கிப்போட்டார் என்று பார்க்கிறோம்.

நம் பணி தேர்தலினால் முடிவு செய்யப்படுகிறதென்று நாம் யூகித்துக் கொள்வோம். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நாம் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட பிரச்சாரம் செய்ய வேண்டும். அப்பிரச்சாரத்திற்கு நாம் எவைகளைப் பயன்படுத்து வோம். 1. என் சாதனைகளை, நான் உங்களுக்காகச் செய்திருக்கிறவைகளைக் கவனியுங்கள். 2. என் தகுதிகளை, அனுபவத்தை, தாலந்துகளை கவனியுங்கள் 3. இதை நான் உறுதியாகச் செய்வேன் என்று வாக்குக் கொடுக்கிறேன். சபையில் நான் உறுப்பினராயிருக்க தேர்தல் வைக்கப்பட்டால் நான் மறுபடியும் தேர்ந்தெடுக் கப்படுவேனா? என்னால் நம்பத் தகுந்தவனாயிருக்க முடியுமா அல்லது வெறுமனே எண்ணிக்கையில் தான் இருப்பேனா? என் வருகையைப் பற்றி எப்படி? சபை வளர்ச்சிக்காக என் பங்களிப்பை ஆற்றவேண்டுமென்று எதிர் பார்க்கிறேனா? தேவையில் இருப்போரை நான் போய் சந்திக்கிறேனா? அவர்கள் வந்து என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேனா? சபைப் பதிவேட்டில் என் பெயர் இடம் பெற்றிருப்பது சபைக்கு வலு சேர்ப்பதாக இருக்கிறதா அல்லது

நிந்தையைக் கொண்டுவருகிறதா? நான் சபைக்கு பிரச்சனையாக இருக்கிறேனா அல்லது சபையை மேம்படுத்துகிறேனா? நான் சபையில் ஒரு பார்வையாளனாக மட்டும் இருக்கிறேனா?.

பலர் சீயோன் என்னும் படகில் இருந்து கொண்டு காலமென்னும் கடலைக் கடந்து பரலோகக் கரை சேர விரும்புகிறார்கள். ஆனால், பலர் துடுப்பைப் பிடித்து தண்ணீரைத் தள்ள விரும்புவதில்லை. எசேக்கியா தன் வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்படிக்குக் கட்டளையிடப்பட்டதை நினைவில் கொள்ளுங்கள். அவன் அழுது ஜெபித்தான். கர்த்தரிடத்தில் அவன் ஏறெடுத்த விண்ணப்பத்தைக் கவனியுங்கள். ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் (2 ராஜா 20:3). இதே விதமான சூழ்நிலையை நாம் எதிர் கொண்டால் கர்த்தரிடத்தில் எந்த செயல்பாடுகளை அடிப்படையாக வைத்து விண்ணப்பிப்போம்? கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களை உண்மையாக சபை கூடி வரச் செய்வது கடினமாகிப் போய்கொண்டிருக்கிறது. ஆத்தும ஆதாயப் பணியில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இக்காரியத்தில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?

# மாறாதது

உணர்வுகள் வரும் போகும்
உணர்வுகள் வஞ்சனையுள்ளது

என் உத்தரவாதம் தேவனுடைய வார்த்தைக்கே
வேறொன்றும் நம்பத்தகுந்தவைகளல்ல.

ஆத்துமாவும், சரீரமும் அழிந்து போகும் வரை
மாறாத தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கையாயிருப்பேன்

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவருடைய
வார்த்தை எனறென்றும் நிலைத்திருக்கும்

# மந்தையைக் கண்காணித்தல்

## Overseeing the Flock

*Jerry Jenkins*

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களை சந்தித்த போது அவர்களுக்கு இவ்விதமாகப் புத்திமதி சொன்னார். " *ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்கணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்* " (அப். 20:28).

மூப்பர்களை நான் எப்போதுமே மதிப்பதுண்டு. வழக்கமாக அவர்கள் உதவி பெற்றுக்கொண்டு சேவைச் செய்வதில்லை. ஆனால், பெரும்பாலும் அவர்கள் பாராட்டப்படுவதுமில்லை. மூப்பர்களால் தாங்கள் தவறாக நடத்தப் பட்டதாக சில பிரசங்கியார்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் எந்தெந்த மூப்பர்களிடமெல்லாம் சேவை செய்திருக்கிறேனோ, அவர்களெல் லாரும் என்னிடம் நியாயமாகவும், எனக்கு ஆதரவாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட தர்ம சங்கடமான நிலையைக் குறித்து கடும் வேதனை அடைவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் என்ன வெல்லாம், எப்போதெல்லாம் முடிவெடுக்கிறார்களோ அது மற்றவர்களுக்கு காயத்தையும், கெட்ட எண்ணத்தையும் ஏற்படுத்தும்.

மூப்பர்கள் சபையைக் காண்காணிக்கும் போது எண்ணற்ற காரணிகள் நினைவில் வைக்கப்பட வேண்டும்.

### 1. *கண்காணிப்பு சர்வதிகாரமுடையதாக இருக்கக்கூடாது*

சபை என்னும் சங்கத்தில், மூப்பர்கள் இயக்குநர்களின் குழுவாக இருக்கக் கூடாது. ஆவிக்குரிய குடும்பத்தின் சிறந்த முன்னுதாரணமுள்ள தலைவர்களாக இருக்கிறார்கள். மூப்பர்கள் அலுவல் கூட்டங்களில் எந்த அளவு நேரத்தைச் செலவு செய்கிறார்களோ அதுவே அவர்கள் தாழ்மையான வேலைக்காரர்களாக இராமல் அதிகாரிகளாக இருக்க விரும்புவதை காட்டிக் கொடுக்கிறது. புண்படுத்திவிட்டு அல்லது வழி தப்பிச் செல்கிற சபை அங்கத்தினர்களிடம் ஒரு மேலாளரைப் போல் மூப்பர்கள் நடந்து கொண்டால் அவர்கள் எச்சரிக்கப்பட வேண்டும்.

## 2. கண்காணிப்பை மூப்பர்கள் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்; இது பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது, ஒருமையில் அல்ல

மூப்பர்கள் செலுத்தும் அதிகாரம் ஒரு மூப்பர் ஒரு குறிப்பிட்ட பணியை பார்த்துக் கொள்ளும்படி பிரதிநிதிப்படுத்தப்பட்டாலொழிய மூப்பர்கள் பன்மையில் தான் அதிகாரத்தை செலுத்த வேண்டும். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் ஒரு மூப்பர் தனியாக அதிகாரத்தைச் செலுத்தக் கூடாது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பிராந்திய சபையில் இரண்டு மூப்பர்கள் இருக்கும்போது, ஒருவர் இறந்து விட்டால் மற்றொருவர் ராஜினாமா செய்து விட வேண்டும், ஏனென்றால், தேவன் தம்முடைய சபையை கண் காணிக்க ஒருபோதும் ஒரு மனிதரை ஒழுங்குபடுத்தவில்லை.

சபை அங்கத்தினர்கள், சில கேள்விகள் கேட்டு தேவ பக்தியுள்ள மூப்பர் ஒருவர் அதற்கு பதிலளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி அவரை ஓரம் கட்டுவதினால் அவர் தன்னுடைய எல்லையைத் தாண்டாமல் இருக்க உதவிச் செய்ய முடியும். அங்கத்தினர்கள் சில அனுகூலமான செல்வாக்கைப் பெற்றுக் கொள்வதற்காக மூப்பரின் நட்பைப் பெற முயற்சிப்பதை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குப் புறம்பான இத்தகைய செயல்பாடுகளெல்லாம் ஒவ்வொரு தேவ பக்தியுள்ள மூப்பரும் நான் எந்த ஒரு கேள்விக்கும் பதில் அளிப்பதற்கு முன்பாக சக மூப்பர்களின் முடிவுக்காக காத்திருக்கும்போது நின்றுவிடும்.

## 3. மூப்பர்கள் தங்களுக்குத் தாமே அல்ல மந்தையை கண்காணிக்க வேண்டும்

நான் இப்படிச் சொல்வதன் பொருள் மூப்பர்கள் எப்போதுமே தங்கள் இருதயங்களில் மந்தையைக் குறித்த நலனை வைத்திருக்க வேண்டும். பிரச்சனைகள் அதிகமாக ஏற்படும்போது செயல்படுவதற்கு சுலபமான வழி பெருமளவில் பலரை ஐக்கியத்தை விட்டு நீக்குவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள், சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்காகவும் இயேசு மரித்தார் என்பதையும், ஒரு ஆத்துமா பரலோகம் போவதற்கு உதவிச் செய்ய அதற்காக எந்த முயற்சி எடுத்தாலும் அது தகும் என்பதை அறிந்திருக்கிறார்கள். அங்கத்தினர்களை ஒழுங்குபடுத்துவதற்கு மூப்பர்களுக்கு சுலபமான வழி சீர்திருத்தக் கடிதம் எழுதுவதுதான். ஆனால், தேவ பக்தியுள்ள மூப்பர்கள் தனிப் பட்ட முறையில், முகமுகமாக அவர்களுக்குப் போதிப்பதை விட சிறந்த தகவல் தொடர்பு சாதனம் இல்லை என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

நீண்ட காலத்திற்கு முன்பு எசேக்கியேல் இஸ்ரவேலின் மேய்ப்பர்களுக்கு அறிவுரை வழங்கினார். அது இன்றும் தேவனுடைய ஆவிக்குரிய மந்தையின் மேய்ப்பர்களுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

" கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்; மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்க தரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்; கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்கிறார்; தங்களாலே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும். நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு ஆட்டு மயிரை உடுப்பாக்கிக் கொள்ளு கிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமற் போகிறீர்கள். நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத் துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும் காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கொடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங் களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சிதறித்திரிகிறது; விசாரிக்கிறவனு மில்லை, தேடுகிறவனுமில்லை, ஆகையால், மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; மேய்ப்புன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள் " (எசே. 34:1,8).

## ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு ஆண்டவர்

பூலோகத்தாராலே நம்பப்படுகிற
ஏராளமான கடவுள்களில் ஒருவரல்ல.
இன்னும்,
ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற
குறிப்பிடத்தக்க மகான்களில் ஒருவருமல்ல.
மாறாக,
இப்பாமுலகைப் பாவத்தின் பிடியிலிருந்து
மீட்கும்படியாக வந்துதித்த உலக இரட்சகர்



# அக்கினியிலிருந்து இடித்து வெளியேற்றுதல்

## "SNATCHING FROM THE FIRE?"

*J. Randal Matney*

ஒரு நாள் இரவு அமெரிக்காவிலுள்ள அலபாமாவிலுள்ள என் சகோதரியின் மகள் அங்கு தாக்கிய டொர்னேடோ புயலினால் தன் வீட்டை இழந்து விட்டதாக எனக்கு சற்று நேரத்திற்கு முன்பாக செய்தி அனுப்பினாள். அவள் கிட்டதட்ட தன் ஆண் குழந்தையை இழந்து விட்டாள். ஆனால், அவள் கணவன் சுதாரித்துக் கொண்டு அந்த டொர்னேடோ புயல் தங்கள் அடுக்குமாடிக்கட்டிடத்தின் கூரையைத் தூக்கியபோது அக்குழந்தையின் காலை பிடித்து காற்று கொண்டு செல்லாதபடி இழுத்துவிட்டார். எல்லோரும் உயிருடனும், பாதுகாப்பாகவும் இருக்கிறார்கள். அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! உங்கள் ஜெபங்களில் அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

டொர்னேடோ புயலினால் இழுத்துச் செல்லப்படும் தன் குழந்தையை பிடித்து இழுக்க ஒரு தகப்பன் எவ்வளவு காலதாமதம் செய்வான்? தங்கள் குழந்தையைப் புயலில் இருந்து காப்பாற்ற பெற்றோர் எவ்வளவு நேரம் யோசிப்பார்கள்?

ஒரு தகப்பனுக்கு சரீரப்பிரகாரமான உயிர் விலையேறப்பெற்றதாயிருக்கும் போது, சர்வத்தையும் சிருஷ்டித்த பிதாவுக்கு ஓர் ஆத்துமா எவ்வளவு விலையேறப் பெற்றது? அல்லாமலும் நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத் தோடே இரட்சித்து மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள் (லூக்கா 20,23).



நாம் வேத வசனங்களைப் படிக்கிறோம், காரியங்களை மெதுவாகச் செய்கிறோம், பேசுகிறோம் பின்பு செயல் படக் காத்திருக்கிறோம். கொள்கைகளை உருவாக்குகிறோம். ஆனால், செயல் படுத்தத் தாமதப்படுத்துகிறோம், பெரும்பாலும் காரியங்களை நடைமுறைப்படுத்த சரியான வாய்ப்புக்காகக் காத்திருக்கிறோம், நாம் ஜனங்களை இரட்சிக்க ஆயத்த மாகிறோம், ஜெபிக்கிறோம், எழுதுகிறோம், பிரசங்கிக்கிறோம். ஆனால், அதற்கிடையில் அக்கினி எரித்து பலரை அழித்து விடுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு பட்டணத்திற்குள் பிரவேசித்து கிறிஸ்துவை அறிவித்தார். ஜனங்களுக்கு தன்மீது நல்லெண்ணம் வரட்டும் என்றோ அல்லது முதலில் அவர்கள் தன்னுடைய சிறந்த உதாரணத்தை அறிய வேண்டுமென்றோ காத்திருக்கவில்லை. அவர் அன்னதான முகாம்களையோ அல்லது மருத்துவ மனையோ அமைக்கவில்லை. அவர் வசதி வாய்ப்புகளை எதிர்பார்க்கவில்லை, பிரசங்கிப்பதற்கு முன்பு கலாச்சாரத்தை கற்றுக் கொள்ளவுமில்லை.

எவ்விதத்தில் பார்த்தாலும் பவுலின் நாட்களுக்கும், நம்முடைய நாட்க ளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. நம் நேரத்தை வீணடிக்கிறோம், சாக்கு போக்குகளைச் சொல்லி நம் நிலையை உறுதிப்படுத்திக் கொள்கிறோம். ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட நேரத்தை குறைத்துக் கொண்டு பொழுதுபோக்கு அம்சங்களில் நாமும் நம் பிள்ளைகளும் நேரத்தை விரயம் செய்கிறோம்.

ஆனால், அதேநேரத்தில் பிசாசனவன் இரவின் அந்தகாரத்திற்கு மின்னல் வேகத்தில் ஆத்துமாக்களை இழுத்துச்செல்கிறான். மாயை என்னும் சுழல் காற்றில் உறிஞ்சுகிறான். தன் மாம்சீக ராஜ்யத்தில் பிரஜைகளாக இருக்கும்படி ஆத்துமாக் களை பறித்துக் கொள்கிறான்.

பிசாசு, பச்சிளங்குழந்தையை படுக்கையிலிருந்து புயலினால் பறித்துக் கொள்ள நாம் ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம்.

# வசன அடிப்படையிலான கொடுத்தலுக்குப் பலன்

*Reward For Scriptural Giving*

**V.P. Black**

### நோக்கம்

கொடுத்தல் ஒரு போதும் ஒருவரை தரித்திரராக்காது என்பதையும், மாறாக அவரை ஐசுவரியவானாக்கும் என்பதையும் மற்றும் கொடுத்தல் காரியத்தில் நாம் தேவனைத் தோற்கடிக்கவும் முடியாது என்பதையும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

கிரியைகள் இல்லாத விசுவாசத்தைத் தேவன் மதிப்பதில்லை, அதுபோல், விசுவாசம் இல்லாத கிரியைகளைத் தேவன் ஏற்று பலன் அளிப்பதில்லை.

### முன்னுரை

தேவன் வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்களை வைத்திருக் கிறார். எந்த ஒரு வாக்குத்தத்தத்தின் மதிப்பும் அதை கொடுக்கிறவரின் மேன்மை மற்றும் நேர்மையைப் பொறுத்து தான் அமையும். மகாமேன்மையும் அருமையு மான வாக்குத்தத்தங்களை தேவன் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுத்திருக் கிறார். " *தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்த வரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்ல மையானது நமக்குத் தந்திருக்கிறது* ". (1பேதுரு 1:3) " *தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லா ரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவரா யிருக்கிறார்* ". (பேதுரு 3:9) " *பொய் சொல்ல தேவன் ஒரு மனிதர் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?* " (எண். 23:19).

தேவன் பண்ணியிருக்கிற மகா பெரிய, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங் களுள் பெரும்பாலானவைகள் நாம் கர்த்தருக்கு கொடுப்பது சம்பந்தமானவைகள். ஒரு மனிதன் " *நான் வேதாகமத்தை விசுவாசிக்கிறேன்* " என்று சொல்லும் போது, அவன் நான் " *தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறேன்* " என்றும் சொல்கிறார். நாம் இக்கருத்தை மிக ஆழமாகப் படிப்பதற்கு முன்பு, நான் உங்களிடத்தில் கேள்வியொன்றை கேட்க விரும்புகிறேன். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவாரா? இதைவிட வேறு முக்கியமான கேள்வி எதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும். எல்லாமே இதைச் சார்ந்து தான் இருக்கிறது. தேவன்

தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினால், வேதாகமம் உண்மையான தாயிருக்கும் மற்றும் அவருடைய வார்த்தைகளையும் நாம் நம்பமுடியும். நம்முடைய பாடத்தில், நம்முடைய பணத்தைக் கர்த்தருடைய வேலையில் முதலீடு செய்வது சம்பந்தமாக செய்திருக்கிற வாக்குத்தத்தங்களை நாம் பார்ப்போம்.

## I தேவன் வாக்குத்தத்தம் செய்த சில காரியங்கள்

பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடை காலமும், மாரிகாலமும், பகலும், இரவும் ஒழிவதில்லை. (ஆதியாகமம் 8:22) இது, வருடங்களின் பருவத்தைப் பற்றி தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தம் ஆகும். தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்ததிலிருந்து இந்த வாக்குத் தத்தம் தவறினதேயில்லை. (ஆதியாகமம் 9:11).

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். (எபிரெயர் 13:5). *மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்* (I கொரிந்தியர் 10:13) ஒரு மனிதன் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந் திரும்பி, இயேசுவின் நாமத்தை அறிக்கை செய்து கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றால் அவனுடைய பாவங்களை மன்னிப்பதாக வாக்குத் தத்தம் செய்திருக்கிறார்.

ஞானஸ்நானம் சம்பந்தமாக தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத் தங்களை தேவன் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்கும் சபை அங்கத்தினர்கள், அதே தேவன் கொடுத்தல் சம்பந்தமான வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்று வார் என்று விசுவாசித்தால் குறுகிய காலத்தில் இந்த உலகத்தில் சுவிசேஷத்தை அறிவித்து விடலாம். மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன், உற்சாகமாய்க் கொடுக் கிறவர்களை தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் இதை நம்புகிறீர்களா?

## II பழைய ஏற்பாட்டில் தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தங்கள்

“ *உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு, அப்போது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்* ”. (நீதிமொழிகள் 3:9-10). ஒவ்வொரு கட்டளைக்கும் அதோடு தொடர்புடைய ஆசீர்வாதம் உண்டு. நம்முடைய விளைச்சல்களில் தேவனுக்கு முதலிடம் கொடுத்தால் நம்முடைய களஞ்சியங் களை பூரணமாய் நிரப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இதை நான் முழு மனதோடு விசுவாசிக்கிறேன். அதோடு கூட இது உண்மை என்பதை என்னுடைய அனுபவத்தால் அறிகிறேன். “ *உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்* ” (*நீதி. 11:25*).

இந்த வாக்கியத்தை சொல் அர்த்த ரீதியில் எடுத்திருந்தால், வெகு குறைந்த மக்கள் செழிப்பாக இருப்பார்கள்.

“ *உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்* ”. (பிரசங்கி 11:1) “ ஆடம் கிளார்க் ” (Adam Clark) இந்த வசனம் சம்பந்தமாகச் சொல்லும் போது, இது நெல் விதைப்பதை மறை முகமாகப் பேசுகிறது என்கிறார். நெல் மணியானது சேற்றில் விதைக்கப்படுகிறது. இது கால்நடைகளின் பாதங்களால் மிதிக்கப்படுகிறது. இப்படியாக இந்த விதை யானது வேர் கொண்டு வளர்ந்து அபரிதமான அறுவடையைக் கொடுக்கிறது. நாம் கர்த்தருக்கு கொடுக்கும் போது அது நல்ல நிலத்தில் விதைக்கப்படும் விதையாயி ருக்கிறது.

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களை யெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பல கனிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகு மட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:10) இதை முயற்சி செய்து பார்த்த மனிதன் இதை உண்மை என்று தன் அனுபவத்தில் அறிந்து கொள்கிறான். இதை முயற்சி செய்து பார்க்காத மனிதர் இது உண்மை தான் என்று சொல்ல அறியாதவனாயிருக்கிறார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு மரித்துப்போன ஒருவருடைய மனைவியாகிய ஒரு விதவை, ஒரு சுவிசேஷப் பிரசங்கியாரிடம் வந்து, அவள் கர்த்தருக்குக் கொடுப்பது சம்பந்தமாக திட்டமிடுவதில் உதவி செய்யு மாறு கேட்டுக்கொண்டாள். அவள் வாரந் தோறும் ஐந்தாயிரம் ரூபாய் தருவதாக தீர்மானம் செய்தாள். இது அவள் உருளைக்கிழங்கு பயிர் செய்வதற்கு முன்பு எடுத்த தீர்மானம். அறுவடைக்கு பிறகு என்னுடைய நண்பரான அந்த பிரசங்கியார் உதாரத்துவமாய் கொடுத்ததற்காக அந்த பெண்ணைப் பாராட்டினார். அந்தப் பெண் இப்படியாகச் சொன்னாள். இந்தப் பண்ணையின் வரலாற்றில் மிகப்பெரிய மகசூலை நாங்கள் கண்டிருக்கிறோம். நான் எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படி நான் கொடுக்க ஆரம்பித்தபோது, தேவன் என் மீது ஆசீர்வாத மழையை பொழியப் பண்ணினார். என் களஞ் சியங்கள் எல்லாம் நிரம்பி வழிகிறது என்று சொன்னாள்.

இதைத் தான் தேவன் உங்களிடமும் என்னிடமும் எதிர்பார்க்கிறார். நீ எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடு. அப்போது நான் வானத்தின் பலகணி களைத் திறந்து உங்களுக்கு மழையையும் செழிப்புள்ள காலங்களையும் தந்து உங்கள் நெற் களஞ்சியங்கள் கொள்ளாதபடியாக தானியங்களால் நிரப்பமாட் டேனோவென்று என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். கர்த்தருக்குக் கொடுப்பது நாம் செய்தே ஆக வேண்டிய ஒரு காரியம்.


நாம் கொடுக்கும் போது நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்தி ருக்கிற தேவன், நாம் கொடுக்காத போது நம்மை சபிப்பதாகவும் சொல்லியிருக் கிறார். எனவே, நாம் கொடுக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார், நாம் கொடுக்காத போது நம்மை சபிக்கிறார். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் கர்த்தருக்குக் கொடுக்க மறுப்பதால் அனுதினமும் சபிக்கப்படுகிறவர்களாயிருக் கிறார்கள்.

# நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்

## *How Do You See This?*

**(1 தெசலோனிக்கேயர் 4:13-18).**

" **அ**ன்றியும் சகோதரரே நித்திரையடைந்தவர்களினி மித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக் கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர் களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டுவருவார் கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்க ளுக்குச் சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத் தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் ".





# எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம்

## *" Peace That Surpasses All Understanding? "*

***Wayne Barrier***

**நா**ம் ஒவ்வொருவரும் நம் வசதி, நம்பிக்கை, பாதுகாப்பு, மற்றும் சமாதானத்தைப் பறித்துச் செல்கின்ற வாழ்க்கைப் போராட்டங்களை எதிர் கொள்கிறோம். நாம் இச்சோதனை களை, உபத்திரவங்களை பல்வேறுவழி களில் மேற்கொள்ள முயற்சிக்கிறோம். சில பிரச்சனைகள் பெரியதும், வல்லமை யானதுமாயிருக்கிறபடியால் அதைத் தீர்க்கத் தொடங்குவதற்கே கடினமாயி ருக்கிறது. போர், அரசியல் சண்டைகள், இயற்கை சீற்றங்கள், பொருளாதார சீர்குலைவு போன்றவைகளால் ஏற்படும் உலக பாதுகாப்பின்மைக்கு ஒரு தனி மனிதனால் என்ன செய்ய முடியும்? சில வேளைகளில் நம் தனிப்பட்ட பிரச்சனை களுக்குத் தீர்வு காண்பதே கடினமாகிப் போய்விடுகிறது. வியாதி, குடும்பப் பிரச்சனைகள், வேலை இழப்பு மற்றும் வேறு சில காரியங்கள் நம்மை ஆட்டு கொண்டு விடுகின்றன. மன அழுத்தத்தி னால் உண்டாகும் வியாதிகள் தான் மருத்தவமனைகள் மற்றும் மருத்துவர் களின் சேவையை நாடுவதில் முதலிடம் வகிக்கின்றன.

இந்த மன அழுத்தத்தை நாம் எப்படி சமாளிக்க முடியும்? நிச்சய மாகவே, கிறிஸ்தவர்களுக்கு இதற்கான

வேதாகமத்தில் பதில்கள் இருக்கின்றன. முதலாவது, பிலிப்பியர் 4:6,7 வசனங்களில் இடம் பெற்றுள்ள செய்தியைக் கவனியுங்கள். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

மத்தேயு 6:24,25 வசனங்களில் இயேசு இவ்விதமாகச் சொல்கிறார்: இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?.... முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள்போதும்.

உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய விசாரிப்பும், பாதுகாப்பும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து நமக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வாக்களித்து நம்மை அழைக்கிறார். வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தரு வேன். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் (மத்தேயு 11: 28-30).


தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய பராமரிப்பு ரோமர் 8:28ல் மேலும் உறுதிசெய்யப்பட்டிக்கிறது. அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

நம் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள் உபத்திரவங்கள் போன்றவற்றிற்கு நம் பதில் தேவன் மீதும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மீதும் நம் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொண்டிருப்பதாகும். நாம் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்கும் போது, அவர் நம் தேவைகளை சந்திப்பார். அவர் மூலமாக எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் நமக்குக் கிடைக்கும்.

# அபிப்ராய பேதங்கள்

## " DIFFERENCE OF OPINION"

*Tom kelton*



ஆபிராமும் லோத்தும் எகிப்தை விட்டு வருவதற்கு முன்பு ஏராள மான ஆடு மாடுகளை சம்பாதித்தார்கள். அதுவே பின்னாளில் அவர்களுக் கிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியது. அவர்கள் ஒரு மித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்க கூடாதிருந்தது (ஆதி 13:7) சூழ்நிலை பதட்டமான ஒரு சூழ்நிலையை உருவாக் கியது. ஆதியாகமம் 13:7-ன் படி ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத் துடைய மந்தை மேய்ப் பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று என்று பார்க்கிறோம்.

லோத்துவின் மந்தை மேய்ப்பர்கள் ஆபிராமின் மந்தை மேய்ப்பர்கள் வேறு இடத்திற்கு மந்தையை நகர்த் தும்படியாக கேட்டுக் கொண் டார்கள். ஆனால், ஆபிராமின் மந்தை மேய்ப்பர்கள் தங்கள் எஜமான் தன்னுடைய நிலத்தை அவர் விரும்பும் விதத்தில் பயன்படுத்த அவருக்கு உரிமை உண்டு என்று மறுப்பு தெரிவித்தார்கள். அவர்களுக்கிடையே வார்த்தைப் போர் வெடித்து விட்டது. அங்கே சூழ்நிலை பதட்டத்தால் நிறைந்து அலங்கோலமாய்ப் போனது. அது மட்டு மல்ல, அச்சண்டையை நேரில் பார்த்தவர்களும் இருந்தார்கள்; அக்காலத்தில் கானானியரும், பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள் (ஆதியாகமம் 13:7). ஒன்றான மெய்த் தேவனுடைய பிரதிநிதிகள் அபிப்ராய வித்தியாசத்தினால் சண்டை யிட்டதை பார்த்த புறஜாதிமக்கள் தேவனுடைய ஜனங்கள் ஒற்றுமையில்லாமல் இருப்பதை கவனித்தார்கள்.

முதிர்ச்சியற்ற கிறிஸ்தவர்கள் அற்ப காரியங்களுக்காக தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள் எந்த வெளிநாட்டு ஊழியத்திற்கு உதவுவது. ஆராதனையின் ஒழுங்கு எப்படி இருக்கவேண்டும்; எந்த வேதாகம மொழியாக்கம் சிறந்தது போன்றவைகளுக்காக கடுமையாகச் சண்டையிடுகிறார்கள்.

சிறு வாய்த்தகராறினால் உடனே காரியங்கள் பெரிதாக வெடித்துவிட்டது. அவர்கள் பெரும்பாலும் பல நாட்களாக புகைந்து ஒருநாளில் திடீரென வெடிக்கிறது. ஒரு பண்டக சாலையில் அதிகமான Nitroglycerine யை வைத்திருந்தால் அங்கே ஏற்படும் ஒரு சிறு அசைவுகூட தீப்பிடித்து வெடிக்கச் செய்துவிடும். இங்கே உண்மை என்னவென்றால், கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்குள்ளே வாக்குவாதம் செய்யும் போது கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே இருந்து நம் செயல்பாடுகளை வேடிக்கை பார்ப்பவர்கள் அப்படிப்பட்ட நேரங்களில் நம்மை மாய்மாலம் செய்கிறவர்களாகத் தான் காண்கிறீர்கள்.

கிறிஸ்தவர்கள் சுமந்து செல்லும் அடையாளமாகிய அன்பை எப்படி நாம் மறந்து விட முடியும்? இயேசு (யோவான் 13:34,35) வசனங்களில் தம்மை பின்பற்றுபவர்ளைப்பார்த்து இவ்விதமாகச் சொன்னார். நீங்கள் ஒருவர்யொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரி லொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

அன்பற்ற செயல்பாடுகள் ஜனங்களை கிறிஸ்தவத்திலிருந்து திருப்பி விடுகிறது. அவிசுவாசிகள் கிறிஸ்துவை நிராகரிப்பதற்கு கிறிஸ்தவர்களிடத்தில் காணப்படும் அன்பு குறைபாட்டை பயன்படுத்துகிறார்கள். அவிசுவாசிகளின் இப்படிப்பட்ட வார்த்தைகள் நம் காதுகளில் வந்து திரும்பத்திரும்ப விழுகிறது; நீங்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால் நீங்கள் ஒருவரையொருவர் பேசிக் கொள்ள வேண்டும். ஆனால், நீங்கள் உலகத்தில் நாங்கள் சந்திக்கும் மற்றவர்களைவிட கசப்புணர் வுடன் காணப்படுகிறீர்கள். துக்கரமாக நாம் இந்த கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும், நாம் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் சண்டை சச்சரவுகள் வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு கிறிஸ்துவின் மீது அவர்கள் அவிசுவாசம் கொள்வதற்கு அடிப்படையாக அமைகிறது.

**அ**ப்போஸ்தலர் 19 ஆம் அதிகாரத்தில், கிறிஸ்துவின் ஒரே ஞானஸ்நாத்தின்படி ஜனங்கள் ஞானஸ்நானம் பெறாத ஒரு சூழ்நிலை யைப் பார்க்கிறோம் (எபேசியர் 4:1-4). அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 19:4,5).

# நான் மேன்மை பாராட்டுவேன்

## " I WILL BOAST "

*Tye Power*

❖ சபையில் முக்கியமான குடும்பத்தை பாரம்பரியமாகக் கொண்டிருக்கிறேன் என்று என்னால் சொல்ல முடியாது.

❖ சகோதரர்களில் பிரபலமானவர்கள் யாரும் எனக்கு தெரிந்தவர்கள் கிடையாது.

❖ என்னால் எந்த ஒரு புகழ்பெற்ற பிரசங்கியாரையும் ஆலோசகர் என்று அழைக்க முடியாது.

❖ நான் எந்த ஒரு வேதாகம கல்லூரியிலோ அல்லது பள்ளியிலோ பயிற்சி எடுக்கவில்லை.

❖ நான் சிறந்த சொற்பொழிவாளனோ, பலதிறமைகள் கொண்டவனோ அல்லது பிரபலமானவனோ அல்ல.

❖ இக்காரியங்களைக் குறித்து என்னால் மேன்மை பாராட்டவே முடியாது.

❖ சபையில் முக்கியமான குடும்பத்தை சார்ந்த பெண்ணை திருமணம் செய்திருக்கிறேன் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், விசுவாச வீரர்களோடு சேர்ந்து பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமக்காரணமாகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட முடியும் (யாக்கோபு. 2:23).

❖ என்னுடைய ஆதரவாளர்களை என்னால் பட்டியலிட்டுக் காட்ட முடியாது. ஆனால், எனக்கு ஆதரவாக பேசுவதற்கு ஒருவர் உண்டு. ஏனென்றால், ஆபிரகாமைப் போல நானும் அவரை விசுவாசித்து அவருடைய சிநேகிதன் என்று அழைக்கப்படுகிறேன் (யாக்கோபு 2:23).

❖ நாங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறோம் (எபேசியர் 2:19).

❖ நான் யாரிடத்தில் பயிற்சி எடுத்தேனோ அவருடைய நற்கீர்த்தி என்றென்றும் அழிவதில்லை, எப்போதும் உண்மையுள்ள போதகரால் நான் பயிற்றுவிக்கப்பட்டேன் அவர் எப்போதும் வகுப்பைத் தொடங்குவதற்கு முன்பாக திரும்பத் திரும்ப நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று சொல்வார் (மத்தேயு 11:29).

❖ பேச்சில் நான் அப்போல்லாவைப் போலல்ல. மாறாக, மோசேயைப் போன்றவன்

❖ தாலந்தைப் பொறுத்தவரை என்னிடத்தில் இரண்டுக்கு மேல் இல்லை.

❖ ஆள்தத்துவத்தில் தீமோத்தேயோடு என்னை அடையாளங்காணமுடியும். ஆனால், கர்த்தர் பவுலிடம் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார் (2 கொரிந்தியர் 12:9). அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.

❖ நான் மேன்மைப் பாராட்டுவேன், என் தொடர்புகள், கல்வி அல்லது தாலந்துகளைப் பற்றியோ அல்ல எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் (1 கொரிந்தியர் 1:30).

# பொறாமையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

## Beware Of Envy

*Agapio V. Catamora*

இப்பூமியில் வாழும் மக்களால் வழக்கமாகச் செய்யப்படும் பொதுவான பாவங்களில் ஒன்று பொறாமை. இப்பாவத்தின் பரவல் பிசாசு இம்மனப் பான்மையை ஜனங்களை தேவனு டைய சத்துருக்களாக மாற்றுவதற்கு பயன்படுத்தியிருக்கிறான் என்பதை தான் காட்டுகிறது.

பொறாமையானது வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் இப்பாவத் திற்கு பலியாகிறவர்கள் பல விதமான இன்னல்களில் சிக்கிக் கொள்கிறார்கள். அது அநேகமாக பொறாமை எலும்புருக்கியாயிருக்கிற படியால் அப்படி ஏற்படுகிறது (நீதிமொழிகள் 14:30). இது சுவிசேஷத்திற்கு இசை வில்லாத ஒன்றாகவும் சகல துர்ச் செய்கைகளுக்குள்ளும் ஒருவரை வழி நடத்துகிறது (யாக்கோபு 3:14,16).

இப்பூமியில் மனித வரலாற் றின் முதல் கொலை காயீனால் நடத்தப் பட்டது. அவன் தன் சகோதரனாகிய ஆபேலையும் அவன் காணிக்கை யையும் கர்த்தர் அங்கீகரித்ததினால் எரிச்சலடைந்து, அவன் முகநாடி வேறு பட்டது (ஆதியாகமம் 4:45). அதன் விளைவு: காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான் (வசனம் 8).



முற்பிதாக்களின் காலகட்டத்தில் யாக்கோபின் குமாரர்களில் ஒருவராகிய யோசேப்பு தன் சகோதரர்களின் பொறா மைக்குப் பலியானார் (ஆதியாகமம் 37:11). யோசேப்பின் சகோதரர்கள் அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். (வசனம் 28).

நம் இரட்சிகராகிய கிறிஸ்து பொறாமையினாலே அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கத் துடித்தவர்களால் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டார். பொறாமையினாலே அவருடைய சத்துருகள் கூட்டத்தைத் தூண்டிவிட்டு இயேசுவுக்குப் பதிலாக பரபாசை விடுதலைச் செய்ய வேண்டும்மென்று பிலாத்துவை நோக்கி கூக்குரலிடச் செய்தார்கள் (மாற்கு 15:9,16). யூதர்கள் அபபோஸ்தலனாகிய பவுலின் மீது பொறாமைக் கொண்டபோது அவருக்கும் இதேதான் சம்பவித்தது யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள் (அப்போஸ்தலர் 13:45).

மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் மோசேயின் மீதும் ஆரோன் மீது பொறாமைதான் மூலக்காரணமாயிருந்திருக்கிறது. இது மாம்ச சிந்தையின் நிரூபணமாயிருக்கிறது (1 கொரிந்தியர் 3:1,3). உண்மையில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும் கீழ்ப்படியாதவர்களும் வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும் துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும் பகைப்படத்தக்கவர்களும் ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம் என்று பவுல் நினைவுப்படுத்துகிறார் (தீத்து. 3:3). முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (எபேசியர் 2:13). தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).

எல்லாவிதமான பொறாமைகளும் நீக்கப்பட்டால், சகோதரர்களிடையே காணப்படும் எல்லா சண்டைசச்சரவுகளும் தீர்ந்துபோம், பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல சீக்கிரமாய் அறுப்புண்டு பசும் பூண்டைப் போல் வாடிப் போவார்கள் என்று சங்கீதக்காரன் சொன்னார் (சங்கீதம் 37:1,2). அப்போஸ்தலனாகிய பவுலும் வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களால் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம் என்று சொல்கிறார் (ரோமர் 13:13).

அப்போஸ்தலனாகிய பேதுருவும் கிறிஸ்தவர்கள் சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும் பொறாமைகளையும், சகலவித புறங்கூருதலையும் ஒழித்துவிட்டு நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் என்று புத்திச்சொன்னார் (1 பேதுரு 2:1,2). பொறாமை மாம்சத்தின் கிரியைகளுள் ஒன்றாக இருக்கிறபடியால் (கலாத்தியர் 5:21) இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று பவுல் சொல்கிறார். மேலும், வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம் என்று சொல்லும் தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிக்கொடுப்போம் (கலாத்தியர் 5:26). உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:23,24).

# இயேசு கிறிஸ்துவின் சிலுவை

## The Cross of Jesus Christ

***Hans J.Dederscheck***

**சி**லுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்திய மாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது என்கிற உண்மையை பவுல் வலியுறுத்துகிறார் (1 கொரிந்தியர் 1:18). கிறிஸ்தவர்கள், யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிற சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற வேலையை நன்றாய்ச் செய்கிறார்கள் (1 கொரிந்தியர் 1:23). அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வது போதுமானது. அதைத்தவிர, வேறொன் றையும் அறிந்து கொள்ள அவர் விரும்பவில்லை (1 கொரிந்தியர் 2:2). துன்பத்தின் காரணமாக சிலர் கிறிஸ்துவின் சிலுவையை விரும்புவதில்லை (கலாத்தியர் 6:11).

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து பிரசங்கிக்கப்படுவதை ஏற்றுக் கொள்வதில் யூதர்களைவிட கிரேக்கர்கள் சிறந்தவர்கள் அல்ல. அவர்கள் ஞானத்தைத் தேடுகிறார்கள் (1 கொரிந்தியர் 1:22). அவர்கள் விசுவாசிப்பதற்கு முன்பு புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையென்று ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரே உபதேசம், அவர்கள் இந்த உலகத்தைப் பற்றி எப்படிப்பட்ட எண்ணத் தைக் கொண்டிருக்கிறார்களோ அதோடு இசைந்து வருபவைகளும், அவர் களுடைய காரண காரியங்களை திருப்தி படுத்துகிறவைகளும் காலங்களின் முக்கியத்துவத்தைக் குறித்து தீர்ப்பு செய்யும் திறனை திருப்திபடுத்துகிறவைகளும் தான். எனவே, அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என்கின்ற கருத்தி லிருந்து திரும்பி அதை நிந்தித்து, அற்பமாக நினைத்து பரிகாசம் செய்கிறார்கள். எனவே அவர்கள் பைத்தியம் அல்லது மதியீனம் என்றழைக்கிறார்கள் (1 கொரிந் தியர் 1:24). சிலுவை அவர்களை குழப்புகிறது. *அவர்கள் இருப்பதற்கு மதிப்பைக் கூட்டக் கூடிய எல்லா மதிப்புகளையும் விட்டுவிடாமல் சிலுவையை மனப் பூர்வமாக அதற்குரிய* மரியாதையோடு அவர்களால் காண முடியாது.

தேவனால் அழைக்கப்பட்டவர்களுக்கு சிலுவை என்பதன் பொருளைப் பற்றிய உண்மையான புரிந்து கொள்ளுதல் இருக்கிறது (I கொரிந்தியர் 1:24). ஏனெனில், அவர் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார் (II கொரிந்தியர் 13:4). சிலுவை வாயிலாக இந்த உலகத்தின் இரட்சிப்புக்காக தம்முடைய வல்லமையை வெளிப்படுத்த தேவன் பிரியப்பட்டபடியால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிப்பவர் மனித ஞானத்தின் வாதத்தையோ, பேச்சாற்றலின் கௌரவத்தையோ

ஆதாரமாகப் பயன்படுத்தினால் அது சிலுவையின் தெய்வீக ஆற்றலை இல்லாமல் போகச் செய்துவிடும் (I கொரிந்தியர் 1:17). மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13). இயேசு சிலுவையை சகித்தபோது, இந்த அவமானத்தைத்தான் அவர் எண்ணாதிருந்தார் (எபிரெயர் 12:2). இது அவருடைய கீழ்ப்படிதலின் முழு அளவை வெளிப்படுத்துகிறது (பிலிப்பியர் 2:6-8). அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்கள் (I கொரிந்தியர் 2:8). இங்கே பவுல் கிறிஸ்துவின் சிலுவையை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்ததாக விவரிக்கிறார். தேவனுடைய ஞானமானது மீட்பின் திட்டத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது, அதில் இயேசு கிறிஸ்துவின் மரணம் நிச்சயமான நிகழ்வாயிருக் கிறது. அதன் நிறைவேறுதல் விசுவாசிகளை மகிமைக்குள்ளும், தெய்வீக ஜீவனை அதன் முழுமையான தன்மையிலும் கொண்டு வரும்.

கிறிஸ்துவின் சிலுவையின் தாக்கம் இதே விதமாக கொலோசெயர் 2:14-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது அங்கே நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து நம்முடைய அக்கிரமங்களெல்லா வற்றையும் நமக்கு மன்னித்திருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசு தன்னுடைய சீஷனாக இருக்க விரும்புகிறவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு (மாற்கு 8:34) தன் சிலுவையை சுமக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு 10:38; லூக்கா 14:27). பவுல் கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெற்றதற்கு அடையாளமாக இருந்தது (ரோமர் 6:3). நம்முடைய பழைய மனுஷன், அந்த பாவி கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் (ரோமர் 6:6).

ஆகவே, நாம் ஆவியின் போதனையின்படி முழுமையான கீழ்ப்படிதலோடு புதிய வாழ்க்கையை வாழவேண்டும் (கலாத்தியர் 5:25). பவுல் ஒத்துக் கொண்டார்; கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக் கிறேன்; இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

**தேவன் எப்போதுமே தம்முடைய குமாரனுடைய ஜெபத்தைக் கேட்கிறார். எனவே, எனக்குள்தேவ குமாரன் உருவாக்கப்பட்டால் மட்டுமேதேவன் என் ஜெபத்தைக் கேட்பார் - அப்படி உருவாக்கப்பட நாம் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும்.**

# கீழ்ப்படிதலில் பயிற்றுவித்தல்

## " TRAINING IN OBEDIENCE "

***Betty Burton Choate***

நம் எல்லோருக்கும் பெற்றோர்களின் பங்காக எல்லா இடங்களிலும் எல்லா நேரத்திலும் பிள்ளைகளை நடத்த வேண்டிய ஓர் அடிப்படை குணம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால், இது எல்லா இடத்திற்கும் பொருந்தாது இவ்வுலகமும் நம்மைச் சுற்றி இருக்கிற கலாச்சாரமும் பெற்றோர்களாகிய நம்முடைய சிந்திக்கும் விதத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் என்பவர் எழுதிய புத்தகம் வெளிவந்தபிறகு குழந்தைளை அடித்து ஒழுங்குபடுத்துவதற்கு எதிராக விமர்சனங்கள் கடுமையாக எழும்பியிருக்கின்றன. பள்ளிக் கூடங்களில் குழந்தைகளை அடிப்பது பல வருடங்களாக தடை செய்யப் பட்டிருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் வைத்து அடித்தால் அதைப் பெருங்குற்றமாக அறிவிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதால் கட்டுப்பாடற்ற கொடூரமான பிள்ளைகள் உருவாகிறார்கள்.

நிச்சயமாக, சிறுபிள்ளைகளை உடல்ரீதியாக காயப்படுத்துவதை நான் ஆதரிப்பதில்லை. ஆனால், ஒழுங்கு நடவடிக்கை மிக ஜாக்கிரதையாக எடுக்கப் படும்போது அது குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துவதாகாது. தண்டையின் பிரம்பு ஒரு குடும்பம் கொண்டிருக்க வேண்டிய சிறந்த நண்பர்களுள் ஒன்றாகவே இருக்கும். ஒரு குழந்தை கீழ்படிகிறவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக இருந்தால் நிலைமை என்னவாக இருக்கும்? அவ்வீடு சமாதானத்துடன் காணப்பட்டு அவ்வீட்டின் காரியங்களெல்லாம் சரியான பாதையில் செல்லும். இவ்விரண்டில் நீங்கள் எதைத் தெரிந்து கொள்வீர்கள்?

" நம்பிக்கையிருக்கு மட்டும் உன் மகனைச் சிட்சை செய் ; ஆனாலும், அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே " (நீதிமொழிகள் 19:18).

பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே. (நீதிமொழிகள் 23:13,14).

திரும்பத் திரும்ப, வேத வசனங்கள் தெய்வீக ஏவுதலினால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதினால் அவர்களை பெரிய பிரச்சனைகளிலிருந்து தப்புவிக்கலாம் என்று எச்சரிக்கின்றன.

இப்பாடம் சிறுபிள்ளைகளைப் பற்றியது. பெற்றோருடைய வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியாதபோது நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எவை:

**விதி 1 :** பேசுகிறதற்கு முன்பு யோசிக்க கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதை யோசித்துப் பிறகு பிள்ளைகளிடம் இதைச் செய். இதைச் செய்யாதே என்று உறுதியான, தீர்மானமான குரலில் பேசுங்கள். நீங்கள் சொல்ல வருகிறதை புரிந்து சொன்னால் உங்கள் குரல் ஒரு தீர்மானத்துடன் தொனித்தால் பிரச்சனையின்றி யுத்தத்தில் பாதி வெற்றி பெற்று விட்டீர்கள்.

**விதி 2 :** உங்கள் குழந்தை கீழ்ப்படியாமலும் எதிர்த்து நிற்கிறதாயும் உங்கள் வார்த்தையை கண்டுகொள்ளாமலும் கோபப்படுகிறதாயும் இருந்தால் நீங்கள் என்னச் செய்கிறீர்கள். சிலர் காரணகாரியங்களை அடிப்படையாக வைத்து முடிவெடுப்பதற்கு நன்றாக ஒத்துழைப்புத் தருகிறார்கள். சிலர் தங்கள் தவறான நடக்கையினால் நம்மை அவமானப்படுத்துகிறார்கள்.

இயற்கையாகவே, எல்லாவித வாய்ப்புகளையும் நீங்கள் முயற்சி செய்து பாருங்கள். அவ்வப்போது இதுபோன்ற பிரச்சனைகள் வரும் நீங்கள் அதை சாமர்த்தியமாக சமாளித்தால் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் எதிர் காலத்தில் வரும் பிரச்சனைகளிலிருந்து தப்புவிக்கலாம்.

உங்கள் குழந்தை உங்களுக்கு கீழ்ப்படியாமல் போகும்போது உங்களுக்கு மாற்று வழியே இல்லாமல் போகிறது. நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருக்க வேண்டுமென்றால் நீங்கள் உங்கள் நிலையில் உறுதியாக இருந்து கீழ்ப்படிதலை நடைமுறைப்படுத்துங்கள். அவர்களுக்கு பிரம்படி கொடுப்பது பற்றி ஓர் எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. சில வேளைகளில் பிள்ளைகள் நமக்கு எதிர்த்து நின்று நம்மிடம் எதிர்த்துப்பேசுகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் கன்னத்திலோ கையிலோ, கையிலோ அல்லது உடலின் காயப்படுத்தக்கூடாது. இந்த முறையை எப்போதாவது தான் கடைபிடிக்க வேண்டும். பெரும்பாலும் அதிகாரப்பூர்வமான வார்த்தையாலும், செய்கையாலுமே அவர்களை கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

ஆனால், குழந்தைகள் பெரியவர்களாக இருந்தால் சிட்சை கடுமையாக இருக்க வேண்டியதாயிருக்கிறது. தகப்பன்மார்கள் ஆண் குரலில் சற்று குரலை உயர்த்திப் பேசி உள்ளங்கையால் ஓங்கி அடிக்கலாம். தாய்மார்கள் இதே விதமான நேர்மறையான விளைவுகளை பெறாமல் இருக்கலாம். அவர்கள் வேறுவிதமான அணுகு முறையை பின்பற்றலாம்.

எப்போதும் வெறுங்காலில் தண்டனைக் கொடுப்பது சிறந்தாகும். முட்டிப் போடும்படி செய்யலாம். தாய்மார்கள் குழந்தைகளை சரி செய்ய கைகளைப் பயன்படுத்துவதையே தெரிந்து கொள்ள வேண்டும்.

கைகளால் அடிப்பது போதாதபோது, கால்களில் கடுமையான வலி உண்டாகும்படி தண்டனைக் கொடுப்பது நல்லது. அது மனமாற்றத்திற்கு வழி வகுக்கிறது. இவ்விதமான தண்டனைகள் சரியாக வழங்கப்படும்போது, அச்சுறுத்தல் மனப்பான்மையில் வருகின்ற நாட்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒரு குழந்தையின் பெற்றோர் அவர்களுடைய குழந்தையை சிட்சிக்கும் போது மற்ற பெற்றோர்கள் அதில் தலையிடக்கூடாது அல்லது ஆறுதல் அளிக்ககூடாது. இது சிட்சிக்காமல் இருப்பதை விட மோசமானதாகும். ஏனென்றால், இது இரண்டு பெற்றோர்களிடையே சண்டையை உண்டு பண்ணி அந்த குழந்தையை வெற்றி பெறச் செய்திடும். மேலும், இது குழந்தையை தண்டிப்பவர்கள் தான் தவறு செய் கிறார்கள் குழந்தை அல்ல என்னும் தவறானச் செய்தியை அனுப்புகிறது. அப்படியே ஏதாவது விவாரம் இரு பெற்றோர்களுடையே ஏற்பட வேண்டுமென்றால் அது குழந்தையின் முன்னிலையில் அல்ல தனியாக நடக்க வேண்டும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக, தேவனுடைய பிள்ளையாக உங்கள் பிள்ளை களுக்கு பிரம்படி கொடுத்தாவது கீழ்ப்படிதலைக்கற்றுக் கொடுக்க வேண்டும், வேறு வழியே இல்லை. தேவன் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். மேலும், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்றும் தேவன் எச்சரித்திருக்கிறார். பெற்றோர்கள் இதைச் செய்யத் தவறும் போது, அவர்களே தங்கள் பரமபிதாவுக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள், தேவன் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார். ஏனென்றால், ஆத்துமாக்களின் நலன் பெற்றோர்களின் வளர்ப்பில் இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

நீங்கள் உங்கள் குழந்தைகளிடத்தில் அவர்கள் உங்களுக்கு கீழ்ப்படிய வில்லையென்றால், தேவனுக்குக் கீழ்ப்படியவில்லையென்பதை எடுத்து விளக்க வேண்டும். மேலும், அவர்கள் உங்களுக்கு கீழ்ப்படிய கற்றுக் கொள்ளும் போது தேவனுக்கும் பள்ளியில் ஆசிரியர்களுக்கும், அதிகாரத்தில் உள்ள யாவருக்கும் கீழ்ப்படிய கற்றுக்கொள்வார்கள் என்பதை உணர்த்தவேண்டும். வேதாகமத்தால் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை வளர்ப்பு முறையானது, அவர்களுக்கு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுத்து அவர்களை தேவனுடைய பிரமாணத்தின்படியும், நாட்டின் சட்டத்தின்படியும் வாழச் செய்வது தான். இல்லையென்றால், அவன் தனக்கும் இவ்வுலகத்திலும், வருகின்ற உலகத்திலும் தன்னை நேசிப்பவர்களுக்கும் மிகுந்த வேதனையை உண்டாக்குவான்.

*பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித் திருப்பதற்கும். உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனையாயிருக்கிறது* (எபே. 6:1-4).

> **நீ**ங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.

# பிதாக்களே நீங்களும்

## "And Ye Fathers..."

*Charles B. Burch.*

மேற்கண்ட தலைப்பானது எபேசியர் 6:4 லிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் புத்திமதிகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த முழு வசனம் இவ்விதமாகச் சொல்கிறது பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4).



நான் இவ்வசனத்தின் கடைசிப் பகுதியில் கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன். கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. இவ்வசனம் இப்பூமியில் உள்ள தகப்பன்மார்கள் மீது மிகப்பெரிய பொறுப்பை வைக்கிறது. இப்பொறுப்பு கிறிஸ்தவ தகப்பன்மார்களுக்கு மாத்திரமல்ல. இவ்வுலகம் நாம் பார்க்கும் போது இலட்சக்கணக்கான பிள்ளைகள் தங்கள் தகப்பன்களால் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கப்பட்டிருந்தால் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்திருப்பார்கள்.

ஆனால், இன்றைய நாட்களில் பிரச்சனை என்னவென்றால் இளம் பிள்ளைகள் எப்படி வாழவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரோ அதன்படி போதிக்கப்படவில்லை என்பது தான் உண்மையாயிருக்கிறது. மேற்சொல்லப் பட்ட கட்டளை தகப்பன்களுக்கானது; தாய்மார்கள் குழந்தை வளப்பில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பது உண்மை தான். ஆனால், எல்லாவற்றையும் தாய்மார்களே செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கவில்லை. இருந்தபோதிலும், தாய்மார்கள் தகப்பன்மார்களுக்கு உதவியாயிருக்க முடியும், அவர்களை உற்சாகப்படுத்தவும் முடியும். தகப்பன்மார்கள் தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற மறுக்கும் போது. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்கள் பிள்ளைகள் நரகத்தில் ஆக்கினைத் தீர்ப்பை அடைவதற்குக் காரணமாக அமைந்து வருகிறார்கள். நரகத்தின் பயங்கரம் மெய்யானது!

இயேசு கிறிஸ்து மகாநியாயத் தீர்ப்பைப் பற்றிய சித்திரத்தைத் தீட்டும் போது அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத்தேயு 25:46). இங்கே கிறிஸ்து நரகம் நித்தியமானது என்று சொல்கிறார், இதன் பொருள் நரகத்திற்கு முடிவே இல்லை என்பதாகும். இயேசு கிறிஸ்து நரகத்தைப் பற்றித் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். அவியாத அக்கினியுள்ள நரகம் (மாற்கு 9:43). பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 25:30). தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் நரகத்தைப் பற்றி இன்னும் தெளிவான முறையில் விவரிக்கும் வசனங்கள் உண்டு.

ஒரு தகப்பன் தன் வாழ்க்கையை நரகத்தில் கழிப்பதென்பது பயங்கரமானது. அதிலும், தன் பிள்ளைகளோடு நாட்களைக் கழிப்பதென்பது மிகக் கொடுமையானது. பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கத் தவறும் தகப்பன்மார்கள் அவர்களோடு சேர்ந்து நாட்களை நரகத்தில் கழிக்கும்போது, நம்மால் பிள்ளைகளை இங்கே வராமல் தடுத்திருக்கக்கூடும் என்று நினைக்கும் போது அது இன்னும் வேதனையைக் கூட்டுகிறது. இத்தகைய சூழ்நிலைக்குக் காரணம் இப்பூமிக்குரிய வாழ்க்கையில் பிசாசுக்கும் அவன் தரும் சந்தோஷத்திற்கும் அடிமையானது தான்.

கடந்த காலத்தில் பல நேரங்களில் அர்ப்பணிப்புள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைச் செம்மையாக வளர்ப்பதற்குத் தங்களால் முடிந்ததை செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வதில் பலர் வெற்றிப் பெற்றிருக்கிறார்கள்; ஆனால், தகப்பன்மார்களுடைய உதவி இல்லாமல் அது கடினமான வேலையாகி விடும்.

பிதாக்களே, நீங்களும்... என்கிற சொற்சொடரை நீங்கள் சற்று உள்ளப்பூர்வமாக சிந்தித்துப்பாருங்கள். பரலோகத்தில் என்றென்றும் சேர்ந்து வாழத்தக் கவலையில் பிள்ளைகளை வளர்ப்பதை விட முக்கியமாக நீங்கள் எதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்? இவ்வுலகத்திலுள்ள எல்லா தகப்பன்மார்களுக்கும் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற இக்கட்டளையை நீங்கள் நிறைவேற்ற உங்களுக்கு எல்லா விதத்திலும் உதவி செய்யவும், உங்களோடு சேர்ந்து படிக்கவும் கர்த்தருடைய சபையில் பலர் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால், உங்களுக்கு பெருமையும், சுயநலமும் பெரும் தடைக்கற்களாக இருக்கின்றனவா?

---

**மகிழ்ச்சியை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது தான் அது முழுமை அடைகிறது. இரட்சிப்பும் அப்படித்தான்.**

---



# அந்நியன்

## The Stranger

நான் பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு என் அப்பா ஓர் அந்நியனை சந்தித்தார். அவன் எங்கள் சிறிய பட்டணமாகிய டென்னிசிக்குப் புதியவனாக இருந்தான். ஆரம்பத்திலிருந்தே இந்த வசீகரமான புதியவரால் என் அப்பா அதிகமாகக் கவரப்பட்டார், உடனே எங்கள் குடும்பத்தோடு வந்து தங்கும்படி அவனுக்கு அப்பா அழைப்பு விடுத்தார். அந்தப் புதிய நபர் உடனே அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு சில மாதங்களுக்குப் பிறகு ஒரு புதிய உலகத்திற்குள் எங்களை வரவேற்க காத்திருந்தான்.

நான் வளர்ந்தபோது எங்கள் குடும்பத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறித்து ஒருபோதும் ஒருவரும் கேள்வி கேட்டதில்லை. என் இளமனதில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனி இடம் இருந்தது. என் சகோதர னாகிய பில் என்னைவிட ஐந்து வயது முத்தவர். அவர் தான் என்னுடைய சிறந்த

முன்மாதிரி. என் பெற்றோர்கள் மெச்சத்தக்கதான அளவில் போதகர்கள் தேவனு டைய வார்த்தையை நேசிப்பதற்கு கற்றுக் கொடுத்தனர், அப்பா அதற்குக் கீழ்ப் படியக் கற்றுக் கொடுத்தார்.

அந்த அந்நியர் கதை சொல்லுபவர். அவரால் ஆளை மயக்கும் கதைகளை சொல்ல முடியும். சாகசங்கள், இரகசியங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவை அவருடைய அன்றாட பேச்சுக்கள். ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதிலும் முழுக் குடும்பத்தையும் தன்முன் கட்டிப் போட்டு விடுவான். நான் அரசியல் பற்றி, வரலாறு பற்றி அல்லது விஞ்ஞானம் பற்றி அறிய விரும்பினால், அவருக்கு எல்லாம் தெரிந்திருந்தது. அவருக்கு கடந்த காலம் தெரிந்திருந்தது, நிகழ்காலத்தைப் புரிந்திருந்தார், வருங்காலம் பற்றியும் முன்னறிவிக்கத் தெரிந்தது. அவரால் காட்டப்படும் படங்கள் உயிருள்ளதாயிருந்தது. அவைகளை நான் பார்க்க நேர்ந்தபோது அழவும் நேர்ந்தது, சிரிக்கவும் நேர்ந்தது.

எங்கள் முழுக்குடும்பத்திற்கும் நல்ல நண்பராக இருந்தார். அவர் என்னையும், அப்பாவையும், என் சகோதரனையும் விளையாட்டைக் காண அழைத்துச் சென்றார். அவர் எங்களை திரைப்படத்தைக் காண உற்சாகப்படுத்தினார், திரைப்பட நட்சத்திரங்களை எங்களுக்கு அறிமுகம் செய்ய ஏற்பாடுகள் செய்தார்.

அந்தப் புதியவர் ஓயாமல் பேசுபவர். என் அப்பா அவரைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை, ஆனால், சிலவேளைகளில் என் அம்மா கொஞ்சம் கண்டு கொள்வார், மீதமுள்ள நாங்கள் எல்லோரும் அவருடைய சுவாரசியக் கதைகளில் கவரப்பட்டிருந்தோம். அம்மா அவர்களுடைய அறைக்குச் சென்று, வேதாகமத்தை வாசித்து ஜெபிப்பார். புதிதாக வந்தவர் வெளியேற வேண்டுமென்று ஜெபித் தார்களோ என்னவோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

என் அப்பா, வீட்டில் சில ஒழுக்க நெறிகளைக் கடைபிடிக்கும்படி கண்டிப்பு காட்டுவார். ஆயினும், இந்தப் புதியவர் அவைகளை கனம் பண்ண வேண்டும் என்கிற கடமை தனக்கிருப்பதாக ஒருபோதும் உணர்ந்ததில்லை. உதாரணமாக, பக்தி காரியங்களை அலட்சியம் செய்வது எங்கள் வீட்டில் அனுமதிக்கப்படுவதில்லை. வெளியிலிருந்தோ, எங்கள் நண்பர்களிடமிருந்தோ, பெரியவர்களிடமிருந்தோ அனுமதிக்கப்படுவதில்லை. ஆயினும், எங்கள் நீண்டநாள் விருந்தாளி எங்கள் காதுகளை எரிக்கத்தக்கதான, அப்பாவை நெளியச் செய்யும் அந்த நான்கெழுத்து வார்த்தைகளை அவ்வப்போது பயன்படுத்தினார். எனக்குத் தெரிந்தவரை அந்த விருந்தாளி ஒருபோதும் விமர்சனம் செய்யப்படவில்லை.

என் அப்பா மதுபானம் அருந்தாதவராயிருந்தபடியால் வீட்டில் மதுபானத்தை அனுமதிக்கவில்லை, ஆனால், அந்த புதியவர் எங்களுக்கு வெளி உலகம் பற்றி அறிவது அவசியம் என அறிவித்தார். உண்மையில், நாங்கள் குடிக்கும்படியாக அவர் மதுபானம் எதையும் தரவில்லை, ஆனால், வாழ்க்கையின் மறுபக்கம் குறித்து நாங்கள் அறிந்துகொள்ள தொடர்ந்து முயற்சித்தார். அவர் வாழ்க்கையின் உல்லாசம் பீர் மற்றும் வேறு போதை தரும் பானங்களால் கிடைக்கும் என்று காட்டினார்.

அவர் செக்ஸ் பற்றி மிக தாராளமாகப் பேசினார். அவருடைய விமர்சனங்கள் சிலவேளைகளில் வெளிப்படையாகவும், சிலவேளைகளில் ஆலோசனை சொல்வது போலவும், மற்றும் சிலவேலைகளில் பொதுவாக வெட்கத்தை ஏற்படுத்து கிறது போலவும் இருந்தது. ஆண், பெண் உறவு பற்றிய என்னுடைய ஆரம்பகால கருத்துக்கள் இந்தப் புதியவரால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தின் விளைவு என்பதை அறிவேன்.

நான் திரும்பிப் பார்க்கும்போது, தேவனுடைய கிருபையும், சபையிலும், ஞாயிறு வேத பாட வகுப்பிலும் எங்களுக்கு போதிக்கப்பட்டவைகளும் தான் அந்த புதியவரால் நாங்கள் வஞ்சிக்கப்படாதபடி காத்துக் கொண்டது. நேரத்திற்கு நேரம் அவர் வேதாகமத்தின் ஒழுக்க நெறிகளை எதிர்த்தார். ஆன போதிலும், அதைப் பற்றி ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை, அந்த நபரை வீட்டை விட்டுப் போகும்படி கட்டாயப்படுத்தவுமில்லை.

அந்த அந்நியன் எங்கள் குடும்பத்திற்குள் வந்து முப்பது ஆண்டுகள் ஆகி விட்டது. உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், நான் அவரைப்போல் ஒரு புதியவரைக் கண்டுபிடித்து என் வீட்டிற்கும் அழைத்துச் சென்றேன். இப்போது அவர்கள் இருவரும் பெற்றோர்களுடைய தனிப்பட்ட அறையிலும், என் வீட்டின் அறையிலும் உட்கார்ந்திருக்கிறார்கள். தான் பேசுவதை யாராவது கேட்க வேண்டு மென்று அவர் பொறுமையோடு காத்திருக்கிறார், அதுபோல அவர் பேசும்போது நீங்களும் அவரையே பார்ப்பீர்கள்.

அவருடைய பெயர் ? ........ தொலைக்காட்சிப் பெட்டி.

ஆங்கிலத்தில் சுருக்கமாக TV என்றழைக்கிறோம்.


# எதற்காக ஆராதனை

1. வேத வாக்கியங்களை அறிந்து கொள்ள நம் மனது திறக்கும்படி (லூக்கா 24:45)
2. கிறிஸ்துவினால் உண்டாகும் சமாதானமும், திருப்தியும் கிடைக்கும் படி (பிலிப்பியர் 4:7)
3. ஆறுதலையும், ஐக்கியத்தையும் பெற்றுக்கொள்ளும்படி (எபிரெயர் 10:24)
4. நம்முடைய ஆவிக்குரிய அனலைத் தக்க வைத்துக் கொள்ளும்படி (மத்தேயு24:12)
5. நம்முடைய ஆவிக்குரிய பசியைத் தீர்த்துக் கொள்ளும்படி (மத்தேயு 24:12)
6. வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்கதான அனுபவத்தை இழந்து போகாதபடி (யோவான் 20:31)

# திறந்த மனது

## OPEN MINDED

*SPC Alex Gibson*



மூடிய மனதுடன் கூடிய ஒருவரோடு நீங்கள் உரையாட எப்போதாவது முயற்சித்ததுண்டா? நான் எப்போதுமே உரையாடியிருக்கிறேன். அது செங்கல்லால் கட்டப்பட்ட சுவரில் உங்கள் மண்டையை மோதி உங்கள் மண்டையோடு திறப்பதற்கு முன்பாக அச்சுவர் நொறுங்கி விழ வேண்டும் என நம்புவதைப் போன்றதாகும். நான் காலாட்படையில இருக்கிறபடியால் நான் சற்று தடித்த மண்டை ஓட்டை உடையவனாக இருக்கிறேன். அதன் காரணமாக நான் வெற்றி பெறுகிறேன். ஆனால், கடினமான தலையை நீங்கள் பெற்றிராவிட்டால், உங்களுக்கான என்னுடைய விவேகமும் ஞானமும் கலந்த அறிவுரை இதோ.

1. முதலாவதாக ஓர் உரையாடலின் பாகங்களை உங்களுக்குக் காட்டுகிறேன்.
2. செய்தி இப்படியாகத்தான் இருக்கும் என்று அறிவிக்கக்கூடிய செய்தி உணர்வாய் அறியப்படும் செய்தி.
3. கவனிப்பவன், இது பல பிரச்சனைகள் கருத்து வேறுபாட்டால் உண்டாவதில்லை. மாறாக, தவறான புரிந்து கொள்ளுதலினால் உண்டாகிறது. உதாரணமாக, நான் உங்களிடம் இரவு ஆகாரத்திற்கு ருசியுள்ள ஏதோ ஒரு பதார்த்தத்தை சாப்பிடலாம் என்று சொல்கிறேன். ஆனால், நீங்கள் இரவில் இட்லி, தோசை போன்றவைகளை சாப்பிடலாம் என்று சொல்கிறீர்கள். ஆனால், நான் பன்றி இறைச்சியும், ஆட்டு இறைச்சியும், குளிர்பானமும் வேண்டும் என விரும்புகிறேன். ஆனால், நான் சொன்னதெல்லாம் ருசியுள்ள பதார்த்தம் எனக்கு விருப்பம் என்பது தான். நம்மில் பலர் அதற்கு வித்தியாசமான பொருள்களைக் கொடுப்பதால் அங்கே பிரச்சனை உண்டாகிறது.

எனவே, நான் சொன்ன உதாரணத்திற்கும் திறந்த மனதுடைய கிறிஸ்தவர்களுக்கு என்ன சம்மந்தம் இருக்கிறது? கொஞ்சம் பொறுத்திருங்கள். நான் விஷயத்திற்கு வருகிறேன். நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் பொதுவான வார்த்தை அல்ல. குறிப்பான வார்த்தையை நம் உரையாடலில் தெளிவாகப் பேச வேண்டும்.

உரையாடல் என்று வரும்போது அங்கே பேசுவதற்கு ஒருவர் இருக்கிறார். கேட்பதற்கு ஒருவர் இருக்கிறார். இங்கே தான் திறந்த மனதுக்கு வேலை வருகிறது. கிறிஸ்தவர்களாக நாம் சில வேளைகளில் நாசூக்கான காரியங்கள் பற்றி பேச வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட ரீதியில் எனக்கு நியாயத்தீர்ப்பைப்பற்றியும், நரகம் அக்கினிப் பற்றியும் உரையாடப் பிடிக்கும். பல வேளைகளில் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்து, என் வழியில் காரியங்களைச் செய்யவில்லை யென்றால் நீங்கள் நரகத்திற்குப் போவீர்கள் என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக் கிறேன். நிச்சயமாகவே, இந்த அணுகுமுறை தவிர்க்கப்படவேண்டும். இங்கே என் வழி என்பது பிரச்சினையல்ல. வேத வசனங்கள் என்னச் சொல்கின்றன? அதுவே நம்மெல்லாருக்கும் உபதேசச் சட்டமாயிருக்கிறது.

அதேபோல் வெளியில் சென்று ஜனங்களைச் சந்திக்கும் காரியத்தில், திறந்த மனதோடு செயல்பட வேண்டுமென்று மற்றவர்களிடம் நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாம் ஒரே மனநிலையோடு வேதவசனங்களைப் படிக்க விரும்ப வேண்டும். எப்போது பார்த்தாலும் நரகம் ஆக்கினைத்தீர்ப்பு என்று பேசிக்கொண்டிராமல் கிறிஸ்தவர்கள் திறந்த மனதோடு வாழ்க்கையை அணுக வேண்டும். நமக்கு சத்தியத்தின் மகிழ்ச்சி இருக்கிறது. இங்கே அருமையான காரியம் என்ன வென்றால் நாம் சத்தியத்தைப் பேசினால், நீங்கள் அதை சோதிக்கலாம். அது என்றென்றும் நிலைத்து நிற்கும்.

எனவே, காரியங்கள் இப்படியிருக்க நான் பரிணாம வளர்ச்சியைப் பற்றியோ அல்லது ஏதாவது அரசியல் அமைப்பைப் பற்றியோ அல்லது விரும்புகிற எதைப் பற்றியோ சுதந்திரமாகப் பேச முடியும். நான் சத்தியத்தை சுமந்து சென்று அதையே என் அளவுகோலாகப் பயன்படுத்துகிறேன். இதன் பொருள் நான் சத்தியத்தை கை விட்டுவிட்டேன் என்பதா? இல்லை. நிச்சயமாக இல்லை, உண்மையில் சொல்லப் போனால் அதற்கு எதிர் பதமாயிருக்கிறது. சத்தியத்தோடு நீங்கள் இவ்வுலகை எவ்வளவு அதிகமாக ஆராய்கிறீர்களோ, எவ்வளவாய் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்களோ சத்தியத்தின் அந்தளவு மதிப்பை காண்பீர்கள்.

முரண்பாடான காரியங்கள் பற்றி ஜனங்களிடம் பேசுவது நல்லது தான். உண்மையில் சொல்லபோனால்; இப்படிப்பட்ட பாடங்களைக்குறித்து நீங்கள் பேசும் போது பல காரிங்களைப் படிக்கும்போது எல்லா உண்மைகளையும் அலசி ஆராய்ந்து அவைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நீங்கள் உண்மையாகவே சரியாக இருந்தால் நீங்கள் விசுவாசிக்கிறது பலப்படுத்தப்படும். பதிலே இல்லாதது போல் தெரிகிற அந்த விசுவாச கேள்விகளைப் பற்றி என்ன? அவைகளுக்கும் பதில் இருக்கிறது. என்னை நம்புங்கள், எனக்கு பிடித்தமான ஒன்று. அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையையும், செய்கை யையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலிப். 2:12,13).

நீங்கள் முற்றிலுமாக மத சம்மந்தமான விவாதங்களை அல்லது வாக்கு வாதங்களை விட்டுவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. மற்றவர்களுடைய வார்த்தைகளுக்கு மரியாதைகொடுத்து அவர்கள் தேவனுடைய அன்பையும், பொறுமையையும் மற்றவர்களுக்கு செய்வதே உங்கள் வேலை அல்ல; அது தேவனுடைய வேலை. நீங்கள் அவர் பயன்படுத்தும் கருவிதான். இதோடு என் கருத்துக்களை நான் முடித்துக் கொள்கிறேன். உங்கள் கருத்துக்கள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. அவைகளைக் கேட்க ஆசையாயிருக்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !.

## நினைவில் கொள்ளுங்கள்

1. ஒருவர் தவறாக போதிக்கப்பட்டு, சரியாக ஞானஸ்நானம் பெற முடியாது (ரோமர் 10:17; 6:17).
2. ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, சரியாக ஆராதிக்க முடியாது (ரோமர் 6:34; அப்போஸ்தலர் 2:42).
3. ஒருவர் தவறாக ஆராதித்துக்கொண்டு சரியாக வாழ முடியாது (யோவான் 4:2-24).
4. ஒருவர் தவறாக வாழ்ந்து கொண்டு சரியாக மரிக்க முடியாது (மத்தேயு 25:31-41).
5. ஆகவே, ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டு சரியாக மரிக்க முடியாது.

என் நண்பரே, நீங்கள் எப்படி? வேதாகம் அடிப்படையிலான ஞானஸ்நானத்திற்கு நீங்கள் உங்களை ஒப்புக் கொடுத்துவிட்டீர்களா? வேத வசனத்தின் வெளிச்சத்தில் காரியங்களைப் புரிந்து கொள்ளுங்கள். பலர் செய்கிறது போல, காலகாலமாக நீங்கள், செய்த தவறுகளுக்கு விளக்கம் கொடுக்க முற்படாதீர்கள்.

கிறிஸ்தவ இல்லம்

# அன்பு : ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய்

## Love : Go Ye there fore

*Ashley Bates*

நாம் இத்தலைப்பைக் குறித்து சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்வோம். பெரும்பாலான நேரங்களில் ஜனங்கள் " உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று நமக்குக் கொடுத்திருக்கிற பிரதானக் கட்டளையை அன்போடு தொடர்புபடுத்தத் தவறி விடுகிறார்கள் " (மாற்கு 16:15).

இக்கட்டளையை குறித்து ஆழ்ந்து யோசிக்க நாம் நேரத்தை எடுத்தால், புறப்பட்டுப் போவதோடு அன்பை தொடர்புபடுத்தினால் தான் அது பொருத்தமாயிருக்கும். நாம் புறப்பட்டுப் போய் உபதேசத்திற்கு முன்பாக நம் இருதயங்களில் அன்பு இருந்தால் அது நாம் புறப்பட்டுப் போக நமக்கு தூண்டுகோலாக இருக்கும் என்று ஒரு கிறிஸ்தவனாக நான் நம்புகிறேன். நாம் காரண காரியங்களை அடிப்படையாக வைத்து மற்றவர்களிடம் பேச நம் இருதயங்களில் ஆழமான அன்பு இல்லையென்றால் நாம் திறந்த மனதை உடையவர்களாக இருக்க முடியுமா?

கிறிஸ்தவர்களாக நாம் நம்முடைய ஜீவியங்களில் மெய்யான தேவனுடைய வார்த்தையைப் பெற்றிருக்கிறோம். இதை நாம் மற்றவர்களிடம் விசேஷமாக நம் குடும்பத்தினரிடமும், நண்ணபர்களிடமும் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வுலகத்தில் அன்பை விட பெரிதானதொன்று எதுவுமில்லை. நம் மனதில் ஆத்துமாக்களைக் குறித்த அன்பு தான் பிரதானமாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க அன்பை உடையவர்களாயிருந்து வாழ்க்கையில் ஆவிக்குரிய பிரகாரமாக எந்த நிலையை அடைந்திருக்கிறோமோ அந்நிலையை அவர்களும் அடைய நாம் உதவ வேண்டும். நாம் போகுமிடமெல்லாம் இவ்வன்பை எடுத்துச் செல்ல வேண்டும். நம் குடும்பத்தினர்களோடும், நண்பர்களோடும் பிரயாணிக்கும் போதோ அல்லது பல்லாயிரக்கணக்கான தூரம் சுவிசேஷப் பயணம் மேற்கொள்ளும் போதோ நம்மால் முடிந்த வரை சிறந்த கிறிஸ்தவனாக இருந்து, அன்றாட வாழ்வில் நாம் எதிர் கொள்பவர்களிடம் நம் அக்கறையை வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய அன்பானது நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் வெளிப்படுத்திய அன்பைப் போல் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

பொதுவாகவே கிறிஸ்தவர்கள் பிறரிடம் காட்டும் அன்பிற்கு பேர் போனவர்கள். நான் அன்பின் மாதிரியாயிருக்க முயற்சிக்கிறேன். நான் என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அன்பை ருசிபார்க்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். எனவே, இவ்வன்பை வாழ்க்கையில் சந்திக்கும் மற்றவர்களோடு நான் ஏன் பகிர்ந்து

கொள்ளக்கூடாது? 1 தீமோத் தேயு 4:12 உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும் நடக்கையிலும், அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்தி லும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரி யாயிரு என்று சொல்கிறது. அன்பு என்பது நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிற அருமையான காரியங்களுள் ஒன்றாக இருக்கிறது. அது மனித சுபாவத்தால் நமக்கு கிடைக்கின்ற ஒன்றாக இருக்கிறது, அது நமக்கு ஒரு விதமான உடைமை உணர்வைத் தருகிறது. வாழ்க்கையில் நாம் மற்றவர் களுடைய அன்பை உணரும் போது அவர்களோடு தொடர்ந்திருக்க விரும்பு வோம்.

மத்தேயு 28:18,20 வசனங் களில் காணப்படும் பிரதான கட்டளை யில் அன்பு மிக முக்கிய காரணியாக இருக்கிறது. "*அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதி காரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத் திலே அவர்களுக்கு ஞானஸ் நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்.*"

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இதுவரை எதிர்கொண்ட அல்லது சந்தி த்த ஆசிரியர்களைப்பற்றி சிந்தித்துப் பாரு ங்கள். பண்பில் அமைதியும், மென் மையும் கொண்ட ஆசிரியர்களைத் தான் நமக்குப் பிடிக்கும். நடத்தப்படும் பாடங்கள் நமக்குப் புரியாதபோது மறுபுடியும் ஆசிரியர்களிடம் அதைக் கேட்கும்போது கோபப்படாமல் நமக்கு விளக்கும் ஆசிரியர்களை நாம் நல்லா சிரியர்கள் என்று மதிக்கிறோம். போதிக் கும்போது அதை அன்பு டன் செய்வது அவசியமாகிறது. நாம் பலவந்தமாக மற்றவர்களிடம் போய் நீங்கள் நம்பு கிறவைகள் தவறு என்றோ உங்கள் இருதயம் கடினமானதென்றோ சொல்ல முடியாது. அப்படிச் செய்தால் அவர் களை கிறிஸ்துவத்திற்கு கொண்டு வரும் பணியில் நமக்குத் தோல்வியே ஏற்பாட்டு. உங்களை யாரோ ஒருவர் இப்படி நடத்தினால் நீங்கள் எப்படி உணர்வீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நாம் நம்மை மற்றவர்களு டைய இடத்தில் வைத்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய வாழ்க் கையை நாம் காணும்போது அவர் களுக்கு எவ்விதமாக போதனையைக் கொடுக்கலாம் என்று நம் மனதை தயார்படுத்த அது உதவியாயிருக்கும். நம்மை அவர்களுடைய இடத்தில் வைத்துப் பார்கும்போது அது நம் இருதயத்தையும், மனதையும் திறக்கும். மற்றவர்களுடைய நிலைக்கேற்ப நாம் இறங்கி காரியங்களைச் செய்யும் போது அது நாம் முன்பாகப் போய் அவர் களுக்கு போதிக்க நம்மைத் தூண்ட வேண்டும். நம் இருதயங்களில் ஆழமான அன்பு இல்லையென்றால் நாம் சந்திப்பவர்களிடத்தில் நமக்கு வெளிப்படைத்தன்மையோ, அக்கறை யோ கரிசனையோ இருக்காது.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாக நாம் எண்ணிக்கையைப் பற்றிக் கவலை ப்படாமல் நம் வித்தியாசத்தைக்காட்ட வேண்டும். நாம் வெளியே சென்று போதிப்பதற்கு முன்பாக நம் இருதயத் தையும், மனதையும் சோதித்தறிய

வேண்டும். நம் வாழ்க்கையில் கிறிஸ்துவின் அன்பை கொண்டிருக்க வேண்டும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் (யோவான் 13:34,35).

நாம் சந்திக்கும் எல்லோருக்கும் போதிக்கத்தக்க உண்மையான விருப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு நாம் போதித்து அவர்களை ஆதாயப்படுத்துவதற்கான ஒரே வழி இது தான்.

நாம் சந்திக்கும் எல்லோருக்கும் நாம் காட்டும் ஒளி அன்பாயிருப்பதாக. நாம் சந்திக்கும் ஒவ்வொரு புதிய நபரும் தேவன் மீது நாம் கொண்டிருக்கும் அன்பையும்,அர்பணிப்பையும் நிரூபிப்பதற்கு அவரால் நமக்கு தரப்படும் வாய்ப்பாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் பள்ளிக்குச் செல்லும் நண்பர்களை சந்திக்கிறோம். அதே போல் மளிகைக்கடையில், அண்டை வீட்டில் சிலரை நாம் சந்திக்கிறோம். நாம் அவர்களோடு உரையாடும்போது உண்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனாயிருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஏன் குறிப்பிடக் கூடாது? நாம் இவ்வுலகில் வாழும் நாட்களில் நாம் சந்திக்கும் எல்லோரிடமும் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள ஒரு போதும் நாம் வெட்கப்பட வேண்டாம். தேவனுடைய வார்த்தை கட்டளையிடுகிறபடி நாம் புறப்பட்டுப் போய் பாவத்தில் மூழ்கிப் போயிருக்கிற இவ்வுலகத்திற்கு போதித்து அதை மீட்டுக் கொள்வோமாக.

## உங்கள் சபை எப்படி?

**கொடுக்கக்கூடிய சபைதான் வாழ்கிறது**

**அர்ப்பணிப்புள்ள சபைதான் வளர்கிறது**

**தாராளமான சபைதான் பெருகுகிறது**

**செலவழிக்கக்கூடிய சபைதான் ஜெயிக்கிறது**

**இறுக்கிப் பிடிக்கும் சபை கண்ணீர் விடுகிறது**

# கிறிஸ்தவ குடும்பத்தை கட்டுதல்...

## Building Christian Home

### *B.B. Choate*

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக்கப் பட்ட ஸ்தாபனம் தான் குடும்பம் என்பது (ஆதி. 2:8-25). குடும்பம் தன் காரியத்தில் தவறும் போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைய சமுதாயமானது, மிகவும் பலவீனமான, பிரயோஜனமற்ற, முறிந்து போன, உடைந்து போன குடும்பங்களை உள்ளடக்கியது.



ஆதியிலிருந்தே ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழ வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருந்தார். "அதெப்படியென்றால் ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத் தினின்று விடுதலையாயிருக்கிறாள் " (ரோமர் 7:2) வீடு, குடும்பம் ஆகிய இரண்டுமே, பிதா, குமாரன் ஆகிய இருவருக்கும் மிகவும் முக்கியமாகப் பட்டது. " இப்படியிருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்ககடவன்" (மத். 19:6).

குடும்பத்திற்குள்ளாகத்தான் ஒரு கணவனும், மனைவியும் அன்பை பெற்றுக்கொள்கின்றனர். ஒரு கூட்டாளித்தனத்தையும், தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்ளும் தன்மையையும் (1 கொரி. 7:2-5) பெற்றுக்கொள்கின்றனர். பிள்ளைகளை இந்த உலகிற்கு கொண்டு வரவும், அவர்கள் குடும்பத்தில் அப்பா, அம்மாவுடன் வளரவும் தேவன் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், இன்றைக்கு குடும்பங்கள் சாத்தானால் தாக்கப்பட்டு இருக்கிறது. சாத்தானோடு இருக்கும் போராட்டத்தில், நம் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் நாம் பாடுபட வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் என்பது "ஒப்புக்கொடுத்தல்" என்ற கல்லின் மேல் கட்டப்படவேண்டும். முதலாவது, கணவனும், மனைவியும் தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். (1 கொரி. 15:1-4; மாற்கு 16:16) அத்தோடு கூட, ஒருவருக் கொருவர் ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும். ஒரு வல்லமையான, கிறிஸ்தவக் குடும்பத்தைக் கட்ட குடும்பத்தின் ஒவ்வொருவர் நலனுக்காகவும், மகிழ்ச்சிக் காகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் மிகவும் அவசியம். ஒரு பலமுள்ள குடும்பத்தைக்கட்ட தன்னலமில்லாமல் நீ உன் நேரத்தையும், உன் பலத்தையும், உன் உடைமைகளையும் அத்தோடு உன்னையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடுத்தலுக்கு விரோதி சுயநலம்.

தேவனுக்கு சேவை செய்வதின் மூலம் குடும்பங்கள் கட்டப்பட வேண்டும். தேவனுடைய சபையின் ஆராதனையில் தவறாமல் பங்கு கொள்வது கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு மிக அவசியமானது. " சபைக்கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் ". (எபி. 10:25) ஓர் ஆராதனையையோ, ஒரு வேத பாட வகுப்பையோ அசட்டை செய்து கலந்து கொள்ளாமல் இருப்பது கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வழிவகுத்து விடும். ஒரு குடும்பத்தை கட்டுவதில் ஜெபமும், வேத வாசிப்பும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், தேவன் 1. நித்தியமானவர் (சங். 90:2) 2. எல்லாம் வல்லவர் (ஆதி. 1:3), 3. நல்லவர் (யாக். 1:17) 4. பரிசுத்தமுள்ளவர் (1பேதுரு 1:16). 5. எங்கும் வியாபித்துள்ளவர் (சங். 139) முதல் முதலாக குடும்பத்தை உண்டாக்கின அந்த நித்திய தேவனை ஆராதிக்காமல், ஒரு மகிழ்ச்சியுள்ள பலமுள்ள வெற்றியுள்ள குடும்பங்கள் கட்டப்படவே முடியாது.

ஒருவரையொருவர் மெச்சிக் கொள்ளுதல் என்ற கல்லின் மீது கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டவேண்டும். மனித குலம் எதிர்பார்ப்பதில் மிகவும் தலையானது யாதெனில் பிறரிடம் மெச்சுதலைப் பெற்றுக் கொள்வது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் இந்த எதிர்பார்ப்பு பொதுவானது. நம்முடைய இலட்சியமே, நம்மைச் சார்ந்தவர்கள், குழந்தைகள், பெற்றோர் இவர்களை மெச்சுதலாக இருக்க வேண்டுமென்பதே. " ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம் ". (மத். 7:12) மற்றவர்களை மெச்சுதல் என்பது, எளிமையான இந்த தங்கச் சட்டத்தைப் படித்து செயல்படுத்துவதாகும். இது செய்யப்படவும் வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பினால் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலும் முக்கியமாக காணப்பட வேண்டியது இந்த அன்பு என்பதுதான். ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4:32) " மன உருக்கம் " என்பது முக்கியமாக

வலியுறுத்தப்படுகிறது. ஒருவர் சாந்தம், அமைதி, பாதுகாப்பு, புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களுடன் இருந்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தை நன்றாக கட்டு வார்கள். புருஷர்கள் குறிப்பாக முரட்டுத்தனத்தை தவிர்க்க வேண்டும். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள் அவர்கள் மேல் கசந்து கொள்ளா திருங்கள் (கொலோ. 3:19) " இரக்கம் " "மனதுருக்கம்" ஆகிய இரண்டு குணாங் களும் குடும்பத்தைப் பலமாக கட்டத் தேவைப்படுபவை.

**கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டாயமாக செய்ய வேண்டியது**


1. ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.
2. ஒருவர் பேச்சுக்கு ஒருவர் மரியாதை கொடுக்க வேண்டும்.
3. ஒருவரில் ஒருவர் அன்பு கூர வேண்டும்.
4. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இருப்பதில் அதிக நேரத்தை செலவு செய்ய வேண்டும்.
5. குடும்பத்திற்காகவும், தேவனுக்காகவும் வல்லமையாக ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.
6. அன்பாகவும், மனதுருக்கமாகவும் இருக்க வேண்டும்.
7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும்.
8. ஒருவரையொருவரை மெச்சிக்கொள்ள வேண்டும்.
9. ஒருவர் சொல்வதை மற்றவர் கவனிக்க வேண்டும்.
10. மற்ற குடும்பங்கள் பரலோகம் செல்ல உதவி செய்ய வேண்டும்.

விசுவாசமுள்ள குடும்பங்கள்
வலிமையான சபைகளைக் கட்ட உதவ முடியும்.

## ஞானஸ்நானத்திற்குப் பின்பு

- புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வோம் (கொலோ 3:10)
- புது சிருஷ்டியாயிருப்போம் (2கொரி 5:17)
- இயேசுவின் புதிதான கட்டளையைக் கைக்கொள்வோம் (யோவான் 13:34)
- நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாவோம் (எபேசியர் 4:23)
- புதிய நாமத்தால் அழைக்கப்படுவோம் (அப். 11:26)
- இயேசுவின் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நடப்போம் (எபி. 10:19)


## சத்திய வழி




- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் - 560 084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- தமிழன் TV : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 - 6:30 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் :
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு - 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை




- பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா
- தமிழன் TV : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ்/English )
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை மற்றும் கைப்பிரதிகள்
- English Quaterly Magazine : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- J.C. School of Evangelism : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள் (Tracts)** வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம் : 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா : 92442 04420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 94435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ....................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

**கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி**


**E.Z.S. ராஜநாயகம்**

" சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ______________________________